MADRAS ACT NO 111 OF 1895.

சென்னபட்டணம்

பரம்பரையான கிராம உத்தியோகங்களைக் குறித்த

1895-ம் வருஷத்து 3 வது ஆக்டும்,

AND

MADRAS ACT NO. II OF 1894.

வெருக்கேயுரிய பூஸ்திதிகளிலுள்ள கிராம உத்தியோகங்

களைப்பற்றிய சென்னபட்டணம்

1894 -ம் வருஷத்து 2 வது ஆக்டும்

அவைகளைச்சேர்ந்த விதிகளுடன்

லா பப்ளிஷர்

ஆர். சுப்பிரமணிய அய்யர் அவர்களால்

பிரசுரிக்கப்பட்டது.

மதுகரவேணி விலாசம் புஸ்தகசாலை,

வேப்பேரி போஸ்டு—மதருஸ்.

M. V. PRESS, VEPERY—MADRAS.

Price Rs. 1-0-0 Postage Extra

MADRAS ACT NO III OF 1895.

சென்னபட்டணம்

பரம்பரையான கிராம உத்தியோகங்களைக் குறித்த

1895-ம் வருஷத்து 3 வது ஆக்டும்,

AND

MADRAS ACT NO. II OF 1894

ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளிலுள்ள கிராம உத்தியோகங்களைப்பற்றிய சென்னபட்டணம்.

1894-ம் வருஷத்து 2 வது ஆக்டும்

(அவைகளைச்சேர்ந்த விதிகளுடன்)

லா பப்ளிஷர்.

R. சுப்பிரமணிய அய்யர் அவர்களால்

பிரசுரிக்கப்பட்டது.

மதுகரவேணி விலாசம் புஸ்தகசாலை,

வேப்பேரி—மதராஸ்.

M. V. PRESS, VEPERY—MADRAS.

விலை ரூபா. 1—0—0. தபால் கூலி வேறு.

அட்டவணை.

1895-ம் வருஷத்து 3-வது பரம்பரையான கிராம உத்தியோக ஆக்ட்

பீடிகை.

பிரிவுகள்.

1. பெயரும் வியாபகமும்.
2. (1) ரத்து
(2) 1854-ம் வருஷத்து 24-வது ஆக்ட் திருத்தம்.
(3) 1894-ம் வருஷத்து 2-வது சென்னப்பட்டணம் ஆக்ட் திருத்தம்.
3. ஆக்ட் பிரயோகப்படுகிற கிராம உத்தியோக வகுப்புகள்.
4. அர்த்தம்.
5. சில உத்தியோகங்களுக்குத் துரைத்தனத்தாரால் ஏற்படுத்தப்பட்ட சன்மானங்கள் பராதீனஞ் செய்யப்பட தக்கவைகளுமல்ல, ஜப்திசெய்வதற்குள்ளாகத் தக்கவைகளுமல்ல
6. (1) கிராமங்களைத் தொகுக்கலாம் அல்லது பிரிக்கலாம்.
(கிராமங்களை) தொகுப்பதனாலும் பிரிப்பதனாலும் கிராம உத்தியோகங்கள் இன்னதாகும்.
(2) கிராம உத்தியோகங்களைக் குறைத்து விடுவது.
7. (1) கவர்ன்மெண்ட் கிராமங்களிலும் ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளிலும் கிராம உத்தியோகஸ்தர்களின் மேல் கலெக்டருக்கு அதிகாரம்.
விலக்கு.
(2) கவர்ன்மெண்ட் கிராமங்களில் கிராம உத்தியோகஸ்தர்கள்மேல் தாசில்தாருக்கும் டெப்யுட்டி தாசில்தாருக்குமுள்ள அதிகாரம்.

பிரிவுகள்.

8. ஒருவருக்கேயுரிய கிராமங்களில் கிராம உத்தியோகஸ்தர்கள் மேல் பூஸ்திதிக்குடையவருக்கு அதிகாரம்.
9. ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளில் சில உத்தியோகஸ்தர்களின் மேல் கலெக்டருக்குள்ள அதிகாரத்திற்கு வரையறை
10. கவர்ன்மெண்ட் கிராமங்களிலே சில உத்தியோகங்களுக்கு நேமகஞ் செய்கையில் அநுசரிக்க வேண்டிய விதிகள்.
(1) எல்லா விஷயங்களிலும் வேண்டியிருக்கிற பொதுவான யோக்கியதாம்சங்கள்.
(2) ஜேஷ்ட புத்திர சுதந்தரத்தை அநுசரிக்கவேண்டும்.
(3) சில விஷயங்களிலே நேரான வார்ஸ் தவிர வேறே நபரை நியமிக்கலாம்.
(4) சில விஷயங்களிலே வார்ஸ் சிறிது காலம் வரையில் யோக்கியதையற்றிருப்பது.
(5) வார்ஸ் வயதுவராத மைனராயிருந்தால் செய்யவேண்டியது இன்னது.
(6) ராஜிநாமா கொடுத்ததனலாவது வேலையிலிருந்து நீக்கிவிடப்பட்டதனலாவது அப்புறப்படுத்தப்பட்டதனலாவது சிறிது காலம் வரையில் வேலையிலிருந்து தள்ளிவைக்கப்பட்டதனலாவது நேரிடும் காலிக்குப் பத்தி செய்கிற விதம்.

பிரிவுகள்.

11. ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளிலே சில உத்தியோகங்களுக்கு நேமகம் செய்கையில் அநுசரிக்கவேண்டிய விதிகள்.
(1) எல்லா விஷயங்களிலும் வேண்டியிருக்கிற பொதுவான யோக்கியதாபசங்கள்.
(2) பின்வருகிற பாத்தியதையைப்பற்றிய சட்டம் அல்லது வழக்கத்தை அநுசரிக்க வேண்டும்.
(3) சில விஷயங்களிலே நோரான வார்ஸ் தவிர வேறே நபரை நியமிக்கலாம்.
(4) வார்ஸ் வயதுவராத மைனராயிருந்தால் செய்யவேண்டியது இன்னது.

12. கிராமத்தொழிலாளிகளின் விஷயத்திலே பின்வருகிற பாத்தியதையைப்பற்றிய சட்டம் அல்லது வழக்கத்தை அனுசரிக்கவேண்டும்.

13. (1) உத்தியோகங்களுக்காகவும் சன்மானங்களை வசூல் செய்வதற்காகவும் வார்ஸாக ரெஜிஸ்டர் செய்வதற்காகவும் கொண்டுவரப்படும் வியாஜியங்களைக் குறித்த நிபந்தனைகள்.
(i) பாத்தியதை முதலியதை நிர்ணயிப்பதற்கான டிக்ரியின் பொருட்டு வியாஜ்ஜியம் கொண்டுபோகக்கூடாது.
(ii) சன்மானம் இப்படிப்பட்டதென்பதைப்பற்றி விவாதம் நேரிடுகிற விஷயத்தில் இன்னதுசெய்வது.
(iii) தாவாதாரர் நேமகத்திற்கு யோக்கியதை யற்றவராகும் போது ப்ளெய்ன்டைச் சுருக்கவகையாய் தள்ளிவிடுவது.

14. (1) இன்னகாலவரையறைக்குள்ளாக வியாஜ்ஜியங்கள் கொண்டுவரலாம்.
வயதுவாராத விஷயத்தில் காலநிர்ணயம்.
(2) இன்னகாலவரையறைக்குள் டிக்ரி அல்லது உத்தரவை நிறைவேற்றுவதற்காக விண்ணப்பஞ் செய்துகொள்ளலாம்.
(3) 1831 ம் ளுத்து 6-வது ரெகுலேஷன்படி செய்யப்பட்ட டிக்ரிகளையும் உத்தரவுகளையும் நிறைவேற்றுவது.
(4) அப்பீல் செய்து கொள்ளப்படுமாகில் காலநிர்ணயம்

15. வியாஜ்ஜியங்களை மாற்றுவதைக் குறித்து டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்கு அதிகாரம்.

16. (1) வியாஜ்ஜியங்களைப்பரிசிலனை செய்கையில் அநுசரிக்கவேண்டிய முறை.
(i) விசாரணைத்தேதியை நிர்ணயிக்க வேண்டியதும், சட்சிக்காரர்கள் சொல்லிக்கொள்வதைக் கேட்க வேண்டியதும்.
(ii) சாட்சிகளை ஹாஜர்செய்விக்கலாம் அல்லது ஸம்மன் பண்ணி வரவழைக்கலாம்.
(iii) நடவடிக்கைகளை எழுதிவைப்பது.
(2) ஸம்மன்படி நடக்கவேண்டிய கடமை.

17. டிக்ரிகளில் செலவுக்காக ஏற்பாடு செய்யலாம்; ரெவின்யுபோர்டாரால் செய்யப்படும் விதிகளின்படி டிக்ரிகளை நிறைவேற்ற வேண்டும்.

18. (1) சில விஷயங்களில் கலெக்டர் சட்டத்தைப்பற்றிய கேள்வியை ரெவின்யு போர்டாருடைய தீர்மானத்திற்கு அனுப்பலாம்.
(2) அந்தப்படி அபிப்பிராயத்திற்கு அனுப்புகிற விஷயத்தில் அநுசரிக்கவேண்டிய முறைமை.
ரெவின்யுபோர்டாருடைய தீர்மானம் சரியல்லவென்று ஆட்சேபிக்கக்கூடாது.

19. இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கும் போது முடிவாகாமலிருக்கிற

1894-ம்ஹுத்து 2-வது ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராமஊழிய சட்டம்.

1-ம் அத்தியாயம்.

பீடிகா விதிகள்.

2-ம் அத்தியாயம்

கிராம சிப்பந்திகளும், அவர்கள் இத்தனை பெயர் இருக்கவேண்டுமென்பதும், அவர்களின் நேமகமும் மேல் விசாரணையும்.

பிரிவுகள்.

திலும் வைத்தாதரிக்கவேண்டு மென்பது.

8. கிராம உத்தியோகங்களில் நேரி டுகிற காலிகளைக்குறித்த பூஸ்தி திக்குடையவர் ரிபோர்ட் செய்ய வேண்டுமென்பது.

9. பூஸ்திதிக்குடையவர் நூதனமாய் உத்தியோகஸ்தரை நியமித்து அந்த சங்கதியைக் குறித்து டிவி ஷன் உத்தியோகஸ்தருக்கு ரி போர்ட் செய்ய வேண்டுமென் பது.

10. நேமகங்கள் செய்யும்போது அனு சரிக்கவேண்டிய விதிகளை.

(1) எல்லா விஷயங்களிலும் வே ண்டியிருக்கிற பொதுவான யோ க்கியதாமசங்கள்.

(2) பரம்பரையான உத்தியோக விஷயத்தில் ஜேஷ்ட புத்திர சுதந்தரத்தை அனுசரிக்கவேண்டு மென்பது.

(3) சில விஷயங்களிலே நேரான வாரிஸுதவிர வேறே நபரை நியமிக்கலாம்.

11. (1) சில விஷயங்களில் விசா ரணை நடத்திய பிறகு வேறொரு வரை நியமிக்கவேண்டுமென்று பூஸ்திதிக்குடையவருக்கு டிவி ஷன உத்தியோகஸ்தர் உத்தரவு செய்யலாம.

(2) சிலவிஷயங்களில டிவிஷன் உத்தியோகஸ்தர் தமே நேமகம் செய்யலாம்.

(3) அப்பீல் செய்து கொள்ள லாமென்பது.

12. சில சந்தர்ப்பங்களிலே கடைசி யாக உத்தியோகத்தை வகித் திருந்தவருடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரின் நேமகம் கூடா தென்று தடுக்கலாம்.

பிரிவுகள்.

13. கடைசியாக உத்தியோகத்தை வகித்திருந்தவருடைய வாரி ஸு மைனராயிருந்தால் அனு சரிக்கவேண்டிய நடவடிக்கை.

14. உத்தியோகஸ்தர் ராஜிநாமா கொடுத்தாலும் தள்ளிவிடப்பட் டாலும் நீக்கப்பட்டாலும் சிறிது காலமவலையில்நீக்கிவைக்கப்பட் டாலும் சாதாரணமாய் அனுசரி க்கவேண்டிய நடவடிக்கைமுறை

15. (1) தொகுக்கப்பட்ட கிராம ங்களிலும் பிரிக்கப்பட்ட கிராம ங்களிலும் இன்னவிதமாய் நேம கங்கள் செய்யவேண்டு மென் பது.

(2) சிப்பந்தி குறைக்கப்படு கிற விஷயத்தில் யாரை வைத்துக் கொண்டிருக்கவேண்டு மென் பது.

(3) சில விஷயங்களில் பூஸ்திதி க்குடையவருடைய அதிகாரங் களை டிவிஷன் உத்தியோகஸ்தர் செலுத்தலாமென்பது.

16. (1) இது விஷயத்தில் பிரத்தி யேகமாய் அதிகாரங் கொடுக் கப்பெற்றால் பூஸ்திதிக்குடைய வர் அப்பீல் செய்து கொள்வதற் குட்பட்டுக் கிராம உத்தியோகஸ் தர்களை அபராதம் விதித்துத் தண்டிக்கலாம்.

(2) கலெக்டரும் டிவிஷன் உத் தியோகஸ்தரும் கிராம உத்தி யோகஸ்தர்களுக்கும் அபராதம் வி திக்கலாம் அவர்களைச் சிறிதுகா லம் வரையில் நீக்கிவைக்கலாம் தள்ளிவிடலாம் அல்லது நீக்க லாம்.

(3) (2) குறிப்பிட்ட உட்பிரிவி ன்படி செய்யப்பட்ட உத்தரவுக ளின்மேல் அப்பீல்.

3-ம் அத்தியாயம்.

கிராமவூழிய (ஸெஸ்) வரியும், அதன் தொகையும் பங்கிடும் அதை விதித்து வசூல்செய்யும் விதமும், அதைச்சேர்ந்த விஷயங்களும்.

பிரிவுகள்.

17. ச்விட்ரெண்ட் விதித்துக் கிராம ஊழிய இனுங்களை கவர்ன்மெண்டார் ஊழிய நிபந்தனையினின்று நிவர்த்திக்கலாம்.

ஊழிய நிபந்தனையினின்று நிவர்த்தித்த விஷயம் இன்ன தேதி முதல் செலாவணியாக வேண்டுமென்பது.

விலக்குகள்.

18. ஊழிய நிபந்தனையினின்று நிவர்த்திக்கப்பட்ட இனுங்களுக்கு பூஸ்திதிக்குடையவர் ச்விட்ரெண்ட் வசூல் செய்வது.

வசூல்செய்வதற்குப் பிடிக்கும் செலவுக்காக பூஸ்திதிக்குடையவருக்குப் பிரதிபலன்.

பாக்கி வசூல்செய்யும் விதம்.

19. ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராம ஊழிய வரி.

விகிதத்தை இன்னபடி நிர்ணயிக்கவேண்டுமென்பது.

20. நிலங்களின் வருஷவாரி குத்தகை மதிப்பை (கிராமவூழிய) வரியின் காரியங்களுக்காக இன்னபடி கணக்கிடவேண்டுமென்பது.

(i) குத்தகைதாரர்கள் அனுபவிக்கிற நிலங்கள் விஷயத்தில்.

பூஸ்திதிக்குடையவராலாகிலும் குத்தகையில்லாமல் ஜாரியாகவாவது சொற்பமான குத்தகைக்காகவாவது அவரிடத்திலிருந்து பெற்றுகிலும் அனுபவிக்கப்படுகிற நிலங்கள் விஷயத்தில்.

(ii) குத்தகைத்தொகை மாசூல் ரூபமாகச்செலுத்தப்படுகிற விஷயத்தில்

(iii) கவர்ன்மெண்டாரிடத்திலிருந்து பெற்றதைப்பற்றி விருந்துவரும் நிலங்களின் விஷயத்திலும் ஊழிய நிபந்தனையினின்று நிவர்த்திக்கப்பட்ட கிராமவூழிய இனுங்களின் விஷயத்திலும்.

21. அனுபவிக்கப்பட்ட நிலங்களுக்கு ஜாபிதா வேண்டுமென்று கேட்டால் பூஸ்திதிக்குடையவர் சவதரிக்கவேண்டுமென்பது.

22. ஜாபிதா சவதரிக்கப்படாதபோது டிவிஷன் உத்தியோகஸ்தர் தாமே பூஸ்திதியின் குத்தகை மதிப்பை நிர்ணயிக்கலாம்.

23. டிவிஷன் உத்தியோகஸ்தர் செலுத்தப்பட்ட (கிராம ஊழிய) வரியை நிர்ணயிக்க வேண்டுமென்பதும் ஜாபிதாவைத் திருத்தலாமென்பதும்.

24. 22 வது 23 வது பிரிவுகளின்படி செய்யப்பட்ட உத்தரவுகளின் மேல் அப்பீல்.

25. பூஸ்திதியின் விஷயமாகச்சேர வேண்டியதாயிருக்கிற மொத்த (கிராம வூழிய) வரியை பூஸ்திதிக்குடையவர் செலுத்த வேண்டுமென்பது.

(i) பூஸ்திதிக்குடையவர் தம்முடைய குத்தகைதாரர்களிடத்திலிருந்து (கிராமவூழிய) வரியில் பாதியை வசூல் செய்யலாம்.

(ii) நீர்பாய்ச்சு வரியின்மேல்செலுத்த வேண்டிய (கிராம ஊழிய) வரியை சில விஷயங்களிலே குத்தகைதாரர்கள் செலுத்தவேண்டுமென்பது.

(iii) பூஸ்திதிக்குடையவர் சிலதொகைகள் சழிக்கப் படுவதற்குட்பட்டுச் சில்லறை இனுங்களுக்காகச் செலுத்தப்படவேண்டிய (கிராமவூ

பிரிவுகள்.

ழிய) வரிமுழுவதையும் வசூல் செய்யலாம்.

சில்லறை இனாம்தாரர் தம்முடைய குத்தகை தாரர்களிடத்திலிருந்து (கிராமவூழிய) வரியின் பாதியை வசூல் செய்யலாம்

(கிராமவூழிய) வரி பாக்கி முதலில் செத்தவேண்டிய செலவாயிருக்கவேண்டுமென்பது;

26. பூஸ்திதிக்குடையவராக நிலையான நிலத்தீர்வையை மேலேற்படும் (கிராம வூழிய) வரியில் பாதியை வஜாசெய்வது.

பிரிவுகள்.

குத்தகைதாரர்களிடத்திலிருந்து வசூல்செய்வதைப்பற்றி விலக்கு.

சில சந்தர்ப்பங்களில் நிலையாய் ஏற்பட்ட நிலத்தீர்வைக்கு அதிகமாகச்செலுத்துவது சட்ட சம்மதமாகுமென்பது.

(3) சில சந்தர்ப்பங்களில் நிலையாய் ஏற்பட்ட நிலத்தீர்வை குறைக்கப்படும்.

(4) சில விஷயங்களில் குத்தகைத் தொகையை உயர்த்தலாம் அல்லது குறைக்கலாம்.

4-ம் அத்தியாயம்.

கிராமவூழிய நிதியும், அதன் ஏற்பாடும் அதிலிருந்து சம்பளங்களைக் கொடுப்பதும்.

27. ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராமவூழிய நிதி

28. விளம்பரத்தில் பிரசுரிக்கப்படும் தேதிக்குப்பிறகு நிதியிலிருந்து கிராம உத்தியோகஸ்தர்களுடைய சம்பளங்களையும் வர்த்தனைகளையும் கொடுக்கவேண்டுமென்பது.

29 விளம்பரத்தில் பிரசுரிக்கப்படும் தேதிக்குப் பிறகு கிராம உத்தியோகஸ்தர்களின் விஷயமாகக் கட்டணம் முதலியவை வசூல் செய்யவுங் கூடாது கேட்கவுங் கூடாதென்பது.

கட்டண முதலியவைகளைக் கேட்டால் தண்டனை.

5-ம் அத்தியாயம்

பொது.

30. தண்டனைகள்

31. விதிகள் செய்ய அதிகாரம்

32. சில விஷயங்களில் ஸிவில் கோர்ட்டாருக்கு அதிகாரவரம்பு கிடையாதென்பது.

விலக்கு

33. சில விஷயங்களிலே ஜில்லாகலெக்டர்களுந் தசயதுகொள்ளப்பட்ட அபீல்களை ரெவினியுபோர்டார் பைசல் செய்வது.

1895 ம் வருஷத்து 3 வது ஆக்டின்படியான விதிகள்.

1894 ம் வருஷத்து 2 வது ஆக்டின்படியான விதிகள்.

ஜமாறுக்கள்—

கிராம உத்தியோகஸ்தர்களின் ஸ்பெஷல் டெஸ்ட் பரீட்சை விதிகள்.

ஸர்வே பள்ளிக்கூடங்களில் பயிற்சிபெறுகிற கர்ணங்களுக்குப் படி விவரம்.

MADRAS ACT No. III OF 1895.

சென்னப்பட்டணம் 1895-ம்ஹூ 3-வது ஆக்ட்.

ஆலோசனை சபையிலுள்ள சென்னபட்டணம் கவர்னரவர்களால் செய்யப்பட்ட இந்த ஆக்டானது 1895-ம்ஹு ஏப்ரல்மீ 8உ சிறப்புற்றோங்கிய கவர்னரவர்களாலும், ஜூலைமீ 1உ சிறப்புற்றோங்கிய ராஜப்பிரதிநிதியாகிய கவர்னர் ஜெனரலவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு, யாவர்க்கும் தெரியும்படி இதனால் பிரசித்தஞ்செய்யப்படுகிறது.

சென்னபட்டணம் 1831-ம்ஹூத்து 6-வது ரேகுலேஷனை ரத்துசெய்வதற்கும் வேறே காரியங்களுக்குமான ஆக்ட்.

பீடிகை.

சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியிலிருக்கிற பரம்பரையான சில கிராம உத்தியோகங்களுக்குப் பின் வருவதைப்பற்றியும், அந்த உத்தியோகங்களுக்காவது அவைகளோடு சேர்க்கப்பட்டிருக்கிற சன்மானங்களுக்காவது கொண்டுவரப்படுகிற தாவாக்களைப் பரிசீலனைசெய்து முடிவு பண்ணுவதைப் பற்றியும், அப்படிப்பட்ட உத்தியோகங்களை வகிக்க நபர்களை நியமிப்பதைப் பற்றியும், அந்த உத்தியோகங்கள் வகிக்கிறவர்களை விசாரணை செய்வதைப்பற்றியும், வேறே சில காரியங்களைப்பற்றியும் இன்னும் நன்றாய் நிபந்தனை ஏற்படுத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

பெயரும் வியாபகமும்.

1. (1) இந்த ஆக்டை சென்னபட்டணம் பரம்பரையான கிராம உத்தியோகங்களைப்பற்றிய 1895-ம் ஹூ ந்து ஆக்ட்டென்று சொல்லலாம்; மேலும், கவர்ன்மெண்டாரால் பிரசுரிக்கப்படும் தேதி முதல் இது வழங்கத்தொடங்கவேண்டும்.

(2) 5-வது பிரிவு சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸி முழுமைக்கும் பிரயோகப்படுகிறது; 1874-ம்ஹூத்து ஷெட்யூல் டிஸ்ட்ரிக்ட்டுகளாக்ட்டில் விவரிக்கப்பட்டிருக்கிற படிக்குள்ள ஷெட்யூலிற்கண்:—

டிஸ்ட்ரிக்ட்டுகள் நீங்கலாக ஷை ப்ரெஸிடென்ஸி முழுமைச்கும் இந்த ஆக்ட்டின் மற்றப்பாகம் பிரயோகப்படுகிறது.

ரத்து.

2. (1) சென்னபட்டணம் ரெகுலேஷன்களாகிய 1806-ம்ஞூத்து 2-வது ரெகுலேஷனும் 1831-ம்ஞூத்து 6-வது ரெகுலேஷனும் இதனுல் ரத்தாகின்றன; மேலும், இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கும்போதும் அதற்குப்பிறகும் 1802-ம்ஞூத்து 29-வது சென்னபட்டணம் ரெகுலேஷனச் சேர்ந்த எந்தபாகமும் நிலையாய்ப்பைசலாதியான ஒருவருக்கேபுரிய பூஸ்திதியாயிராத யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்திற்கும் பிரயோகப் பட்டுவருவது கூடாது.

1859-ம்ஞூத்து 24-வது ஆக்ட் திருத்தம்.

(2) (சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸிக்குட்பட்ட ராஜ்ஜியங்களுக்குள்ளிருக்கிற போலீஸைச்குறித்து இன்னும் நன்ருய் ஒழுங்கேற்படுத்துவதற்கான ஆக்ட்டாகிய) 1859-ம்ஞூத்து 24-வது ஆக்ட்டின் பீடிகையிலிருந்து, "கிராம போலீஸின் ஸ்திதியை விருத்திசெய்யவும்" என்று பொருள்படுகிற வார்த்தைகளை எடுத்துவிடவேண்டும்; மேலும், அதே ஆக்ட் 1-வது பிரிவில் "போலீஸ்" என்கிற வார்த்தையின் அர்த்தத்திற்குப் பர்த்தியாக அடியிற்கண்ட பாகத்தை அமைத்துக்கொள்ளவேண்டும், அதாவது :—

"போலீஸ் என்கிற வார்த்தையிலே இந்த ஆக்டின்படி நியமிக்கப்பட்ட எல்லா நபர்களும் அடங்குவார்கள்,"

1894-ம்ஞூத்து 2-வது சென்னபட்டணம் ஆக்ட் திருத்தம்.

(3) சென்னப்பட்டணத்து 1894-ம்ஞூத்திய ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராமவூழிய ஆக்ட் 4-வது பிரிவில் "பூஸ்திதி" என்கிற வார்த்தையின் அர்த்தத்தைச் சேர்ந்த (சி) குறிப்பிட்ட பாகத்திலே "பாளயமென்றும்" என்கிற வார்த்தைக்குப் பர்த்தியாக "பாளயம் அல்லது ஜாகீர் என்றும்" என்கிற வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; மேலும், அதே ஆக்ட் 15-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவிலே "வகித்திருந்தவர்களுக்குள்ளே" என்கிற வார்த்தைகளுச்குப் பர்த்தியாக "கடைசியாய் வகித்திருந்தவர்களுடைய குடும்பங்களுக்குள்ளே" என்கிற வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்,

ஆக்ட் பிரயோக ப்படுகிற கிராம உத்தியோக வகுப்புகள்.

3. இந்த ஆக்ட் அடிபிற்கண்ட கிராம உத்தியோக வகுப்புகளுக்குமாத்திரம் பிரயோகப்படவேண்டும். ஆனால், அவைகளுக்குச் சம்மானங்கள் ஏற்பாடாயிருக்கவேண்டும்:—

(1) சென்னபட்டணம் 1893-ம் வருஷத்துக் கிராம மேரைத்தீர்வை ஆக்ட் எவைகளுக்குப் பிரயோகப்பட்டிருக்கிறதோ அல்லது அதை எவைகளுக்குப் பிரயோகிக்கலாமோ அந்தப்பிரதேச விஸ்தீர்ணங்களிலுள்ள பரம்பரையான கிராம உத்தியோகங்களும்;

(2) சென்னபட்டணம் 1894-ம் வருஷத்து ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராம ஊழிய ஆக்ட் வியாபிக்கும்படி செய்யப்பட்டிருக்கிற பரம்பரையான கிராம உத்தியோகங்களும்;

(3) (i) கீழே (4) குறிப்பிட்ட வகுப்பிலடங்குகிற உத்தியோகங்களும் (ii) 1802-ம் வருஷத்து 29-வது சென்னப்பட்டணம் ரெகுலேஷன் எவ்விடத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கிறதோ அந்த ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளிலே கிராமக்கணக்கன் உத்தியோகமும் நீங்கலாக, ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளிலே மற்ற பரம்பரையான கிராம உத்தியோகங்களும்;

(4) கிராமத்தொழிலாளிகளின் பரம்பரையான உத்தியோகங்களும், அடிபிற்கண்டவர்களைப் போன்ற கிராம ஊழியக்காரர்களின் பரம்பரையான உத்தியோகங்களும். அவைகள் எவையென்றால்:—

(i) கிராமத் தச்சன்,
(ii) கிராமத் கருமான்,
(iii) கிராம அம்பட்டன்,
(iv) கிராம வண்ணான்,
(v) கிராமக் குயவன்,
(vi) கிராம ஜோசியன்,
(vii) கிராம புரோகிதர் அல்லது குரு.

அர்த்தம்.

4. இந்த ஆக்ட்டிலே, சங்கதியினாலாவது முன்பின் தொடர்ச்சியினாலாவது விரோதம் இருந்தாலொழிய:—

"சன்மானங்கள்" என்பது—துரைத்தனத்தாரால் யாதொரு உத்தியோக விஷயமாகவாவது அதனோடு சேர்த்தாவது கொடுக்கப் பட்டாகிலும் கொடுக்கப்பட்டு வருகிறதாகவாகிலுமுள்ள,—

(i) நிலங்களென்றும்,

(ii) நிலங்களின் விஷயமாகச் செலுத்தத்தக்க வருமானத் தின் பங்கிடுகளென்றும்,

(iii) ரொக்கரூபமாகவாவது விவசாய மாசூல்ரூபமாகவாவ துள்ள கட்டணங்களென்றும்,

(iv) ரொக்க சம்பளங்களென்றும் மற்றெல்லாவிதமான பிரதிபிர யோசனங்களென்றும் அர்த்தமாவது மன்றி, அந்த வார்த்தையில் ஷை நிலங்களும் பங்கிடுகளும் கட்டணங்களும் சம்பளங்களும் சன் மானங்களும் அடங்கும்.

"ஒருவருக்கேயுரிய பூஸ்திதி" என்பதும் "பூஸ்திதிக்குடைய வர்" என்பதும் - இந்த ஆக்ட்டினால் திருத்தப்பட்டபடிக்குள்ள சென்னபட்டணம் 1894-ம் ஞூத்து ஒருவருக்கேயுரிய பூஸ்திதிக ளின் கிராமவூழிய ஆக்ட்டில் அர்த்தங் கூறியிருக்கிறபடி பூஸ்திதி யென்றும் பூஸ்திதிக்குடையவரென்றும் முறையே அர்த்தமாகும்.

"கிராமம்" என்பது - கவர்ன்மெண்டாரால் கிராமமென்பதாக இப்போது ஒப்புக்கொள்ளப்பட்டாவது, கிராமமாயிருப்பதாகக் கவர் ன்மெண்டாரால் இனிமேல் நிர்ணயிக்கப்படுகிறதாகவாவதுள்ள யாதொரு பிரதேச விஸ்தீர்ணமென்று அர்த்தமாகும்.

சில உத்தியோ கங்களுக்குத் துரை த்தனத்தாரால் ஏற் படுத்தப்பட்ட சன் மானங்கள் பாராதீ னஞ்செய்யப் படத் தக்கவைகளுமல்ல, ஜப்தி செய்வதற்கு ள்ளாகத் தக்கவை களுமல்ல.

5. கிராம உத்தியோகங்கள் பரம்பரையானவைகளாயிருந்தா லுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி அவைகளின் சன் மானங்களும், 1874 - ம்ஞூத்து ஷெட்யூல் டிஸ் ட்ரிக்ட்டுகளாக்ட்டில் விவரிக்கப் பட்டிருக்கிறபடி ஷெட்யூலிற்கண்ட டிஸ்ட்ரிக்டுகளிலே அப்படிப் பட்ட எல்லாச்சன்மானங்களும், தீர்வை வசூல் செய்வதற்காவது ஒழுங்கைப் பாதுகாப்பதற்கா வது சம்பந்தப்பட்ட அலுவல்களைச்செய்வதற்காக சன்மானமாய்க் கொடுக்கப்பட்டாகிலும் கொடுக் கப்பட்டு வருகிறதாகவாகிலுமுள்ள இதர சன்மா னங்களும் - எப்படிப்பட்ட விதத்திலேனும் பரா

தீனத்திற்காவது கடன் முதலிய சிக்குச்சாவது உட்படத்தக்கவைக ளல்ல; மேலும், அப்படிப்பட்ட சன்மானங்களையாவது அவைகளின் யாதொரு பாகத்தையாவது ஜப்திசெய்யவோ அல்லது விற்பனைபண் ணவோ யாதொரு கோர்ட்டாருக்கு அதிகாரங்கிடையாது.

கிராமங்களைத் தொகுக்கலாம் அல்லது பிரிக்கலாம்

6. (1) சென்னபட்டணம் 1893-ம் வருஷத்து கிராம மேரைத் தீர்வை ஆக்ட் வழங்கிக் கொண்டிருக்கிற யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்திலே, 20-வது பிரிவின் படி இதுவிஷயமாகச் செய்யப்பட்ட விதிகளுக்குட் பட்டு ரெவினியு போர்டார்-நூதனமான ஒரே கிராமமாயமையும்படி எந்த, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கிராமங்களையாவது அவைகளைச்சேர்ந்த பாகங்களையாவது தொகுக்க லாம், அல்லது ஒன்றுய்ச்சேர்க்கலாம்; அல்லது, யாதொரு கிராமத் தை இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட கிராமங்களாகப் பிரிக்க லாம்; அதன்மேல், மேலே கண்டபடி தொகுக்கப்பட்டாவது ஒன் றுய்ச் சேர்க்கப்பட்டாவது பிரிக்கப்பட்டாவதிருக் கிற கிராமங்களிலாகிலும் கிராமங்கள் அல்லது கிராமத்தின் பாகங்களிலாகிலும் மேற்படி ஆக்ட்பிர யோகப்படுகிற சகல பரம்பரையான கிராம உத்தி யோகங்களும் எடுபட்டுப்போய், நூதன கிராமம் அல்லது கிராமங்களுக்காகப் பரம்பரையானவைக ளாகவே யிருக்கவேண்டிய நூதன உத்தியோகங்கள் ஏற்பாடாகவேண் டும். அப்படிப்பட்ட நூதன உத்தியோகங்களுக்கு நபர்களை ஏற்படுத் துகையில் கலெக்டரானவர்-எடுத்துவிடப்பட்ட உத்தியோகங்களைக் கடைசியாய் வகித்திருந்தவர்களுடைய குடும்பங்களுக்குள்ளே உத்த மமாய்த் தேர்ச்சியடைந்திருப்பவர்களாகத் தமக்குத் தோற்றுகிறவர் களைத் தெரிந்தெடுக்கவேண்டும்.

(கிராமங்களை) தொகுப்பதனாலும் பிரிப்பதனாலும் கிராம உத்தியோகங் கள் இன்னதாகும்.

கிராம உத்தியோகங்களைக் குறைத்து விடுவது.

(2) சென்னபட்டணம் 1893-ம் வருஷத்துக்கிராமமேரைத்தீர்வை ஆக்ட் செலாவணியாகிற யாதொரு கிராமத்தில் இரண்டு அல்லது பல கிராம உத்தியோகங்களிரு க்குமாகில், கவர்ன்மென்டாருடைய அங்கீகாரத் திற்குட்பட்டு ரெவினியுபோர்டார் அப்படிப்பட்ட கிராம உத்தியோகங்களின் சங்கியை குறைக்கப்பட வேண்டுமென்று உத்தரவு செய்யலாம், அதன்மேல், கலெக்டரானவர்-இனிமேல் அவ

கிய பிராத உத்தியோகஸ்தர்களுடைய ஊழியம் வேண்டியதில்லையென்று நிக்கிரகித்து, மிகுதியாயுள்ள உத்தியோகங்களைச்சேர்ந்த வேலைகளைச்செய்வதற்கு உத்தமமாய்த் தேர்ச்சியடைந் திருப்பவர்களாகத் தமக்குத் தோற்றுகிறவர்களை வைத்துக்கொள்ளவேண்டும்.

கவர்ன்மெண்ட் கிராமங்களிலும் ஒருவருக்கே யுரிய பூஸ்திதிகளிலும் கிராம உத்தியோகஸ்தர்களின்மேல் கலெக்ட்டருக்கு அதிகாரம்.

7. (1) துர்நடத்தை நடந்தாலும் வேலையை அசட்டை பண்ணினாலும் அசக்தராயிருந்தாலும் கிராமத்தில் வசிக்காவிட்டாலும் வேறே போதுமான யாதொரு காரணமிருந்தாலும் கலெக்ட்டர் தாமேயாவது பிராது செய்யப்படுவதன் மேலாவது விசாரணைபண்ணி 3-வது பிரிவில் (1) குறிப்பிட்ட வகுப்பிலடங்குகிற உத்தியோகங்களில் யாதொன்றை வகித்துக் கொண்டிருப்பவருக்கு அபராதம் விதிக்கலாம், அல்லது அவரை வேலையிலிருந்து சிறிது காலம் வரையில் தள்ளிவைக்கலாம், அல்லது நீக்கிவிடலாம், அல்லது அப்புறப்படுத்தலாம்; மேலும், மேற்படி பிரிவிலே (3) குறிப்பிட்ட வகுப்பிலடங்குகிற உத்தியோகங்களில் யாதொன்றை வகித்துக் கொண்டிருப்பவரை வேலையிலிருந்து சிறிதுகாலம் வரையில் தள்ளிவைக்கலாம், அல்லது நீக்கிவிடலாம், அல்லது அப்புறப்படுத்தலாம். அன்றியும், கலெக்ட்டரானவர் அந்தப்படி செய்யத் தமக்குள்ள நியாயங்களை யெழுதிவைத்து அதற்கு ஒருநகலை, அது விஷயத்தில் சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகஸ்தருக்குக் கொடுக்கவேண்டும்.

விலக்கு.

ஆனால், கிராமப் பெரியதனக்காரராகவுமிருக்கிற கிராம முன்சீப் சென்னபட்டணம் 1889-ம்௵த்துக் கிராமக் கோர்ட்டுகளாக்ட்டின்படி வேலையிலிருந்து சிறிது காலம் வரையில் தள்ளிவைக்கப்பட்டாலும் அப்புறப்படுத்தப்பட்டாலும், அவர் கிராமப் பெரியதன உத்தியோகத்திலிருந்தும் அவ்வாறே சிறிது காலம் வரையில் தள்ளியும் அப்புறப்படுத்தியும் வைக்கப்பட்டவராவர்.

கவர்ன்மெண்ட் கிராமங்களில் கிரா

(2) 3-வது பிரிவிலே (1) குறிப்பிட்ட வகுப்பிலடங்குகிற உத்தியோகங்களில் யாதொன்றை வகித்துக்கொண்டிருப்பவருக்கு, (1) குறிப்பிட்ட உட்பிரிவிலே குறிக்

கப்பட்ட காரணங்களில் எதன் பொருட்டாவது, ரெவினியுபோர்டார் பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவைக்கொண்டு நிர்ணயிக்கும் அளவுக்குத் தாமேயாவது பிராது செய்யப்படுவதன் மேலாவது தாஸில்தார் அல்லது டெப்புட்டி தாஸில்தாரர் விசாரணைபண்ணி அபராதம் விதிக்கலாம். நியாயங்களை யெழுதிவைப்பதையும், நகல்கள் சவதரிப்பதையுங்குறித்து (1) குறிப்பிட்ட உட்பிரிவின் நிபந்தனைகள் அந்த உட்பிரிவின்படி நடத்தப்பட்ட நடவடிக்கைகளுக்குப் பிரயோகப்படவேண்டும்.

ம உத்தியோகஸ்தர்கள்மேல் தாஸில்தாரருக்கும் டெப்யுட்டி தாஸில்தாரருக்குமுள்ள அதிகாரம்.

8. கிராமக் கணக்கன், கிராமப்பெரியதனக்காரன், கிராமக்காவற்காரன் அல்லது போலீஸ் உத்தியோகஸ்தன் நீங்கலாக 3-வது பிரிவில் (3) குறிப்பிட்ட வகுப்பிலடங்குகிற உத்தியோகங்களில் ஒருவருக்கேயுரிய யாதொரு பூஸ்திதியிலே யாதொரு உத்தியோகத்தை வகித்திருப்பவர் துர்நடத்தை நடந்தாலும் வேலையை அசட்டை பண்ணினாலும் அசக்தராயிருந்தாலும் கிராமத்தில் வசிக்காவிட்டாலும் வேறே போதுமான யாதொரு காரணமிருந்தாலும் அந்த பூஸ்திதிக்குடையவர் தாமேயாவது பிராது செய்யப்படுவதன் மேலாவது விசாரணைபண்ணி அவரை வேலையிலிருந்து சிறிது காலம் வரையில் தள்ளிவைககலாம், அல்லது நீக்கிவிடலாம், அல்லது அப்புறப்படுத்தலாம்; மேலும், அந்த பூஸ்திதிச்குடையவர் அந்தப்படிசெய்யத் தமக்குள்ள நியாயங்களை யெழுதிவைத்து அதற்கு ஒரு நகலை, அது விஷயத்தில் சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகஸ்தருக்குக் கொடுக்கவேண்டும்.

ஒருவருக்கேயுரிய கிராமங்களில் கிராம உத்தியோகஸ்தர்கள்மேல் பூஸ்திதிக் குடையவருக்கு அதிகாரம்.

9. கிராமக்கணக்கன், கிராமப்பெரியதனக்காரன், கிராமக்காவற்காரன் அல்லது போலீஸ் உத்தியோகஸ்தன் ஆகிய இவர்களுடைய உத்தியோகங்கள் நீங்கலாக 3-வது பிரிவில் (3) குறிப்பிட்ட வகுப்பி லடங்குகிற கிராம உத்தியோகங்களை வகித்திருப்பவர்களின் மேல் 7-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவினால் கலெக்ட்டருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களை, அதுவிஷயத்தில் சம்பந்தப்பட்ட பூஸ்தி

ஒருவருக்கே யுரிய பூஸ்திதிகளில்சில உத்தியோகஸ்தர்களின்மேல் கலெக்டருக்குள்ள அதிகாரத்திற்கு வரையறை.

திக் குடையவர் 8-வது பிரிவினுல் தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களைத் தகுந்தவிதமாகச் செலுத்த அசட்டை பண்ணினுரென்று, எழுதிவைக்கவேண்டிய காரணங்களினுல், கலெக்டருக்குத் திருப்தியானுலன்றி மற்றப்படி, செலுத்துவது கூடாது.

கவர்ன்மெண்ட் கிராமங்களிலே சில உத்தியோகங்களுக்கு நேமகஞ்செய்கையில் அனுசரிக்கவேண்டிய விதிகள்.

10. 3-வது பிரிவில் (1) குறிப்பிட்ட வகுப்பிலடங்குகிற கிராம உத்தியோகங்களிலெதிலாவது காலி நேரிடும்போது, அடியிற் கண்ட உட்பிரிவுகளிலுள்ள நிபந்தனைகளின்படி கலெக்டர் அந்தக் காலிக்குப் பர்த்திசெய்ய வேண்டும்.

எல்லா விஷயங்களிலும் வேண்டியிருக்கிற பொதுவான யோக்கியதாம்சங்கள்.

(1) எவரும்—

(a) ஆண்பாலராயிராவிட்டாலும்,

(b) வயது வந்த பருவம் அடையாவிட்டாலும்,

(c) உத்தியோகத்தின் அலுவல்களை நடத்துவதற்கான தேகதிடமும் மனேதிடமும் பெற்றிராவிட்டாலும்,

(d) 20-வது பிரிவின்படி செய்யப்பட்ட விதிகளைக்கொண்டு ரெவினியு போர்டாரால் பிரஸ்தாப உத்தியோகத்திற்கென்று நிர்ணயிக்கப்படும் வித்தியா விஷயமான பரீட்சைக்கேற்றபடி யோக்கியதை பெற்றிராவிட்டாலும்,

(e) உத்தியோகத்தை வகிக்க யோக்கியதை யற்றவரென்று கலெக்டர் அபிப்பிராயப்படும் விதமாக யாதொரு குற்றஞ் செய்ததாய் க்ரிமினல் கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டாலும்.

நேமகஞ்செய்யப்பட அர்ஹராகமாட்டார்.

ஜேஷ்ட புத்திர சுதந்தரத்தை அநுசரிக்கவேண்டும்.

(2) தென்னிந்தியாவில் பாகிக்கப்படத்தக்கவைகளல்லாத ஜமீன்தாரிகளுக்குப்பின் வருகிற பாத்தியதையைக் குறித்து ஏற்பட்டிருக்கிற ஜேஷ்டபுத்திர சுதந்தர சம்பந்தமான விதியின்படிக்கும் சாதாரண வழக்கத்தின்படிக்கும் பின் வருகிற பாத்தியதையானது ஒரே வார்ஸுக்குக் கிடைக்கவேண்டும்.

சிலவிஷயங்களிலே நேரான வார்ஸ்தவிர வேறே நபரை நியமிக்கலாம்.

(3) அடுத்த வார்ஸ் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யோக்கியதை பெற்றிராத விஷயத்திலே கலெக்டரானவர் அந்தப்பரம்பரையில் அவ்வாறு யோக்கியதைபெற்றிருக்கிற அடுத்த நபரை நியமிக்கவேண்டும்; அந்தப் பரம்பரையில் அப்படிப்பட்டவரெவரும் இராதபட்சத்திலே (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கிரமமாய் யோக்கியதை பெற்றிருக்கிற யாதொரு நபரை நியமிக்கலாம்.

சில விஷயங்களிலே வார்ஸ் சிறிதுகாலம் வரையில் யோக்கியதை யற்றிருப்பது.

(4) உத்தியோகத்தைக் கடைசியாய் வகித்திருந்தவர் நீக்கிவிடப்பட்டதனாலாவது சிறிதுகாலம் வரையில் தள்ளிவைக்கப் பட்டதனாலாவது அந்த உத்தியோகம் காலியாகிற விஷயத்திலே கலெக்டரானவர் அவ்வுத்தியோகத்தைக் கடைசியாய் வகித்திருந்தவர் இறந்துபோகிற வரையிலாகிலும், மறுபடியும் அநுவலுக்கு வருகிறவரையிலாகிலும், அந்த உத்தியோகஸ்தருடைய குடும்பத்தின் அவிபக்த அங்கத்தினராயிராமல் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கிரமமாய் யோக்கியதை பெற்றிருக்கிற யாதொரு நபர் அவ்வுத்தியோகத்தின் அலுவல்களை நடத்தவேண்டுமென்று கலெக்டர் உத்தரவுசெய்யலாம்; ஆனால், வேலையிலிருந்து நீக்கிவிடப்பட்ட உத்தியோகஸ்தர் இறந்துபோனாலும், வேலையிலிருந்து சிறிதுகாலம்வரையில் தள்ளிவைக்கப்பட்ட உத்தியோகஸ்தர் அவ்வாறு தள்ளிவைக்கப்பட்ட காலத்தில் இறந்துபோனாலும், அப்படிப்பட்ட மரணத்தினால் நேரிடுகிற காலிக்கு (2), (3) குறிப்பிட்ட உட்பிரிவுகளிலுள்ள நிபந்தனைகளின்படி பார்த்துச்செய்யவேண்டும்.

வார்ஸ் வயதுவராத மைனராயிருந்தால் செய்யவேண்டியது இன்னது.

(5) யாதொரு உத்தியோகத்திற்கு வர மற்றப்படி அர்ஹராயுள்ள நபர் வயதுவராத மைனராயிருந்தால் கலெக்டரானவர் - கடைசியாய் அந்த உத்தியோகத்தை வகித்திருந்தவருடைய வார்ஸாக அந்த மைனரை ரெஜிஸ்டர்செய்து, அந்த மைனர் வயதுவந்த பருவம் அடைவதன்மேலாவது அதற்குப்பிறகு மூன்று வருஷத்திற் குள்ளாவது தானே அந்த உத்தியோகத்தின் அலுவல்களை நடத்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்

படி யோக்கியதை பெறுகிற வரையிலே அவ்வுத்தியோகத்தைச் சேர்ந்த அலுவல்களை நடத்தும்படி (1) குறிப்பிட்ட உட்பிரிவின் பிரகாரம் யோக்கியதைபெற்ற வேறே யாதொரு நபரை நியமிக்க வேண்டும்; அந்த மைனர் வயது வந்த பருவமடைவதன் மேலாவது அதற்குப்பிறகு மூன்று வருஷத்திற் குள்ளாவது தானே அந்த உத்தியோகத்தைச்சேர்ந்த அலுவல்களை நடத்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யோக்கியதை பெறும்போது அந்த மைனரை அதற்கு நியமிக்கவேண்டும். இந்த உட்பிரிவின்படி வார்லாக ரெஜிஸ்டர் செய்யப்பட்ட நபர் இறந்துபோனாலும், வயதுவந்த பருவமடைந்த பிறகு மூன்றுவருஷம்வரையிலே (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யோக்கியதை பெறுமலிருந்தாலும், (2), (3) குறிப்பிட்ட உட்பிரிவுகளில் நிபந்தனைகண்டிருக்கிறபடி கலெக்டர் அந்தக் காலிக்குப் பர்த்திசெய்ய வேண்டும்.

ராஜிநாமா கொடுத்ததனாலாவது வேலையிலிருந்து நீக்கிவிடப்பட்டதனாலாவது அப்புறப்படுத்தப்பட்டதனாலாவது சிறிதுகாலம்வரையில் வேலையிலிருந்து தள்ளிவைக்கப்பட்டதனாலாவது நேரிடும் காலிக்குப் பர்த்திசெய்கிற விதம்.

(6) யாதொரு உத்தியோகத்தை வகித்திருப்பவர் ராஜிநாமா கொடுத்ததனாலாவது வேலையிலிருந்து நீக்கிவிடப்பட்டதனாலாவது அப்புறப்படுத்தப் பட்டதனாலாவது வேலையிலிருந்து சிறிதுகாலம் வரையில் தள்ளிவைக்கப் பட்டதனாலாவது காலிநேரிட்டு, (4) குறிப்பிட்ட உட்பிரிவில் பிரஸ்தாபிக்கப்பட்டபடி கலெக்ட்டர் உத்தாவுசெய்யாவிட்டால், அவர் மேற்படி உத்தியோகத்தை வகித்திருந்தவர் இறந்துபோனதனால் அந்தக்காலி நேரிட்டிருந்தாலெப்படியோ அப்படியே இந்தப் பிரிவின் நிபந்தனைகளின்படி அந்த காலிக்குப் பர்த்திசெய்யவேண்டும்; ஆனால், யாதொரு உத்தியோகஸ்தர் சிறிதுகாலம் வரையில் வேலையிலிருந்து தள்ளிவைக்கப் பட்டிருந்தால் அவ்வாறு தள்ளிவைக்கப்பட்ட காலம் கழிவாவதன் மேலர்கிலும், வேலையிலிருந்து நீக்கிவிடப்பட்டாவது அப்புறப்படுத்தப் பட்டாவது சிறிது காலம் வரையில் தள்ளிவைக்கப்பட்டாவதிருக்கிற உத்தியோகஸ்தர் யாதொரு காரணத்தினலே, அவ்வாறுவிட்டு நீங்கிய உத்தியோகத்துக்கு மறுபடியும் வர அநுமதி கொடுக்கப்பெற்றாலும் மேற்படி உத்தியோகஸ்தர் அந்த உத்தியோகத்தைவிட்டு நீங்கிய கார

ணத்தினால் நேரிட்ட காலிக்குப் பர்த்தியாக நியமிக்கப்பட்ட நபர் அந்த உத்தியோகத்தை வகிக்காமல் விட்டு நீங்கவேண்டும்.

ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளிலே சில உத்தியோகங்களுக்கு நேமகம் செய்கையில் அநுசரிக்கவேண்டிய விதிகள்.

11. 3-வது பிரிவில் (3) குறிப்பிட்ட வகுப்பிலடங்குகிற உத்தியோகங்களில் யாதொரு உத்தியோகம் ஒருவருக்கேயுரிய பூஸ்திதியில் காலியாகும்போது அந்தப் பூஸ்திதிக்குடையவர் அடியிற்கண்ட உட்பிரிவுகளிலுள்ள நிபந்தனைகளின்படி அந்தக்காலிக்குப் பர்த்திசெய்யவேண்டும்:—

எல்லா விஷயங்களிலும் வேண்டியிருக்கிற பொதுவான யோக்கியதாம்சங்கள்.

(1) எவரும்—

(a) ஆண்பாலராயிராவிட்டாலும்,

(b) வயது வந்த பருவம் அடையாவிட்டாலும்,

(c) உத்தியோகத்தின் அலுவல்களை நடத்துவதற்கான தேகதிடமும் மனோதிடமும் பெற்றிராவிட்டாலும்,

நேமகம்செய்யப்பட அர்ஹராகமாட்டார்.

பின்வருகிற பாத்தியதையைப் பற்றிய சட்டம் அல்லது வழக்கத்தை அநுசரிக்க வேண்டும்.

(2) இந்த ஆக்ட் செலாவணியாகத்தொடங்குகிற தேதியில் பிரஸ்தாப உத்தியோகத்திற்குப் பிரயோகப்படத்தக்க சட்டப்படியாவது வழக்கப்படியாவது பின்வருகிற பாத்தியதை செல்லவேண்டும்.

சில விஷயங்களிலே நேரான வார்ஸுதவிர வேறே நபரை நியமிக்கலாம்.

(3) அடுத்தவார்ஸ் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யோக்கியதைபெற்றிராத விஷயத்திலே பூஸ்திதிக்குடையவர் அந்தப் பரம்பரையில் அவ்வாறு யோக்கியதை பெற்றிருக்கிற அடுத்த நபரை நியமிக்கவேண்டும்; அந்தப் பரம்பரையில் அப்படிப்பட்டவரெவரும் இராதபட்சத்திலே (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கிரமமாய் யோக்கியதை பெற்றிருக்கிற யாதொரு நபரை நியமிக்கலாம்.

வார்ஸ் வயதுவராத மைனராயிருந்தால் செய்யவேண்டியது இன்னது.

(4) யாதொரு உத்தியோகத்துக்குவார வேறே காரணத்தினால் அர்ஹராயுள்ள நபர் வயதுவராத மைனராயிருந்தால் பூஸ்திதிக்குடையவர் - கடைசியாய் அந்த உத்தியோகத்தை வகித்தவருடைய வார்ஸாக அந்த மைனரை ரெஜிஸ்ட்டர் செய்துகொண்டு, வார்ஸாக ரெஜிஸ்ட்டர் செய்யப்பட்ட நபர் தானே அந்த உத்தியோகத்தின் அலுவலை நடத்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யோக்கியதை பெறுகிறவரையிலே அவ்வுத்தியோகத்தைச் சேர்ந்த அலுவல்களை நடத்தும்படி (1) குறிப்பிட்ட உட்பிரிவின் பிரகாரம் யோக்கியதைபெற்ற வேறே யாதொரு நபரை நியமிக்கவேண்டும். அவ்வுத்தியோகத்தின் அலுவல்களைத் தானே நடத்த அந்த மைனர் யோக்கியதை யடையும்போது அவன் அதற்கு நியமிக்கப்படவேண்டும். இந்த உட்பிரிவின்படி வார்ஸாக ரெஜிஸ்ட்டர் செய்யப்பட்ட நபர் இறந்துபோனாலும், வயதுவந்த பருவமடைவதன்மேல் (1) குறிப்பிட்ட உட்பிரிவைச்சேர்ந்த (c) குறிப்பிட்ட பாகத்தின்படி யோக்கியதை பெறாமலிருந்தாலும், (2), (3) குறிப்பிட்ட உட்பிரிவுகளில் நிபந்தனை கண்டிருக்கிறபடி பூஸ்திதிக்குடையவர் அந்தக்காலிக்குப் பர்த்திசெய்யவேண்டும்.

கிராமத்தொழிலாளிகளின் விஷயத்திலே பின்வருகிற பாத்தியதையைப் பற்றிய சட்டம் அல்லது வழக்கத்தை அநுசரிக்க வேண்டும்.

12. 3-வது பிரிவில் (4) குறிப்பிட்ட வகுப்பிலடங்குகிற கிராம உத்தியோகங்களுக்குப் பின் வருகிற பாத்தியதையானது இந்த ஆக்ட் செலாவணியாகத் தொடங்குகிற தேதியில் அந்த உத்தியோகங்களுக்குப் பிரயோகப்படத்தக்க சட்டப்படியாவது வழக்கப்படியாவது செல்லவேண்டும்.

உத்தியோகங்களுக்காகவும் சன்மானங்களை வசூல்செய்வதற்காகவும் வார்ஸாகரெஜிஸ்ட்டர் செய்வதற்காகவும் கொண்டுவரப்படும் வியாஜ்ஜியங்

13. (1) 3-வது பிரிவிற்கண்ட கிராம உத்தியோகங்களில் யாதொன்றுக்காவது அப்படிப்பட்ட யாதொரு உத்தியோகத்தின் சன்மானங்களை வசூல்செய்வதற்காவது யாதொரு நபர்-அப்படிப்பட்ட உத்தியோகத்தை வகிக்கவும் அப்படிப்பட்ட சன்மானங்களை அனுபவிக்கவும், சந்தர்ப்பத்திற்கேற்றபடி, 1894-ம் ஆண்டுச் சென்னபட்டணம் ஒருவருக்கே புரிய பூஸ்திதிகளின் கிராமவூழிய ஆக்ட் 10-வது

களைக் குறித்த விப ந்தனைகள்.

பிரிவைச்சேர்ந்த (2) அல்லது (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாகிலும், இந்த ஆக்ட் 10-வது பிரிவைச்சேர்ந்த (2) அல்லது (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாகிலும், 11-வது பிரிவைச்சேர்ந்த (2) அல்லது (3), குறிப்பிட்ட உட்பிரிவின் படியாகிலும், 12-வது பிரிவின்படியாவும், தாம் அர்ஹராயிருக்கிறோமென்கிற ஹேதுவின்மேல், கலெக்ட்டருக்கு முன்பாக வியாஜ்ஜியங் கொண்டுபோகலாம்; அல்லது, மைனராயிருந்து, அப்படிப்பட்ட யாதொரு உத்தியோகத்தைக் கடைசியாய் வகித்திருந்தவருடைய வார்ஸாக ரெஜிஸ்ட்டர் செய்யப்படுவதற்குக் கலெக்ட்டருக்கு முன் வியாஜ்ஜியம் கொண்டுபோகலாம்.

பாத்தியதை முதலியதை நிர்ணயிப்பதற்கான டிக்கிரியின் பொருட்டு வியாஜ்ஜியம் கொண்டுபோகக் கூடாது.

ஆனால்,—

(i) பாத்தியதை முதலியதை நிர்ணயித்து வரையறுப்பதற்காக மாத்திரம் டிக்ரி பெறும் பொருட்டுக் கொண்டுவரப்படும் எந்த வியாஜ்ஜியமும் பிடிக்கப்படமாட்டாது.

சன்மானம் இப்படிப்பட்ட தென்பதைப்பற்றி விவாதம் நேரிடுகிற விஷயத்தில் இன்னது செய்வது.

(ii) உத்தியோகத்தின் சன்மானம் நிலமாயிருக்கிறதா அல்லது நிலத்தின் விஷயமாகச் செலுத்தத்தக்க வருமானத்தின் பங்கீடாயிருக்கிறதா என்பது வியாஜ்ஜியத்தின் விவாத அம்சங்களில் ஒன்றாயிருக்குமானால், கலெக்ட்டரானவர் மேற்படி பங்கீடுமாத்திரம் சன்மானமாயிருக்கிறதென்கிற உத்தேசத்தின்மேல் அந்தத் தாவாவைத் தீர்மானிக்கவேண்டும்; ஆனால், நிலத்தையே அடைவதற்காக ஸிவில் கோர்ட்டில் வியாஜ்ஜியங் கொண்டுபோகத் தாவாதாரருக்குள்ள ஸ்வதந்தரத்திற்கு அப்படிப்பட்ட தீர்மானத்தினால் தடைபுண்டாகமாட்டாது.

தாவாதாரர் க்ஷேமத்திற்கு போக்கியதை யற்றவராகும்போது பணிவிடைச் சருக்கவ

(2) யாதொரு உத்தியோகத்திற்காகவாவது யாதொரு உத்தியோகத்தைச்சேர்ந்த சன்மானங்களை வசூல்செய்வதற்காகவாவது இந்தப் பிரிவின்படி கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியத்தின் பரிசீலனை முடிவதற்கு முன்னே எப்போதாயினும், சந்தர்ப்பத்திற் கேற்றபடி, 1894-ம்வருஷத்துச் சென்னப்பட்டணம் ஒருவ

லையாய்த் தள்ளிவி டுவது.

ருக்சேபுரிய ப்ூஸ்திதிகளின் கிராம வூழிய ஆக்ட் 10 - வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின் படியாவது இந்த ஆக்ட் 11-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாவது இந்த ஆக்ட் 10 - வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாவது தாவாதாரர் நியமிக்கப்படுவதற்கு யோக்கியதையற்றவரா யிருக்கிறரென்று கலெக்ட்டருக்குத் தோற்றுமாகில் அவர் ப்ளெய்ன்டைத் தள்ளிவிட்டதாக உத்தரவு செய்யவேண்டும்.

இன்ன காலவரையறைக்குள்ளாக வியாஜ்ஜியங்கள் கொண்டுவரலாம்.

14. (1) அடுத்து முந்திய பிரிவின்படி கலெக்ட்டர் முன்னிலையில் கொண்டுவரப்படும் எந்த வியாஜ்ஜியமும் வியாஜ்ஜியமூல முண்டான தேதி இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்கு முன்பானலும் பின்பானலும் அந்தத்தேதிமுதல் மூன்று வருஷத்திற்குள்ளாகக் கொண்டுவரப்படா விட்டால் பிடிக்கப்படமாட்டாது.

வயதுவராத விஷயத்தில் கால நிர்ணயம்.

ஆனல், வயது வராதகாரணத்தினலே உத்தியோகத்தை வகிக்க யோக்கியதை யற்றிருந்த நபர் விஷயத்திலே அப்படிப்பட்ட உத்தியோகத்திற்காகவாவது அதன் சன்மானங்களை வசூல்செய்வதற்காகவாவது வியாஜ்ஜியங்கொண்டு வருவதற்கான ஸ்வதந்தரமானது அவர் வயதுவந்த பருவம் அடைகிறதேதியில் ஆரம்பமாகும்.

இன்ன காலவரையறைக்குள் டிக்ரி அல்லது உத்தரவை நிறைவேற்றுவதற்காக விண்ணப்பஞ் செய்துகொள்ளலாம்.

(2) இந்த ஆக்ட்டின்படி பிறப்பிக்கப்பட்ட டிக்ரி அல்லது உத்தரவை நிறைவேற்றுவதற்காகச் செய்துகொள்ளப்படும் எந்த விண்ணப்பமும் அந்த டிக்ரி அல்லது உத்தரவின் தேதிமுதல் ஒரு வருஷமான பிறகு செய்யப்படுமானல் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

1831-ம்ஞூத்து 6-வது ரெகுலேஷன்படி செய்யப்பட்ட டிக்ரிகளை

(3) சென்னபட்டணம் 1831-ம்ஞூத்து 6-வது ரெகுலேஷன்படி செய்யப்பட்ட டிக்ரிகளையாவது உத்தரவுகளையாவது இந்த ஆக்ட்டின் நிபந்தனைகளின்படி நிறைவேற்றலாம்; ஆனல், அப்படிப்பட்ட டிக்ரி அல்லது உத்தரவை நிறைவேற்றுவதற்காகச் செ

யும் உத்தரவுகளையு ம்நிறைவேற்றுவது

ய்து கொள்ளப்படும் விண்ணப்பமானது அந்த டிக்ரி அல்லது உத்தரவின் தேதிமுதல் மூன்றுவருஷமான பிறகாகிலும், இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவது முதல் ஒரு வருஷமான பிறகாகிலும் செய்துகொள்ளப்படுமாகில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

அப்பீல் செய்து கொள்ளப் படுமாகில் கால நிர்ணயம்.

(4) எதை நிறைவேற்றும்படி பிரயத்தனஞ் செய்யப்படுகிறதோ அந்த டிக்ரி அல்லது உத்தரவுக்குமேல் அப்பீல் செய்துகொள்ளப்படுகிற விஷயங்களிலே, (2), (3 குறிப்பிட்ட உட்பிரிவுகளிற்கண்ட காலநிர்ணயவரையறைகள் அப்பீல் முடிவாவதுமுதல் ஆரம்பமாகும்.

வியாஜ்ஜியங்களை மாற்றுவதைக் குறித்து டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்கு அதிகாரம்.

15. டிஸ்ட்ரிக்ட் கலெக்ட்டரானவர் டிஸ்ட்ரிக்ட்டைச் சேர்ந்த யாதொரு டிவிஷன் விசாரணை ரெவினியு உத்தியோகஸ்தருடைய கட்டிலிருக்கிற யாதொரு வியாஜ்ஜியத்தைத் தம்முடைய சொந்த கட்டுக்குப் பைசல் செய்யும்பொருட்டு மாற்றிக்கொள்ளலாம்; அல்லது அப்படிப்பட்ட ஒரு உத்தியோகஸ்தருடைய கட்டிலிருந்து வேறொரு உத்தியோகஸ்தருடைய கட்டுக்கு மாற்றலாம், அல்லது டிவிஷன் விசாரணையில்லாத அஸிஸ்ட்டெண்ட் அல்லது டெப்புட்டி கலெக்ட்டருடைய கட்டுக்கு மாற்றலாம்.

வியாஜ்ஜியங்களைப் பரிசீலனைசெய்கையில் அனுசரிக்கவேண்டிய முறை.

16. (1) இந்த ஆக்ட்டின்படி கொண்டுவரப்படுகிற வியாஜ்ஜியங்களின் பரிசீலனையைக் குறித்து, 20-வது பிரிவின்படி ரெவினியுபோர்டாரால் செய்யப்படும் விதிகளைக்கொண்டும் அடியிற்கண்ட நிபந்தனைகளைக் கொண்டும் ஒழுங்கேற்படுத்தவேண்டும் :—

விசாரணைத் தேதியை நிர்ணயிக்கவேண்டியதும், கட்சிக்காரர்கள் சொல்விக் கொள்வதைக் கேட்க வேண்டியதும்.

(i) வியாஜ்ஜியத்தை விசாரணைசெய்வதற்கு ஒரு தேதியை நிர்ணயித்துக் கட்சிக்காரர்களுக்குத் தெரிவிக்கவேண்டும்; அந்தக்கட்சிக்காரர்கள் நேராகவாவது பிரதிநிதி மூலமாகவாவது தாங்கள்சொல்லிக்கொள்வதைக் கேட்கப்படுவதற்கு அர்ஹராவார்கள்;

(ii) சாட்சிகளை ஆஜர்செய்விக்கவும், தங்களுக்கு யாருடைய சாட்சியம் வேண்டியதாயிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு நபரைச் சாட்சியாக ஸம்மன் செய்து வரவழைக்கவேண்டுமென்றாவது தஸ்தவேஜைக் கொண்டுவந்துகாட்டும்படி யாதொரு நபருக்கு ஸம்மன்செய்து வரவழைக்கவேண்டுமென்றாவது கேட்கவும் கட்சிக்காரர்களுக்குச் சுதந்தரமுண்டு; வியாஜ்ஜியத்தைப் பரிசீலனைசெய்கிற உத்தியோகஸ்தரானவர் கட்சிக்காரர்கள் கேட்கிறபடிசெய்வது அனாவசியமென்று தமக்குத்தோற்றினாலன்றி மற்றப்படி அவ்விதமாகவே செய்யவேண்டும்; அப்படி அவருக்கு அனாவசியமாகத் தோற்றும்போது அதற்குள்ள நியாயங்களை அவர் எழுதிவைக்கவேண்டும்;

சாட்சிகளை ஹாஜர் செய்விக்கலாம் அல்லது ஸம்மன் பண்ணி வரவழைக்கலாம்.

(iii) வியாஜ்ஜியத்தைப் பரிசீலனைசெய்கிற உத்தியோகஸ்தரானவர் கட்சிக்காரர்கள் சொல்லுகிற விஷயங்களின் சாராம்சங்களும் சாட்சியத்தின் சாராம்சங்களும் தம்முடைய தீர்மானமும் அதற்குள்ள நியாயங்களுமடங்கிய ஒரு குறிப்பை இங்க்லீஷில் தம் கைப்பட எழுதிவைக்கவேண்டும்.

நடவடிக்கைகளை எழுதிவைப்பது.

(2) இந்தப்பிரிவின்படி யாருக்கு ஸம்மன் பிறப்பிக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட ஒவ்வொருவரும் அதன்பிரகாரம் நடக்கச் சட்டப்படி கடமைப்பட்டவராவர்.

ஸம்மன்படி நடக்கவேண்டிய கடமை.

17. இந்த ஆக்ட்டின்படி கொண்டுவரப்படும் வியாஜ்ஜியங்களில் செய்யப்படுகிற டிக்ரிகளிலும் உத்தரவுகளிலும், 20 வது பிரிவின்படி ரெவினியுபோர்டாரால் நிர்ணயிக்கப்படுகிற பரிமாண வீதப்படிக்கும் அவர்களால் அவ்வாறு நிர்ணயிக்கப்படுகிற விதிகளுக்குட்பட்டும் செலவை கொடுக்கும்பொருட்டு ஏற்பாடு செய்யலாம்; மேற்படி பிரிவின் பிரகாரம் ரெவினியு போர்டாரால் செய்யப்படும் விதிகளின்படி அந்த டிக்ரிகளையும் உத்தரவுகளையும் நிறைவேற்ற வேண்டும்.

டிக்ரிகளில் செலவுக்காக ஏற்பாடு செய்யலாம்; ரெவினியு போர்டாரால் செய்யப்படும் விதிகளின்படி டிக்ரிகளை நிறைவேற்ற வேண்டும்.

சில விஷயங்களில் கலெக்டர் சட்டத்தைப் பற்றிய கேள்வியை ரெவினியு போர்டாருடைய தீர்மானத்திற்கு அனுப்பலாம்.

18. (1) இந்த ஆக்ட்டின்படி கொண்டுவரப்படும் வியாஜ்ஜியத்தையாவது, இந்த ஆக்ட்டின்படி கொண்டுவரப்படுகிற வியாஜ்ஜியத்தில் செய்யப்படுகிற டிக்ரி அல்லது உத்தரவின்மேல் கொண்டுவரப்படும் அப்பீலையாவது விசாரணைசெய்வதற்கு முன்பாகிலும் விசாரணை செய்துகொண்டிருக்கையிலாகிலும், அப்படிப்பட்ட யாதொரு டிக்ரியை நிறைவேற்றும்போதாகிலும், சட்டத்தைப்பற்றிய யாதொரு கேள்வியாவது சட்டத்தைப்போல் செலாவணியாய்க் கொண்டிருக்கிற வழக்கத்தைப்பற்றிய கேள்வியாவது வியாஜ்ஜியத்தின் குணாகுணங்களைப் பாதிக்கத்தக்கதாயிருக்கும் தஸ்தவேஜின் அர்த்தத்தைப்பற்றிய கேள்வியாவது பிறந்து, அந்த வியாஜ்ஜியத்தையாயினும் அப்பீலையாயினும் பரிசீலனை செய்கிற அல்லது டிக்ரியை நிறைவேற்றுகிற உத்தியோகஸ்தருக்கு அப்படிப்பட்ட கேள்வியைப்பற்றி நியாயமான சந்தேகம் பிறக்குமானால் அவர்-தாமேயாவது கட்சிக்காரர்களில் எவரேனும் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேலாவது, அவ்விஷயத்தைப்பற்றிய சங்கதிகளையும் சந்தேகங்கொண்டிருக்கிற அம்சத்தையும் எழுதி, அவைகளை ரெவினியு போர்டாருடைய தீர்மானத்திற்காக அனுப்பவேண்டியதுமல்லாமல், மேற்படி தீர்மானம் தமக்குத் தெரிவிக்கப்படுகிறவரையில் இன்னும்-நடவடிக்கை நடத்தாமல் நிறுத்திவைக்கவும்வேண்டும்.

அந்தப்படி அபிப்பிராயத்திற்கு அனுப்புகிற விஷயத்தில் அநுசரிக்கவேண்டிய முறைமை.

(3) கட்சிக்காரர்களுக்குள் யாராவது கேட்டுக்கொள்ளுகிற பட்சத்தில் ரெவினியு போர்டார் அவராவது அவருடைய பிரதிநிதியாவது சொல்லுவதைக்கேட்கவேண்டும். மேலும், அவர்கள்-தங்களுடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்ட விஷயத்தைத்தீர்மானித்து, யாரால் அந்தப்படி தங்களுடைய அபிப்பிராயத்திற்கு அவ்விஷயம் அனுப்பப்பட்டதோ அந்த உத்தியோகஸ்தருக்குத் தங்களுடைய தீர்மானத்தில் நகலை அனுப்பவேண்டும்; அதை வரப்பெற்றுக்கொள்வதன்மேல் மேற்படி உத்தியோகஸ்தரானவர் மேற்படி போர்டாருடைய தீர்மானத்திற்கு இணங்க அவ்விஷயத்தைப் பைசல்செய்யத் தொடங்கவே

ரெவினியு போர்டாருடைய தீர்மா

ணம் சரியல்லவென்று ஆட்சேபிக்கக் கூடாது.

ண்டும்; மேலும், மேற்படி போர்டாருடைய தீர்மானம் சரியல்லவென்று, இந்த ஆக்ட்டின்படி செய்யப்படும் யாதொரு அப்பீலில் ஆட்சேபிப்பது கூடாது.

இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும்போது முடிவாகாமலிருக்கிற வியாஜ்ஜியங்களையும் அப்பீல்களையும் பைசல் செய்வது.

19. சென்னபட்டணம் 1831-ம் ஹு த் து 6-வது ரெகுலேஷன்படி கொண்டுவரப்பட்ட சகல வியாஜ்ஜியங்களும் செய்யப்பட்ட அப்பீல்களும் இந்த ஆக்ட் வழங்கத்தொடங்குவதற்குப் பின்பு இந்த ஆக்ட்டின்படி தாக்கல் செய்யப்பட்டிருந்தாலெப்படியோ அப்படியே அவைகளை விசாரணை பண்ணிப் பைசல் செய்யவேண்டும்.

சில விஷயங்களைக்குறித்து ரெவினியு போர்டார் விதிகளேற்படுத்தலாம்.

20. ரெவினியு போர்டார் கவர்ன்மெண்டாருடைய அங்கீகாரத்தைப்பெற்றுக்கொண்டும், முன்னதாகப் பிரசுரித்தான பிறகும் அடியிற்கண்ட விஷயங்களைக்குறித்து இந்த ஆக்ட்டுக்காவது சென்னபட்டணம் 1894-ம் ஹுத்து ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராம ஊழிய ஆக்ட்டுக்காவது ஒற்றுமை யற்றதாயிராத விதிகளை ஏற்படுத்தலாம்:—

( ) கிராமங்களைப் பிரிப்பதும் தொகுப்பதும் ஒன்றாய்ச்சேர்ப்பதும்;

( ) 6, 7, 8-வது பிரிவுகளின்படி விசாரணை நடத்துவதும், 23-வது பிரிவின்படி அப்பீல்களை விசாரணை பண்ணுவதும்:

(ııı) 3-வது பிரிவில் (1) குறிப்பிட்ட வகுப்பிலடங்குகிற கிராம உத்தியோகங்களை வகிப்போர் பெற்றிருக்கவேண்டிய வித்தியா சம்பந்தமான யோக்கியதாம்சங்களும்;

(v) வியாஜ்ஜியங்களையும் வியாஜ்ஜியங்களில் செய்யப்படும் டிக்ரிகள் அல்லது உத்தரவுகளின்மேல் கொண்டுவரப்படுகிற அப்பீல்களையும் பைசல்செய்வதில் அநுசரிக்கவேண்டிய முறைமையும், அதுசம்பந்தமாக வைத்துத் தரிக்கவேண்டிய ரெஜிஸ்ட்டர்களும்;

(v) வியாஜ்ஜியங்களில் செய்யப்படும் டிக்ரிகளேயும் உத்தரவுகளேயும் நிறைவேற்றுவதும், செலவைக்கணக்கிட்டு ஏற்படுத்துவதும் ;

(vi) 3-வது பிரிவில் (1) குறிப்பிட்ட வகுப்பிலடங்குகிற கிராம உத்தியோகங்களே வகிப்போருக்கு ஏற்படுத்தவேண்டிய சம்பளங்களும், வேறே வர்த்தனைகளும், அவைகளேச் செலுத்தும் விதமும் ;

(vii) 3-வது பிரிவில் (1), (3) குறிப்பிட்ட வகுப்புகளிலடங்குகிற கிராம உத்தியோகங்களே வகிப்போருடைய அலுவல்களும், அவர்கள் வைக்கவேண்டிய கணக்குகளும் ரெஜிஸ்டர்களுமிருக்கவேண்டிய விவரங்களும் நமூனுக்களும் ;

(viii) 3-வது பிரிவில் (1), (3) குறிப்பிட்ட வகுப்புகளிலடங்குகிற கிராம உத்தியோகங்களே வகிப்போர் வைத்திருக்கும் கணக்குகள் முதலிய தஸ்தவேஜுகளேப் பத்திரப்படுத்துவதும் ஹாஜர்செய்வதும் வேறொருவருக்கு மாற்றுவதும் ;

(ix) 1893-ம்ஹூத்துச் சென்னபட்டணம் கிராம மேரை ஆக்டின்படிக்கும், 1894-ம்ஹூத்துச் சென்னபட்டணம் ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராம வூழிய ஆக்ட்டின்படிக்கும், இந்த ஆக்ட்டின்படிக்கும் அட்மினிஸ்ட்ரேஷன் ரிபோர்ட்டுகளேப் பிரசுரிப்பதும் ;

(x) கிராம வூழியத்தின் திறமையை அபிவிருத்திசெய்வதற்கு அநுகூலமான வேறே எந்த விஷயங்களும்.

சிவில் கோர்ட்டாருடைய அதிகாரத்திற்குத்தடை.

21. 3-வது பிரிவிற்கண்ட உத்தியோகங்களில் யாதொன்றுக்குப் பின்வருவதற்கான யாதொரு தாவாவையாவது, அப்படிப்பட்ட யாதொரு உத்தியோகத்தைச்சேர்ந்த சன்மானங்களின் வீதம் அல்லது தொகையைப்பற்றிய யாதொரு கேள்வியையாவது, 13-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின் (i) குறிப்பிட்ட விலக்கில் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, அவ்வகையான யாதொரு உத்தியோகத்தின் சன்மானங்களே வசூல்செய்வதற்கான யாதொரு தாவாவையாவது ஆலோசனைபண்ணவோ அல்

ல்து தீர்மானிக்கவோ எந்த ஸிவில்கோர்ட்டாருக்கும் அதிகாரம் கிடையாது,

அதிகார வரம்பைப்பற்றிய விஷயத்தைக்குறித்து ரெவினியு கோர்ட்டார்செய்யும் தீர்மானங்களை ரத்துசெய்ய ஸிவில்கோர்ட்டாருக்கு அதிகாரங்கொடுப்பதற்கான விலக்கு.

ஆனால், இந்த ஆக்ட்டின்படி கொண்டுவரப்பட்ட யாதொரு வியாஜ்ஜியத்திலே பிரதிவாதியானவன் எதற்காக அந்த வியாஜ்ஜியம் கொண்டுவரப்படுகிறதோ அந்த உத்தியோகத்திற்கு இந்த ஆக்ட்டில் விவரிக்கப்பட்டிருக்கிறபடி சன்மானமெதுவும் சேர்ந்திருக்கவில்லையென்கிற ஹேதுவின்மேல், அந்த வியாஜ்ஜியத்தைப்பிடிக்க ரெவினியு கோர்ட்டாருக்கு அதிகார வரம்பில்லையென்று கலெக்ட்டருக்கு முன் வாதிப்பானாகில், அப்படிப்பட்ட வியாஜ்ஜியத்திலான டிக்கிரியின்மேல் அப்பீல் செய்துகொள்ளப்படுவதன்மீது அப்பீல் அதிகாரிகள் ஷை வாதத்திற்கு விரோதமாகத் தீர்மானிக்கிற பட்சத்திலே, மேற்படி அப்பீலதிகாரிகளுடைய டிக்ரி பிறந்த தேதிமுதல் ஆறுமாதத்திற்குள்ளாக அந்தப்பிரதிவாதியானவன் மேலேகண்ட ஹேதுவைக்கொண்டே மேற்படி அப்பீலதிகாரிகளுடைய டிக்ரியை ரத்துசெய்யும்பொருட்டு ஸிவில்கோர்ட்டாரிடத்தில் வியாஜ்ஜியங் கொண்டுபோகலாம்.

இந்த ஆக்டிலுள்ளதெதனுலும், வருமான பாக்கியைப்போல் சன்மானங்களைப் பெற்றுக்கொள்ளத் தடையுண்டாகவு மாட்டாது, இப்போது பரம்பரையான தல்லாத உத்தியோகத்திற்குப் பாதகமுண்டாகவுமாட்டாது

22. இதிலுள்ளதெதனுலும், சென்னபட்டணம் 1864-ம் ஷுத்து 2-வது தீர்வை வசூல் ஆக்ட் 52-வதுபிரிவின் நிபந்தனைகளுக்காவது 1866-ம் ஷுத்துச் சென்னபட்டணம் 4-வது ஊழிய இனும் ஆக்ட்டின் நிபந்தனைகளுக்காவது பாதகமுண்டாகவுமாட்டாது; 6-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, யாதொரு கிராம உத்தியோகத்துக்குப் பரம்பரையான பாத்தியதையை உண்டாக்குவதாகவாவது கொடுப்பதாகவாவது இதிலுள்ளதெதையும் எண்ணவுங்கூடாது.

கலெக்ட்டருடை

23. (1) 6-வது அல்லது 7-வது பிரிவின்படி கலெக்ட்டரால் செய்யப்பட்ட ஒவ்வொரு உத்தரவின்மீதும், 13-வது பிரிவின்படி கொண்டுவரப்படும் வியாஜ்ஜியத்

ய உத்தரவு அல்லது டிக்ரிக்குமேல் அப்பீல்.

தில் கலெக்ட்டரால் செய்யப்படும் ஒவ்வொரு டிக்ரி அல்லது உத்தரவின்மீதும் (அப்பீல்செய்து கொள்வதானல்) ஒரு மாதத்திற்குள்ளாக டிஸ்ட்ரிக்ட் கலெக்ட்டருக்கு அப்பீல் செய்துகொள்ளவேண்டும்; மேற்படி உத்தரவு அல்லது டிக்ரி டிஸ்ட்ரிக்ட் கலெக்ட்டரால் செய்யப்பட்டிருக்குமாகில் (அப்பீல் செய்துகொள்வதனல்) மூன்று மாதத்திற்குள்ளாக ரெவினியுபோர்டாருக்கு அப்பீல் செய்துகொள்ளவேண்டும். அப்பீலில் சந்தர்ப்பத்திற்கேற்றபடி டிஸ்ட்ரிக்ட் கலெக்ட்டர் அல்லது ரெவினியு போர்டாருடைய தீர்மானம் முடிவானதாகும்.

சில விஷயங்களில் இரண்டாவது அப்பீல்.

ஆனல், கிராமப்பெரியதனக்காரர், கிராமக்கணக்கன் ஆகிய இவர்களுடைய உத்தியோகங்களின் விஷயமாக 13-வது பிரிவின்படி கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியங்களிலும், 7-வது பிரிவின்படி கிராம உத்தியோகஸ்தரை நீக்கிவிடுகிற விஷயங்களிலும், டிஸ்ட்ரிக்ட் கலெக்ட்டருக்கு அப்பீல் செய்துகொள்வதன்மேல் அவர் செய்யும் தீர்மானத்தின்மீது (அப்பீல் செய்துகொள்வதானல்) ரெவினியுபோர்டாருக்கு மூன்றுமாதத்திற்குள்ளாக இரண்டாவது அப்பீல் செய்துகொள்ளவேண்டும்.

தாஸில்தார் டெப்யுட்டி தாஸில்தார் அல்லது பூஸ்திதிக் குடையவருடைய உத்தரவின் மேல் அப்பீல்.

(2) 7-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி தாஸில்தார் அல்லது டெப்யுட்டி தாஸில்தாரரால் செய்யப்பட்ட ஒவ்வொரு உத்தரவின்மேலும், 8-வது பிரிவின்படி பூஸ்திதிக்குடையவரால் செய்யப்பட்ட ஒவ்வொரு உத்தரவின்மேலும் (அப்பீல் செய்துகொள்வதானல்) கலெக்ட்டருக்கு ஒரு மாதத்திற்குள்ளாக அப்பீல் செய்துகொள்ளவேண்டும். அவருடைய தீர்மானம் முடிவானதாகும்.

சென்னபட்டணம் 1831-ம் ஹூலத்து 6-வது ரெகுலேஷன்படி கொடுக்க

23-a. இதற்கு விரோதமாக யாதொரு ரெகுலேஷன் அல்லது ஆக்ட்டில் என்னசொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, சென்னபட்டணம் 1831-ம்ஹூலத்து 6-வது ரெகுலேஷன்படி கொண்டுவரப்பட்ட யாதொரு வியாஜ்ஜியத்திலாவது செய்யப்பட்ட அப்

ப்பட்ட டிக்ரி அல்லது உத்தரவுக்குமேல் சிலவிஷயங்களிலே சென்னபட்டணம் 1865-ம் வருஷத்து 3-வது ஆக்ட் வழங்கத்தொடங்கியதற்குப் பிறகு அப்பீல் கிடையாது.

பீலிலாவது கொடுக்கப்பட்ட யாதொரு டிக்ரி அல்லது உத்தரவுக்குமேல் இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கியதற்குப் பிறகு அப்பீல் பிடிக்கப்படாது; ஆனால், எதன்மேல் அப்பீல் செய்துகொள்வதாக முயற்சி பண்ணப்படுகிறதோ அந்த டிக்ரி அல்லது உத்தரவானது இந்த ஆக்ட்டின்படி ஆரம்பிக்கப்பட்ட வியாஜ்ஜியத்திலாவது அப்பீலிலாவது நடவடிக்கையிலாவது கொடுக்கப்பட்டிருக்குமாகில் 23-வது பிரிவின்படி மேலேகண்ட அப்பீல் செய்துகொள்ளப்படும் பட்சத்திலே அது பிடிக்கப்படும்.

பிரதம உத்தரவைச்செய்த உத்தியோகஸ்தர் அப்பீலைப் பைசல் செய்வது.

24. டிஸ்ட்ரிக்ட் கலெக்ட்டர் அல்லது கலெக்ட்டருடைய ஹோதாவில் இந்த ஆக்ட்டின்படி யாருக்கு அப்பீல் செய்துகொள்ளப்படுகிறதோ அந்த உத்தியோகஸ்தரானவர் எதன்மேல் அப்பீல்செய்துகொள்ளப்படுகிறதோ அந்தத் தீர்மானத்தை வேறொரு ஹோதாவில்செய்த உத்தியோகஸ்தராயிருக்க நேரிடுமானல் அவர் சந்தர்ப்பத்திற் கேற்றபடி அவ்விஷயத்தை ரெவினியு போர்டாருக்கோ அல்லது டிஸ்ட்ரிக்ட் கலெக்ட்டருக்கோ ரிபோர்ட்பண்ணவேண்டும்; அந்த அப்பீலானது ஷை போர்டாராலாவது டிஸ்ட்ரிக்ட் கலெக்ட்டாராலாவது பைசல் செய்யப்படும். அந்த அப்பீலில்செய்த உத்தரவு முடிவானதாகும்.

காலநிர்ணய ஆக்ட்டின் சில நிபந்தனைகள் பிரயோகப்படுவது.

25. 1877-ம் வருஷத்திய இந்து தேசத்துக் கால நிர்ணய * ஆக்ட்டின் 5-வது, 12-வது பிரிவுகளிலுள்ள நிபந்தனைகள் வியாஜ்ஜியங்களுக்கும் அப்பீல்களுக்கும் விண்ணப்பங்களுக்கும் சம்பந்தப்படுகிற வரையிலே, இந்த ஆக்ட்டின்படி தாக்கல் செய்யப்பட்டாவது கொண்டுவரப்பட்டாவது செய்துகொள்ளப்பட்டாவதிருக்கிற வியாஜ்ஜியங்களுக்காகிலும், அப்பீல்களுக்காகிலும், டிக்ரிகள் அல்லது உத்தரவுகளை நிறைவேற்றுவதற்கான விண்ணப்பங்களுக்காகிலும் அவசியமான மாறுதலுடன் பிரயோகப்படவேண்டும்.

---

* 1908-ம் வருஷத்து 9-வது ஆக்டால் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

கிராமக்காவற்காரர்களைப் போலீஸ் உதிகாரிகளுக் குட்படுத்திவைக்கக் கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம்.

26. கிராம உத்தியோகஸ்தர்களைத் தண்டிக்க இந்த ஆக்டின்படிக்கும் 1894-ம் வருஷத்துச் சென்னப்பட்டணம் ஒருவருக்கேயுரிய ஸ்திதிகளின் கிராம ஊழிய ஆக்டின்படிக்கும் கலெக்டருக்கு உண்டாயிருக்கும் அதிகாரங்களை, குறிக்கப்பட்ட யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தில் கிராமக்காவற்காரர்கள் அல்லது போலீஸ் உத்தியோகஸ்தர்களெல்லோர் விஷயத்திலுமாவது அவர்களில் யார் விஷயத்திலாவது போலீஸ் டிஸ்ட்ரிக்ட் ஸுபரின்டெண்டெண்டோ அல்லது அஸிஸ்டெண்ட் ஸுபரின்டெண்டெண்டோ அந்தப்பிரதேச விஸ்தீர்ணத்தில் செலுத்தவேண்டுமென்று கவர்ன்மெண்டார் நிர்ணயிக்கலாம். இந்தப்பிரிவின்படி செய்யப்பட்ட நிர்ணயத்தை ஆதாரமாகக்கொண்டு போலீஸ் டிஸ்ட்ரிக்ட் ஸுபரின்டெண்டெண்டாவது அஸிஸ்டெண்ட் ஸுபரின்டெண்டெண்டாவது கிராமக்காவற்காரனையோ அல்லது போலீஸ் உத்தியோகஸ்தனையோ அபராதம் போடவாகிலும் வேலையிலிருந்து சிறிதுகாலம்வரையில் தள்ளிவைக்கவாகிலும் வேலையிலிருந்து நீக்கிவிடவாகிலும் அப்புறப்படுத்தவாகிலும் செய்த ஒவ்வொரு உத்தரவின்மீதும் (அப்பீல் செய்துகொள்வதானால்) ஒரு மாதத்திற்குள்ளாக டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அப்பீல்செய்துகொள்ளவேண்டும்; அவருடைய தீர்மானம் முடிவானதாகும்.

சென்னப்பட்டணம் பரம்பரையான கிராம உத்தியோகங்களைப்பற்றிய ஆக்ட்

முற்றிற்று.

MADRAS ACT NO. II OF 1894.

சென்னபட்டணம் 1894-ம் ௵ 2-வது ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராமவூழிய ஆக்ட்.

ஆலோசனை சபையிலுள்ள சென்னபட்டணம் கவர்னரவர்களால் ஜாரிசெய்யப்பட்டது.

[1894-ம் ௵ பெப்ரவரி ௴ 8௳ சிறப்புற்றேருக்கும் கவர்னரவர்களாலும் 1894-ம் ௵ மார்ச்சு ௴ 29௳ சிறப்புற்றேருக்கும் கவர்னர் ஜெனரலவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டது; கவர்னர் ஜெனரலவர்களுடைய அங்கீகாரமானது 1894-ம் ௵ மே ௴ 29௳ போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் முதலிலே பிரசித்தஞ்செய்யப்பட்டது.]

நிலையாய்ப் பைசலாதியான பூஸ்திதிகளிலும் வேறு சில பூஸ்திதிகளிலுமுள்ள கிராம உத்தியோகஸ்தர்களைக்குறித்த சட்டத்தைத் திருத்துவதற்கான ஆக்ட்.

பீடிகை.

நிலையாய்ப் பைசலாதியான பூஸ்திதிகளிலும், பைசலாதியாகாத பாளயங்களிலும், இனாம் கிராமங்களிலுமுள்ள கிராம உத்தியோகஸ்தர்களைக் குறித்த சட்டத்தைத் திருத்துவதும், அவர்களை நியமிப்பதற்காகவும் அவர்களுக்குச் சம்பளங்கொடுப்பதற்காகவும் அவர்கள் அக்கிரமமாய் நடக்காதபடி அல்லது அலுவலை அசட்டைபண்ணுகிறபடி தடுப்பதற்காகவும் அதைப்பற்றிச் சுருக்கவகையாய்த் தண்டிப்பதற்காகவும் பொதுவாய் அவர்களுக்குத் திறமையுண்டாயிருக்கும்படி செய்வதற்காகவும் இன்னும் சிரான நிபந்தனை ஏற்படுத்துவதும் யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

1-ம் அத்தியாயம்.

பீடிகா விதிகள்.

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, சென்னபட்டணத்து 1894-ம் வருஷத்திய ஒரு வருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராமவூழிய ஆக்டென்று சொல்லலாம்.

வியாபிக்குமிடம்.

2. கவர்ன்மெண்டார் விளம்பர மூலமாக இந்த ஆக்டையாவது இதன் யாதொரு பாகத்தையாவது சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸிக்குள் இருக்கிற யாதொரு பூஸ்திதிக்கும், அந்த பூஸ்திதிகளிலே கிராம உத்தியோகஸ்தர்களின் அடியிற்கண்ட வகுப்பார் அவ்வவ்விடத்திலே எவ்வகையான பெயர்களால் அழைக்கப்பட்டபோதிலும் அந்த வகுப்பாரில் யாதொரு வகுப்பைச்சேர்ந்த உத்தியோகத்திற்கும் வியாபிக்கச் செய்யலாம் :—

(1) கிராம கணக்கர்கள்.

(2) கிராம பெரியதனக்காரர்கள்.

(3) கிராம காவற்காரர்கள் அல்லது போலீஸ் உத்தியோகஸ்தர்கள்.

யாதொரு பூஸ்திதியிலுள்ள கிராம உத்தியோகஸ்தர் மேற்படி வகுப்புகளில் எதிலாவது அடங்குகிறாரா இல்லையா என்பதைப்பற்றிச் சந்தேகமுண்டாகிற விஷயத்திலே, அப்படிப்பட்ட கிராம உத்தியோகஸ்தர் ஷை வகுப்புகளில் யாதொன்றிலே அடங்குகிறாரா இல்லையாவென்றும், அப்படி அடங்குகிற பட்சத்தில் அவைகளிலே இன்ன வகுப்பில் அடங்குகிறாரென்றும் தீர்மானிக்க கவர்ன்மெண்டாருக்கு அதிகாரமுண்டு.

ரத்து.

3. இந்த ஆக்டாவது இதன் யாதொரு பாகமாவது யாதொரு பூஸ்திதியிலுள்ள கிராம கணக்கனுடைய உத்தியோகத்திற்கு வியாபிப்பதன்மேல், 1802-ம் வருஷத்திய சென்னபட்டணத்து 25-வது ரெகுலேஷன் 11-வது பிரிவும், (கர்ணம் உத்தியோகத்தை ஸ்தாபிப்பதற்காகவும் ஷை உத்தியோகத்தைச் சேர்ந்த அலுவல்கள் இன்னின்னவையென்று விவரிப்பதற்காகவும் ஏற்பட்ட ரெகுலேஷனாகிய) 1802-ம் வருஷத்திய சென்னபட்டணத்து

29-வது ரெகுலேஷனும் அப்படிப்பட்ட பூஸ்திதியில் செலாவணியாகாமல் நின்றுவிடவேண்டும்.

அர்த்தங்கூறும் பாகம்.

4. இந்த ஆக்டிலே சங்கதியினுலாவது முன்பின் தொடர்ச்சியினுலாவது விரோத மொன்றுமில்லாவிட்டால் " பூஸ்திதி " என்பது :—

பூஸ்திதி.

(a) ஜமீன்தாரியாயிருந்தாலும் ஜாகீராயிருந்தாலும் மிட்டாவாயிருந்தாலும் பாளயமாயிருந்தாலும் நிலையாய்ப் பைசலாதியான யாதொரு பூஸ்திதியென்றும்,

(b) நிலையாய்ப் பைசலாதியான அப்படிப்பட்ட பூஸ்திதியிலே கலெக்டருடைய ஆபீஸில் பிரத்தியேகமாய் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட யாதொரு பாகமென்றும்,

(c) பைசலாதியாகாத யாதொரு பாளயம் அல்லது ஜாகீர் என்றும்.

(d) ப்ரிடிஷ் கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்டோ அல்லது ஊர்ஜிதஞ் செய்யப்பட்டோ இருக்கிற யாதொரு இனும் கிராமமென்றும்,

(e) (a), (b), (c), குறிப்பிட்ட பாகங்களில் மேலேசண்ட பூஸ்திதிகளில் யாதொன்றைச்சேர்ந்த ஒரு கிராமமோ அல்லது பல கிராமங்களோ அடங்கிய யாதொரு பாகமானது நிலையான கீழ்க்காணியாட்சியாக வைத்துக்கொள்ளப்படுமானல் அப்படிப்பட்ட யாதொரு பாகமென்றும்.

அர்த்தமாகும்,

பூஸ்திதிக்குடையவர்.

" பூஸ்திதிக்குடையவர் " என்பது-யாதொரு பூஸ்திதி எவ்விடத்திலிருக்கிறதோ அந்த ஜில்லா கலெக்டருடைய ஆபீஸில் அந்தந்த காலத்திலேயே யார்பெயரால் அந்த ஸ்திதி ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறதோ அந்த நபரென்றும், மேலே (e) குறிப்பிட்ட பாகத்திற்கண்ட பூஸ்திதி விஷயமாக, அதை வைத்துக்கொண்டிருக்கிறவரென்றும் அர்த்தமாகும்.

யாதொரு பூஸ்திதி அதன் கூட்டுச்சொந்தக்காரர்களாக இரண்டு அல்லது பல நபர்களுடைய பெயர்களில் மேலேகண்டபடி ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிற விஷயத்திலே, இந்த ஆக்டின் காரியங்களுக்காக பூஸ்திதிக்குடையவர்-அந்த பூஸ்திதியின் நிர்வாக கர்த்தராக மற்றக் கூட்டுச்சொந்தக்காரர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற நபராவார், அல்லது விவாதமுண்டாகிற விஷயத்திலே தலைமையான கூட்டுச்சொந்தக்காரராகக் கலெக்டரால் ஒப்புக்கொண்டு ரெஜிஸ்டர் செய்யப்பட்டவராவர்.

கிராமம்.

"கிராமம்" என்பது-இந்த ஆக்ட்டாவது இதைச்சேர்ந்த யாதொரு பாகமாவது எதற்கு வியாபிக்கும்படி செய்யப்பட்டிருக்கிறதோ அந்த பூஸ்திதியிலிருக்கிறதும் அல்லது அந்த பூஸ்திதியாய் அமைந்திருக்கிறதும், இப்போது கிராமமாய் ஒப்புக்கொள்ளப்பட்டதாகவாகிலும் இனிமேல் இந்த ஆக்டின் காரியங்களுக்காகக்கிராமமாயிருக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டாரால் நிர்ணயிக்கப்படத் தக்கதாகவாகிலும் இருக்கிறதுமான யாதொரு பிரதேச விஸ்தீர்ணமென்று அர்த்தமாகும்.

கிராம உத்தியோகமும் கிராம உத்தியோகஸ்தரும்.

"கிராம உத்தியோகம்" என்பது-யாதொரு பூஸ்திதியின் விஷயத்திலே, 2-வது பிரிவின்படிக்கான விளம்பரத்தைக்கொண்டு இந்த ஆக்டாவது இதன் யாதொரு பாகமாவது வியாபிக்கும்படி செய்யப்பட்டிருக்கிற அம்மாதிரியான பூஸ்திதியிலிருக்கிற உத்தியோகமென்று அர்த்தமாகும்; மேலும், "கிராம உத்தியோகஸ்தர்" என்பது-அப்படிப்பட்ட உத்தியோகத்தை வைத்துக்கொண்டிருக்கிற நபரென்றாவது அந்த உத்தியோகத்துக்குரிய வேலைகளைச் செய்துகொண்டிருக்கிற நபரென்றாவது அர்த்தமாகும்.

2-ம் அத்தியாயம்.

கிராம சிப்பந்திகளும், அவர்கள் இத்தனை பேயர் இருக்கவேண்டு மென்பதும், அவர்களின் நேமகமும் மேல்விசாரணையும்.

கிராம உத்தியோகஸ்தர்களுடைய ரெஜிஸ்டரைக் கேட்கும்போது தயார்செய்து கலெக்டருக்கு அனுப்ப வேண்டுமென்பது.

5. ஜில்லா கலெக்ட்டரிடத்திலிருந்து சட்டளை வந்தபிறகு மூன்று மாதத்திற்குள்ளாக ஒவ்வொரு பூஸ்திதிக்குடையவரும்-தம்முடைய பூஸ்திதியில் வேலைக்கு அமர்ந்திருக்கிற கிராம உத்தியோகஸ்தர்கள் கிராம ஊழியக்காரர்கள் ஆகிய சகலருடைய விவரங்களும் அவர்களுடைய சன்மானங்களும் வேலைகளும் அடங்கிய ஒரு ரெஜிஸ்டரை, ரெவினியு போர்டாரால் நிர்ணயிக்கப்படவேண்டிய ஒரு நமூனப்படி தயார்செய்து, அதை ஜில்லா கலெக்டருக்கு அனுப்பவேண்டும்.

ஆனல், ஷை ரெஜிஸ்டரை அனுப்புவதற்காக ஏற்பட்ட காலவரையறையை ஷை கலெக்டர் தமக்கு யுக்தமாகத் தோற்றினல் அதிகப்படுத்தலாம்.

கிராமங்களைப் பிரிப்பதும் தொகுப்பதும்.

6. (1) பரிபாலனஞ்செய்வதற்கு அனுகூலமாயிருக்கும் பொருட்டு யாதொரு கிராமத்தின் எந்த பாகத்தையாவது பிரத்தியேகமான கிராமமாக ரெஜிஸ்டர் செய்வதாகிலும், யாதொரு பூஸ்திதியிலுள்ள இரண்டு அல்லது பல கிராமங்களையோ அந்த கிராமங்களின் பாகங்களையோ தொகுப்பதாகிலும் ஒன்ருய்ச் சேர்ப்பதாகிலும் யுக்தமென்று ஜில்லா கலெக்டருக்குத் தோற்றும்போதெல்லாம், அவர் அந்த கிராமத்தின் பாகத்தை ஏன் அவ்வாறு ரெஜிஸ்டர் செய்யக்கூடாதோ அல்லது அந்த கிராமங்களையாவது அவைகளின் பாகங்களையாவது ஏன் அவ்வாறு தொகுக்கக்கூடாதோ அல்லது ஒன்ருய்ச் சேர்க்கக்கூடாதோ அதற்குக் காரணத்தை நோடீஸ் சேர்ப்பித்தபின்பு மூன்று மாதத்திற் குள்ளாகத் தெரிவிக்கும்படி, அந்த கிராமம் அல்லது கிராமங்கள் எவ்விடத்திலிருக்கிறதோ அந்த பூஸ்திதியையுடையவருக்கும் உத்தேசிக்கப்பட்ட மாறுதலினல் வெகுவாய் பாதிக்கப்

படக்கூடிய கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் எழுத்து மூலமாய் நோடீஸ் கொடுக்கவேண்டும்,

(2) அந்த பூஸ்திதிக்குடையவர் அல்லது மேலேகண்ட கிராம உத்தியோகஸ்தர்கள் அப்படிப்பட்ட காரணத்தைத் தெரிவிக்கத்தவறுவாராகில், மேற்படி கலெக்டரானவர் அந்த நடவடிக்கைகளைப்பற்றிய தஸ்தவேஜுகளை ரெவினியு போர்டாருக்கு அனுப்பிய பிறகு, அந்த போர்டாருடைய அனுமதியை முன்னதாய்ப் பெற்றுக்கொண்டு, கிராமத்தின் அந்த பாகத்தையாவது அந்தப்படி தொகுக்கப்பட்ட அல்லது ஒன்றாய்ச்சேர்க்கப்பட்ட கிராமங்களையாவது கிராமங்களின் பாகங்களையாவது இந்த ஆக்ட்டின் காரியங்களின்பொருட்டுக் கிராமமாயிருப்பதாக ஜில்லா கெஜெட்டில் விளம்பர மூலமாய் நிர்ணயிக்கவேண்டும்: மேலும், அந்த விளம்பரத்தை அவர் மேற்கண்ட கிராமத்தில் பிரசித்தஞ் செய்விக்க வேண்டியதுமல்லாமல், அதற்கு ஒரு நகலை அந்த பூஸ்திதிக்குடையவருக்கு அனுப்பும்படி செய்யவும் வேண்டும். அந்தப்படி அனுமதிகொடுப்பதற்கு முன்னே ரெவினியு போர்டார் பூஸ்திதிக்குடையவராவது மேலேகண்ட கிராம உத்தியோகஸ்தர்களாவது பாதிக்கப்பட்ட வேறே எவர்களாவது கலெக்டர் தஸ்தவேஜு அனுப்பியது முதல் மூன்று மாதத்திற்குள்ளாகத் தங்களுக்கு ஏதேனும் விஷயங்களைத் தெரிவித்துக்கொண்டால் அவைகளைப்பற்றி யோசிக்கவேண்டும்.

(3) (1), (2) குறிப்பிட்ட உட்பிரிவுகளின்படிக்கான சகல நடவடிக்கைகளுக்காகவும் செலவு ஏதாவது பிடிந்தால் அது 28-வது பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராம ஊழிய நிதியிலிருந்து செலுத்தப்படும்.

கலெக்டர் உத்தரவு செய்கிறபடி சிட்டபந்தியை ஒவ்வொரு கிராமத்திலும் வைத்தாதரிக்க வேண்டுமென்பது.

7. ரெவினியு போர்டாருடைய உத்தரவுகளுக்குட்பட்டு ஜில்லா கலெக்டர் நிர்ணயிக்கக்கூடிய அந்தந்த கிராம உத்தியோகஸ்தர்களையும் அவ்விதமான கிராம உத்தியோகஸ்தர்களையும் ஒவ்வொரு கிராமத்திலும் வைத்தாதரிக்க வேண்டும்.

கிராம உத்தியோகஸ்தர்களில் நேரிடுகிற காலிகளைக் குறித்து பூஸ்திதிக்குடையவர் ரிபோர்ட் செய்யவேண்டுமென்பது.

8. கிராம உத்தியோகஸ்தர் இறந்துபோனதனாலாவது ராஜிநாமா கொடுத்ததனாலாவது நேரிட்ட ஒவ்வொரு காலியைப்பற்றியும், அது நேரிட்ட தினத்திற்குப்பிறகு முப்பது தினத்திற்குள்ளாக; அந்த கிராமமிருக்கிற ஜில்லாவின் டிவிஷன் விசாரணை ரெவினியு உத்தியோகஸ்தருக்கு பூஸ்திதிக் குடையவர் ரிபோர்ட் செய்யவேண்டும்.

பூஸ்திதிக்குடையவர் நூதனமாய் உத்தியோகஸ்தரை நியமித்து அந்த சங்கதியைக் குறித்து டிவிஷன் உத்தியோகஸ்தருக்கு ரிபோர்ட் செய்ய வேண்டுமென்பது.

9. யாதொரு கிராம உத்தியோகத்தில் காலி நேரிடும் போதாவது, நூதனமாய் ஏற்படுத்தப்பட்ட கிராம உத்தியோகத்துக்கு கிராம உத்தியோகஸ்தரை நியமிக்க வேண்டுமென்று ஜில்லா கலெக்டர் உத்தரவுசெய்யும்போதாவது, கிராம பூஸ்திதிக்குடையவர் - ஆறு வாரத்திற்குள்ளாக அப்படிப்பட்ட காலியான அல்லது நூதனமாய் ஏற்படுத்தப்பட்ட கிராம உத்தியோகத்துக்கு ஒருவரை நியமித்து, ரெவினியு போர்டார் 32-வது பிரிவின்படி செய்யப்பட்ட விதிகளைக்கொண்டு நிர்ணயிக்கக்கூடிய நமூனைப்படி எழுத்துமூலமாய் அந்த நேமகத்தைக்குறித்து, அந்த கிராமமிருக்கிற ஜில்லாவின் டிவிஷன் விசாரணை ரெவினியு உத்தியோகஸ்தருக்கு நோடிஸ் அனுப்பவேண்டும்.

நேமகங்கள்செய்யும்போது அனுசரிக்கவேண்டிய விதிகள்.

எல்லா விஷயங்களிலும் வேண்டியிருக்கிற பொதுவான யோக்கியதாம்சங்கள்.

10. 9-வது பிரிவின்படி நேமகம் செய்யும்போது அடியிற்கண்ட உட்பிரிவுகளி லடங்கிய விதிகளை பூஸ்திதிக்குடையவர் அனுசரிக்கவேண்டும் :—

(1) எவரும்—

(a) ஆண்பாலராயிராவிட்டாலும்,

(b) வயது வந்த பருவம் அடைந்திரா விட்டாலும்,

(c) உத்தியோகத்தின் அலுவல்களை நடத்துவதற்கான தேகதிடமும் மனோதிடமும் இல்லாதவராயிருந்தாலும்,

(d) 32-வது பிரிவின்படி செய்யப்பட்ட விதிகளைக்கொண்டு ரெவினியு போர்டாரால் பிரஸ்தாப உத்தியோகத்திற்கென்று நிர்ணயிக்கப்பட்ட வித்தியா விஷயமான பரீட்சையின்படி யோக்கியதை பெற்றிரா விட்டாலும்,

(e) யாதொரு குற்றஞ்செய்ததாக க்ரிமினல் கோர்ட்டாரால் குற்றம் ஸ்தாபிக்கப்பட்டு, அதனுல் உத்தியோகத்தை வகிக்க யோக்கியதையற்றவராய் விட்டாரென்று டிவிஷன் விசாரணை ரெவினியு உத்தியோகஸ்தராவது ஜில்லா கலெக்ட்டராவது அபிப்பிராயப் பட்டாலும்,

யாதொரு கிராம உத்தியோகத்துக்கு நியமிக்கப்பட அர்ஹராக மாட்டார்.

பரம்பரையான உத்தியோக விஷயத்தில் ஜேஷ்ட புத்திரசுதந்தரத்தை அனுசரிக்கவேண்டு மென்பது.

(2) பரம்பரையான எல்லாக்கிராம உத்தியோகங்களுக்கும் ஒருவருக்குப்பின் வேறொருவர் வருகிற சுதந்தரமானது-தென் இந்தியாவில் பாகிக்கத்தக்கதல்லாத ஜமீன்தாரிகளுக்கு ஒருவர்பின் வேறொருவர் வருகிற விஷயத்தைக்குறித்துச் சாதாரண வழக்கமும் ஜேஷ்ட புத்திர சுதந்தர விதியும் எப்படியிருக்கிறதோ அதற்கேற்றபடி ஒரே வாரிஸுக்குக் கிடைக்கவேண்டும்.

சில விஷயங்களிலே நேரானவாரிஸு தவிர வேறே நபரை நியமிக்கலாம்.

(3) பரம்பரையான கிராம உத்தியோகத்துக்கு அடுத்துவருகிற வாரிஸு (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யோக்கியதை பெற்றிராத விஷயத்திலே, பூஸ்திதிக்குடையவர் அவருக்குப்பின் அடுத்து அந்தப்படி யோக்கியதை பெற்றிருக்கிற நபரை நியமிக்கவேண்டும்; மேலும், அந்த சந்ததியில் அப்படிப்பட்டவரெவரும் இராவிட்டால் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கிரமமாய் யோக்கியதாம்சம்பெற்ற எந்த நபரையாவது நியமிக்கலாம்,

11. (1) நியமிக்கப்பட்ட நபர் முந்திய பிரிவின் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யோக்கியதையற்றவராயிருக்கிறாரென்று, 9-வது பிரிவின்படி நேமகத்தைப் பற்றிய நோடிஸ் யாருக்கு அனுப்பப்படுகிறதோ அந்த ரெவினியு உத்தியோகஸ்தர் அபிப்பிராயப் படுவாராகில் அவர் அந்த நேமகத்தைப் பற்றிய மேற்படி நோடிஸைப் பெற்றுக்கொண்ட தேதி முதல் மூன்று மாதத்திற்குள் யாதொரு காலத்திலும், 10-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவிலுள்ள (c), (e) குறிப்பிட்ட பாகங்களில் அடங்குகிற விஷயங்களிலே, பிரஸ்தாப நபர்களுக்கு நோடிஸ் கொடுத்து விசாரணைசெய்தானபிறகும், தமக்குள்ள ஆட்சேபனைகளைப் பதிவு செய்து, வேறொருவரை நியமிக்கும்படி பூஸ்திதிக்குடையவருக்கு உத்தரவுசெய்யலாம்; அதன்மேல் பூஸ்திதிக்குடையவர் - அப்படிப் பட்ட உத்தரவு வந்து சேர்ந்த பிறகு ஆறுவாரத்திற்குள்ளாக அந்தப்படியே செய்து, ஷை ரெவினியு உத்தியோகஸ்தருக்கு அந்த நூதனநேமகத்தைப்பற்றி நோடீஸ் அனுப்பவேண்டும். ஆனால், பூஸ்திதிக்குடையவரால் முதலில் நியமிக்கப்பட்டவர் - தம்முடைய நேமகம் ரத்தாகித் தமக்குப் பார்த்தியாக வேறொருவர் நியமிக்கப்படுகிற வரையில் அந்த உத்தியோகத்தைச்சேர்ந்த அலுவல்களைச் செய்துகொண்டுவர வேண்டியதுமல்லாமல், அதைக்குறித்த சன்மானங்களுக்கு அர்ஹருமாவார்.

> சில விஷயங்களில் விசாரணை நடத்திய பிறகு வேறொருவரை நியமிக்கவேண்டுமென்று பூஸ்திதிக்குடையவருக்கு டிவிஷன் உத்தியோகஸ்தர் உத்தரவு செய்யலாம்.

(2) 9-வது பிரிவில் குறிக்கப்பட்ட நேமகத்தைப்பற்றிய நோடீஸாவது (1) குறிப்பிட்ட உட்பிரிவில் குறிக்கப்பட்ட நூதன நேமகத்தைப்பற்றிய நோடீஸாவது நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள்ளாக வரப்பெற்றுக்கொள்ளப்படாவிட்டாலும், மேலே கண்டபடி நோடீஸ்கொடுத்து விசாரணை செய்தானபின்பு (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நூதனமாய் நியமிக்கப்பட்ட நபரும் மேலேகண்டபடி யோக்கியதையற்றவராயிருப்பதாக மேற்படி ரெவினியு உத்தியோகஸ்தர் அபிப்பிராயப்பட்டாலும், அந்த உத்தியோகஸ்தரானவர் - 10-வது பிரிவின்படி சரியாய் யோக்கிய தாம்சம் பெற்றிருக்கிற யாதொரு நபரைத் தாமேதெரிந்தெடுத்து நேமகம் செய்யலாம்.

> சில விஷயங்களில் டிவிஷன் உத்தியோகஸ்தர் தாமே நேமகம் செய்யலாம்.

அப்பீல் செய்து கொள்ளலாமென்பது.

(3) இந்தப் பிரிவின்படி யாதொரு நேமகம் ஒப்புக்கொள்ளப்படாவிட்டால், ஒரு மாதத்திற்குள்ளாக ஜில்லா கலெக்டருக்கு அப்பீல் செய்துகொள்ளலாகும்; அல்லது, நேமகத்தை ஒப்புக்கொள்ளாத உத்தியோகஸ்தர் ஜில்லா கலெக்டராயிருந்தால், மூன்று மாதத்திற்குள்ளாக ரெவினியு போர்டாருக்கு அப்பீல் செய்துகொள்ளலாகும்.

சில சந்தர்ப்பங்களிலே கடைசியாக உத்தியோகத்தை வகித்திருந்தவருடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரின் நேமகம் கூடாதென்று தடுக்கலாம்.

12. பாரம்பரையான யாதொரு கிராம உத்தியோகமானது அதைக் கடைசியாக வகித்திருந்தவர் வேலையினின்றும் நீக்கிவிடப்பட்டதனாலாவது சிறிது காலத்திற்கு நீக்கிவைக்கப்படுவதனாலாவது காலியானால், அவரை வேலையினின்று முற்றிலும் அல்லது சிறிது காலத்திற்கு நீக்கின அதிகாரியானவர்—கடைசியாக அவ்வேலையை வகித்திருந்தவர் இறந்துபோகிற வரையிலாவது மறுபடியும் வேலைக்கு வருகிறவரையிலாவது அந்த உத்தியோகத்தின் அலுவல்கள், முற்றிலும் அல்லது சிறிது காலத்திற்கு நீக்கப்பட்ட அந்த உத்தியோகஸ்தருடைய குடும்பத்தின் அவிபக்தராயிராமல் 10-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி சரியாய் யோக்கியதாம்சம் பெற்றும், டிவிஷன் விசாரணை ரெவினியு உத்தியோகஸ்தருடைய அங்கீகாரத்திற்குட்பட்டு, பூஸ்திதிக்குடையவரால் நியமிக்கப்படவேண்டியவராயுமிருக்கிற யாதொரு நபரால் நடத்தப்படவேண்டுமென்று கட்டளையிடலாம்.

ஆனால், வேலையிலிருந்து நீக்கிவிடப்பட்ட உத்தியோகஸ்தர் இறந்துபோனாலும், சிறிதுகாலத்திற்கு நீக்கிவைக்கப்பட்ட உத்தியோகஸ்தர் அவ்வாறு நீக்கிவைக்கப்பட்டிருக்கும் காலத்தில் இறந்துபோனாலும், அப்படிப்பட்ட மரணத்தினால் நேரிட்ட காலிக்கு 10-வது பிரிவு (2), (3) குறிப்பிட்ட உட்பிரிவுகளிற்கண்ட நிபந்தனைகளின்படி பர்த்திசெய்யவேண்டும்.

கடைசியாக உத்தியோகத்தை வகி

13. யாதொரு பாரம்பரையான கிராம உத்தியோகத்திற்கு ஒருவருக்குப் பின்புவர வேறேவகையினால் அர்ஹராயிருப்பவர் மைனராயிருந்தால், கடைசியாய் அவ்

த்திருந்தவருடைய வாரிஸா மைனரா யிருந்தால் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை.

வுத்தியோகத்தை வகித்திருந்தவருடைய வாரிஸாக ரெஜிஸ்டர் செய்யும்படி டிவிஷன் விசாரணை ரெவினியு உத்தியோகஸ்தருக்கு அவருடையபெயரை பூஸ்திதிக்குடையவர் எழுதி அனுப்பவேண்டியது மல்லாமல் அப்படிச் செய்வதுடன் ஷை ரெவினியு உத்தியோகஸ்தருடைய அங்கீகாரத்திற்குட்பட்டு, வாரிஸென்று ரெஜிஸ்டர் செய்யப்பட்ட நபர் வயதுவந்த பருவமடையும்போதாவது அதற்குப்பிறகு மூன்றுவருஷத்திற்குள்ளாவது தானே அந்த உத்தியோகத்தின் அலுவல்களை நடத்த 10-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யோக்கியதை யடைகிறவரையிலே, 10-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யோக்கியதைபெற்ற வேறே நபர் எவரையாகிலும் அந்த உத்தியோகத்தின் அலுவல்களைச் செய்ய நியமிக்கவேண்டும். மைனர் வயது வந்த பருவமடையும்போதாவது அதற்குப்பிறகு மூன்று வருஷத்திற்குள்ளாவது மேலேகண்டபடி யோக்கியதாம்சம் பெற்றிருக்குங்காலத்தில், அவரை அந்த வேலைக்கு பூஸ்திதிக்குடையவர் நியமிக்கவேண்டும்.

இந்தப் பிரிவின்படி வாரிஸாக ரெஜிஸ்டர் செய்யப்பட்டவர் இறந்துபோனாலும், வயது வந்த பருவமடைந்தபிறகு மூன்று வருஷம்வரையில் 10-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யோக்கியதையற்றவராகவே யிருந்தாலும் அந்த காலிக்கு 10-வது பிரிவு (2), (3) குறிப்பிட்ட உட்பிரிவுகளிலுள்ள நிபந்தனைகளின்படி பர்த்திசெய்யவேண்டும்.

உத்தியோகஸ்தர் ராஜிநாமா கொடுத்தாலும் தள்ளிவிடப்பட்டாலும் நீக்கப்பட்டாலும் சிறிதுகாலம்வரையில் நீக்கிவைக்கப்பட்டாலும் சாதாரணமாய் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறை.

14. (1) பரம்பரையான கிராம உத்தியோகத்திலிருந்தவர் ராஜிநாமா கொடுத்த காரணத்தினலாவது தள்ளிவிடப்பட்ட காரணத்தினலாவது நீக்கப்பட்ட காரணத்தினலாவது சிறிதுகாலம் வரையில் நீக்கிவைக்கப்பட்ட காரணத்தினலாவது காலி நேரிடுமாகில், அவரைத் தள்ளிவிட்ட அல்லது சிறிதுகாலம் வரையில் நீக்கிவைத்த அதிகாரியானவர் 12-வது பிரிவில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறபடி கட்டளை செய்யாமலிருக்கிற பட்சத்திலே, மேற்படி உத்தியோகஸ்தர் இறந்துபோனதனல் காலி நேரிட்டிருந்தாற்போல இந்த ஆக்டின் நிபந்தனைகளின்படி

அந்த காலிக்குப் பார்த்திசெய்யவேண்டும்; ஆனால், சிறிதுகாலம் வரையில் நீக்கிவைக்கப்பட்ட உத்தியோகஸ்தர் எவ்வளவு காலத்திற்கு அவ்வாறு நீக்கிவைக்கப்பட்டாரோ அந்தக்காலம் கழிந்ததன் மேலாகிலும் தள்ளிவிடப்பட்ட அல்லது நீக்கப்பட்ட அல்லது சிறிது காலம் வரையில் நீக்கிவைக்கப்பட்ட உத்தியோகஸ்தர் எந்த உத்தியோகத்தினின்றும் தாம் தள்ளிவிடப்பட்டிருக்கிறாரோ நீக்கப்பட்டிருக்கிறாரோ அல்லது சிறிதுகாலம் வரையில் நீக்கிவைக்கப்பட்டிருக்கிறாரோ அந்த உத்தியோகத்துக்கு எந்தக் காரணத்தினாலாவது மீண்டும் வரும்படி அநுமதிகொடுக்கப்பட்டாலும், மேலே சண்டபடி சிறிது காலம் வரையில் நீக்கிவைத்த அல்லது முற்றிலும் தள்ளிவிட்ட அல்லது நீக்கிய காரணத்தினால் நேரிட்ட காலிக்குப்பார்த்தியாய் நியமிக்கப்பட்ட நபர் அவ்வுத்தியோகத்தை விட்டு நீங்கவேண்டும்.

(2) 11-வது பிரிவிலுள்ள நிபந்தனைகள் - இந்தப்பிரிவின்படிக்கும், 12-வது 13-வது பிரிவுகளின்படிக்கும் செய்யப்படவேண்டிய நேமகங்களுக்கு அவசியமான மாறுதலுடனே பிரயோகப்படும்.

தொகுக்கப்பட்ட கிராமங்களிலும் பிரிக்கப்பட்ட கிராமங்களிலும் இன்னவிதமாய் நேமகங்கள் செய்யவேண்டுமென்பது.

15. (1) இரண்டு அல்லது பல கிராமங்களாவது அவைகளின் பாகங்களாவது ஒரே நூதன கிராமமாயிருக்கும்படி இந்த ஆக்ட்டின் பிரகாரம் தொகுக்கப்பட்டாலும் ஒன்றாக்கப்பட்டாலும், யாதொரு கிராமம் இரண்டு அல்லது பல கிராமங்களாகப் பிரிக்கப்பட்டாலும், அந்தப்படி தொகுக்கப்பட்ட அல்லது ஒன்றாக்கப்பட்ட அல்லது பிரிக்கப்பட்ட கிராமங்கள் அல்லது கிராமத்தின் எல்லாக்கிராம உத்தியோகங்களும் எடுபட்டுப்போய், அவ்வாறு எடுபட்டுப்போன உத்தியோகங்களில் எதுவாகிலும் பரம்பரையானதாயிருந்தால், பரம்பரையான நூதன உத்தியோகங்கள் நூதன கிராமம் அல்லது கிராமங்களுக்காக ஏற்படாகவேண்டும். அப்படிப்பட்ட நூதன உத்தியோகங்களுக்கு நபர்களை ஏற்படுத்துகையிலே, பூஸ்திதிக்குடையவர் எடுத்துவிடப்பட்ட உத்தியோகங்களைக் கடைசியாய் வகித்திருந்தவர்களுடைய குடும்பங்களுக்குள்ளே மிகவும் தேர்ச்சி அடைந்தவர்களென்று தாம் அபிப்பிராயப்படுகிற நபர்களைத் தெரிந்தெடுக்கவேண்டும்; மேலும், அவர் தாம் செய்த விஷயபுத்தைக படி வி

ஷன் விசாரணை ரெவினியு உத்தியோகஸ்தருக்கு ரிபோர்ட் பண்ண வேண்டும்.

சிப்பந்தி குறைக்கப்படுகிற விஷயத்தில் யாரைவைத்துக்கொண்டிருக்க வேண்டுமென்பது.

(2) யாதொரு கிராமத்தில் ஏதாவது ஒரு வகுப்பைச் சேர்ந்ததாய் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கிராம உத்தியோகங்கள் ஏற்பட்டிருந்து, ஜில்லா கலெக்டரானவர் 7-வது பிரிவின்படி பிரவர்த்தித்து அப்படிப்பட்ட உத்தியோகங்களின் சங்கியையக்குறைப்பது அவசியமென்று அபிப்பிராயப்பட்டால், அவர் அதைக்கண்டு பூஸ்திதிக்குடையவருக்கு நோடீஸ் கொடுக்கவேண்டும்; அதன்மேல், பூஸ்திதிக்குடையவர் இனி அவசியமில்லாத உத்தியோகஸ்தர்களை வேலையினின்று நீக்கிவிட்டு, மிகுதியாயிருக்கும் உத்தியோகங்களின் அலுவல்களை நடத்துவதற்கு மிகவும் சிறந்த யோக்கியதை பெற்றவர்களென்று தமக்குத் தோற்றுகிறவர்களை நீக்காமல் வைத்துக்கொண்டு, தாம் செய்த விஷயத்தை அந்த டிவிஷன் விசாரணை ரெவினியு உத்தியோகஸ்தருக்கு ரிபோர்ட் பண்ணவேண்டும்.

சில விஷயங்களில் பூஸ்திதிக்குடையவருடைய அதிகாரங்களை டிவிஷன் உத்தியோகஸ்தர் செலுத்தலாமென்பது.

(3) நூதன உத்தியோகங்கள் ஏற்பட்ட பிறகாவது கிராம உத்தியோகங்களின் சங்கியையைக் குறைக்கவேண்டுமென்று கட்டளையிடுகிற ஜில்லா கலெக்டருடைய நோடீஸ் பிறந்த பிறகாவது ஆறுவாரத்திற்குள்ளாக (1), (2) குறிப்பிட்ட உட்பிரிவுகளில் பிரஸ்தாபிக்கப்பட்ட ரிபோர்ட்டை பூஸ்திதிக்குடையவர் அனுப்பத் தவறுவாராகில், (1), (2) குறிப்பட்ட உட்பிரிவுகளின்படி பூஸ்திதிக்குடையவருக்குக் கிடைத்திருக்கும் அதிகாரங்களை அந்த டிவிஷன் விசாரணை ரெவினியு உத்தியோகஸ்தர் செலுத்தலாம்.

இதுவிஷயத்தில் பிரத்தியேகமாய் அதிகாரங் கொடுக்கப்பெற்றால் பூஸ்திதிக்குடையவர் அப்பில் செய்து

16. (1) யாதொரு கிராம உத்தியோகஸ்தர் அப்படிப்பட்ட உத்தியோகஸ்தராகத் துர் நடத்தை நடந்தாலும் வேலையை அசட்டைசெய்தாலும், ரெவினியுபோர்டாரால் இது விஷயத்திற்கென்று அதிகாரங்கொடுக்கப்பெற்ற பூஸ்திதிக்குடையவர் விசாரணைசெய்து பின்பு மூன்று ருபாய் வரையில் அந்த கிராம உத்-

சொல்வதற் குட்பட்டுக் கிராம உத்தியோகஸ்தர்களை அபராதம் விதித்துத் தண்டிக்கலாம்.

தியோகஸ்தருக்கு அபராதம் விதிக்கலாம்; மேலும், அவர் அந்தப்படி செய்வதற்குத் தமக்குள்ள நியாயங்களை எழுதிவைத்து அதற்கொரு நகலை அந்த கிராம உத்தியோகஸ்தருக்கும் அந்த டிவிஷன் விசாரணை ரெவினியு உத்தியோகஸ்தருக்கும் சவதரிக்கவேண்டும். அந்த நகல் சவதரிக்கப்பட்ட தேதி முதல் ஒருமாதத்திற்குள்ளாக அப்படிப்பட்ட அபராதத்தின்மேல் மேற்படி ரெவினியு உத்தியோகஸ்தருக்கு அப்பீல் செய்துகொள்ளலாகும்; அவருடைய தீர்மானம் முடிவானதாகும்.

யாதொரு பூஸ்திதிக்குடையவருக்கு ரெவினியு போர்டாரால் இந்த உட்பிரிவின்படி கொடுக்கப்பட்ட அதிகாரங்களை எப்போதாவது எடுத்துவிடலாம்.

கலெக்டரும் டிவிஷன் உத்தியோகஸ்தரும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு அபராதம் விதிக்கலாம் அவர்களைச்சிறிதுகாலம் வரையில் நீக்கிவைக்கலாம், தள்ளிவிடலாம் அல்லது நீக்கலாம்.

(2) யாதொரு கிராம உத்தியோகஸ்தர் அப்படிப்பட்ட உத்தியோகஸ்தராகத் துர்நடத்தை நடந்தாலும் வேலையை அசட்டை செய்தாலும் திறமையற்றவராயிருந்தாலும் கிராமத்தில் வசிக்காவிட்டாலும், ஜில்லா கலெக்ட்டராவது மேலேகண்ட ரெவினியு உத்தியோகஸ்தராவது தாமேயாகிலும் பிராதுசெய்வதன்மேலாகிலும் விசாரணை பண்ணின பிறகு அந்த கிராம உத்தியோகஸ்தருக்கு அபராதம் விதிக்கலாம், அவரை வேலையிலிருந்து சிறிது காலம் வரையில் நீக்கிவைக்கலாம், அல்லது தள்ளிவிடலாம் அல்லது நீக்கிவிடலாம்; மேலும், அவர் அந்தப்படி செய்யத் தமக்குள்ள நியாயங்களை எழுதிவைத்து, அதற்கொரு நகலை இது விஷயத்தில் சம்பந்தப்பட்ட பூஸ்திதிக்குடையவருக்கும் கிராம உத்தியோகஸ்தருக்கும் சவதரிக்கவேண்டும். 10-வது பிரிவு (1)-வது உட்பிரிவைச்சேர்ந்த (e) குறிப்பிட்ட பாகத்திற்கண்ட மாதிரியான குற்றம் செய்ததாகத் தீர்மானிக்கப்பட்ட ஒவ்வொரு கிராம உத்தியோகஸ்தரும் வேலையிலிருந்து தள்ளிவிடப்படுவார்.

(3) (2)குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஜில்லா கலெக்ட்டராவது மேலேகண்ட ரெவினியு உத்தியோகஸ்தராவது செய்த பிரதி உத்தரவின் மேலும் சந்தர்ப்பத்துக்

(2) குறிப்பிட்ட உட்பிரிவின் படி

செய்யப்பட்ட உத்தரவுகளின்மேல் அப்பீல்.

கேற்றபடி மூன்று மாதத்திற்குள்ளாக ரெவினியு போர்டாருக்கும் ஒரு மாதத்திற்குள்ளாக ஜில்லா கலெக்டருக்கும் அப்பீல் செய்துகொள்ளலாகும்.

சந்தர்ப்பத்திற்கேற்றபடி ரெவினியு போர்டாருக்காவது ஷை கலெக்டருக்காவது செய்யப்பட்ட அப்பீலின்மேல் கொடுக்கப்பட்ட தீர்மானம் முடிவானதாகும்; ஆனால், கிராம உத்தியோகஸ்தரை வேலையிலிருந்து தள்ளி விடுவதற்காக டிவிஷன் விசாரணை ரெவினியு உத்தியோகஸ்தர் செய்த உத்தரவை அப்பீலில் ஊர்ஜ்ஜிதம்பண்ணுகிற ஜில்லா கலெக்டருடைய உத்தரவின்மேல் மூன்று மாதத்திற்குள்ளாக ரெவினியு போர்டாருக்கு இரண்டாவது அப்பீல் செய்து கொள்ளலாகும்.

௫-ம் அத்தியாயம்.

கிராமவூழிய (ஸேவ்) வரியும், அதன் தொகையும் பங்கீடும், அதை விதித்து வசூல்செய்யும் விதமும், அதைச்சேர்ந்த விஷயங்களும்.

க்விட்ரென்ட் விதித்துக்கிராம ஊழிய இனுங்களை கவர்ன்மெண்டார் ஊழிய நிபந்தனையினின்று நிவர்த்திக்கலாம்.

17. கிராம உத்தியோகத்தின் வருமானம் முழுமைக்குமாவது சிறிதுமட்டிலாவது நிலங்களாயிருந்தாலும் கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்டாவது அப்படிப்பட்ட கிராம உத்தியோகத்தின் விஷயமாக இருந்து வரும்படி விடப்பட்டாவது அந்த உத்தியோகத்தோடு சேர்க்கப்பட்டாவதிருந்து நிலங்களின் விஷயமாகச் செலுத்தத்தக்கதாயுள்ள தீர்வையில் ஒப்படைகளாயிருந்தாலும், நிலைபாய்ப் பைசலாகியாகாத கிராமங்களில் கிராமவூழிய இனுங்களை ஊழிய நிபந்தனையினின்று நிவர்த்திப்பதைக் குறித்து அந்தந்த காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கிற விதிகளின்படிக்காவது கவர்ன்மெண்டாரால் இதுவிஷயத்திற்கென்று ஏற்படுத்தப்படும் விதிகளின்படிக்காவது க்விட்ரென்ட் விதித்துக் கவர்ன்மெண்டார் மேற்படி நிலங்களை ஊழிய நிபந்தனையினின்று நிவர்த்திக்கலாம்; கிராமவூழிய-

ஊழிய நிபந்தனையினின்று நிவர்த்தித்தவிஷயம் இன்னதேதி முதல் செலாவணியாக வேண்டுமென்பது.

வரி விதித்து வசூல்செய்வதற்காக 19-வது பிரிவின்படி பிறப்பிக்சப் பட்ட விளம்பரத்தில் நிர்ணயிக்கப்படும் தேதியிலாவது அதன் பிறகா வது, மேலே ஊழிய நிபந்தனையினின்று நிவர்த்தியானது செலாவணி யாகவேண்டும்.

விலக்குகள்.

ஆனுல், இந்த ஆக்ட் வழங்குகிற காலத்திலே நிலங்கள் அல்லது மேலேசண்ட ஒப்பலடகள் ஆதியில் எதற்காகக் கொடுக்கப்பட்டனவோ அந்தக் காரியத்திற்கு உப யோகிக்கப்படாவிட்டபோதிலும், மேற்படி ஊழிய நிபந்தனையினின்று நிவர்த்தியானது அப்படிப்பட்ட சகல நிலங்கள் அல்லது ஒப்படைக ளுக்கும் பிரயோகப்படத்தக்கதாகும்; மேலும், கிராம வூழியத்தின் சன்மானத்திற்காக பூஸ்திதிக்குடையவரால் கொடுக்சப்பட்டு இன் னும் அந்தப்படியே வைத்துக்கொள்ளப்பட்டாவது அனுபவிக்கப் பட்டாவது இருக்கிற எவ்வகையான நிலங்களையாகிலும் நிலங்களி லிருந்து கிடைத்த வருமானங்களையாகிலும், அவைகளைக் கொடுத்த வர் அல்லது அவருடைய பிரதிநிதி மறுபடியும் எடுத்துக்கொள்ள லாம்.

ஊழியநிபந்தனை யினின்று நிவர்த்தி க்கப்பட்ட இனுங் களுக்கு பூஸ்திதிக் குடையவர் க்விட் ரென்ட்வசூல்செய் வது

வசூல்செய்வதற் குப் படிக்குப்செல வுக்காக பூஸ்திதிக் குடையவருக்கு ப் பிரதிபலன்.

பாக்கி வசூல்செ ய்யும் விதம்.

18. அடுத்து முந்திய பிரிவின்படி தம்முடைய பூஸ்திதியிலே நிலங்களுக்கு விதிக்கப்பட்ட க்விட்ரென்டை பூஸ் திதிக்குடையவர் வசூல்செய்து, 32-வது பிரிவின் படி செய்யப்பட்ட விதிகளை அனுசரித்து ரெவி னியு போர்டார் நிர்ணயிக்சக்கூடிய வாயிதாக்களா கவும் காலங்களிலும் கவர்ன்மென்டாருக்குச் செ லுத்தவேண்டும். அந்தப்படி வசூல்செய்வதற்கா கப் பிடிக்கும் செலவு சட்டிப்போகும்படி, பூஸ்தி திக்குடையவர் வசூல் செய்யப்படவேண்டிய தொகையில் நூற்றுக்குப் பத்துவீதம் கழித்துக்கொ ள்ள அவருக்குச் அதிகாரமுண்டு; அப்படிப்பட்ட க்விட்ரென்டானது 1864-ம்ஹூத்திய சென்னபட் டணத்து 2-வது ஆக்டின்படி நிலவருமான பாக்கி யாயிருந்தாற்போல பூஸ்திதிக்குடையவரிடத்திலிருந்து வசூல்செய் யப்படத்தக்கதாகும்; அந்த க்விட்ரென்டானது-குத்தகை பாக்கியா யிருந்தாற்போல, ஊழிய நிபந்தனையினின்று நிவர்த்திக்கப்பட்ட

இனும் வைத்துக்கொண்டிருக்கிறவரிடத்திலிருந்து பூஸ்திதிக்குடைய வரால் 1865-ம்வரு.த்திய சென்னபட்டணத்து 8-வது ஆக்ட்டின் நிபந்தனைகளின்படி வசூல்செய்யப்படத்தக்கதாகும்; அப்படிப்பட்ட க்விட்ரெண்ட் எதன் விஷயமாக விதித்து வசூல் செய்யப்படத்தக்க தோ அந்த நிலங்களின்மேல் பிரதம பொறுப்பான தொகையாகும்.

ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராம ஊழிய வரி.

19. யாதொரு ஜில்லாவிலுள்ள பூஸ்திதிகளின் எல்லைக்குள் அடங்கிய சகல அனுபோக நிலங்களின் வருஷாந்தா குத்தகை மதிப்பின்மேல் ரூபாய்க்குப் பத்து தம்பிடிக்கு மேற்படாத வீதப்படி, ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராமவூழிய வரியென்று வழங்கவேண்டிய ரொக்கவரியை, அப்படிப்பட்ட பூஸ்திதிகள் எல்லா வற்றின் விஷயமாகவாவது அவைகளில் எதன் விஷயமாகவாவது கவர்ன்மெண்டார் விளம்பரம் பிரசுரஞ்செய்யும் தேதிமுதல் விதித்து வசூல்செய்ய வேண்டுமென்று கட்டளையிட கவர்ன்மெண்டாருக்கு அதிகாரமுண்டு. அந்த வீதமானது-ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரே மாதிரியாய் இருக்கவேண்டியது மல்லாமல் 28-வது பிரிவின்படி ஏற்பட்ட ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராமவூழிய நிதியின் இதர ஐவேஜுகளுடன் எந்தத்தொகை சேர்ந்தால், இந்த ஆக்டின் வியாபகத்துக்குள்ளாக்கப்பட்ட சகல கிராம சிப்பந்திகளின் செலவும், அவர்களுடைய அலுவல்களை நடத்துவதற்காவது ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராமவூழிய நிதியின் பரிபாலனத்திற்காவது சம்பந்தப்பட்ட எல்லா செலவுகளும், மேற்படி ஜில்லாவுக்குள் 6-வது பிரிவின்படி நடத்தப்பட்ட சகல நடவடிக்கைகளின் செலவும் சரிக்கட்டிப்போவதற்குப் போதுமானதாயிருக்குமோ, அந்தத் தொகை சேருவதற்கேற்றபடி கூடியவரையில் நிர்ணயிக்கப்படவும் வேண்டும்.

வீதத்தை இன்னபடி நிர்ணயிக்க வேண்டுமென்பது.

நிலங்களின் வருஷவாரி குத்தகை மதிப்பை (கிராம ஊழிய) வரியின் காரியங்களுக்காக இன்னபடி கணக்கிடவேண்டுமென்பது.

20. மேற்கண்ட வருஷவாரி குத்தகை மதிப்பை அடியிற்கண்ட விதமாகக் கணக்கிட வேண்டும்:—

குத்தகைதாரர்கள் அனுபவிக்கிற நிலங்கள் விஷயத்தில்.

(i) குத்தகைதாரர்கள் அனுபவிக்கிற நிலங்களின் விஷயத்திலே, பூஸ்திதிக்குடையவருக்கு அந்த குத்தகைதாரர்கள் செலுத்தவேண்டிய வருஷவாரி குத்தகைத்தொகையும், அந்த நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காகக் கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தத்தக்க யாதொரு நீர்பாய்ச்சு வரியும் அந்த நிலங்களின் வருஷவாரி குத்தகை மதிப்பாகக் கொள்ளப்படும். நிலங்கள் பூஸ்திதிக் குடையவராலேயேயாவது, குத்தகையில்லாமல் ஜாரியாக வாகிலும், அக்கம்பக்கத்திலுள்ள அதேவிதமான அதே தரவாரி நிலங்களுக்காகச் சாதாரணமாய்ச் செலுத்தப்படுகிற குத்தகைத்தொகைக்குக் குறைந்த குத்தகைத் தொகைக்காகவாகிலும் அவரிடத்தில் நிலம்பெற்றுக்கொண்ட எவராலாவது அனுபவிக்கப்படுகிற விஷயத்தில், வருஷவாரி குத்தகை மதிப்பானது - அக்கம்பக்கத்திலுள்ள அதேவிதமான அதே தரவாரி நிலங்களுக்காகச் சாதாரணமாய்ச் செலுத்தத்தக்க குத்தகைத்தொகையும், சொந்தக்காரராலேயாவது மேற்கண்டபடி அவரிடத்திலிருந்து நிலம் பெற்றுக்கொண்டவராலாவது அந்தப்படி அனுபவிக்கப்பட்ட நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காகக் கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தத்தக்க யாதொரு நீர்பாய்ச்சுவரியும் சேர்ந்து எவ்வளவாகிறதோ அந்தத் தொகையாயிருப்பதாகக் கொள்ளப்படும்.

பூஸ்திதிக்குடையவராலாகிலும் குத்தகையில்லாமல் ஜாரியாகவாவது செற்பமான குத்தகைக்காகவாவது அவரிடத்திலிருந்து பெற்றாகிலும் அனுபவிக்கப்படுகிற நிலங்கள் விஷயத்தில்.

குத்தகைத் தொகை மாசூல் ரூபமாகச் செலுத்தப்படுகிற விஷயத்தில்.

(ii) குத்தகைத்தொகை மாசூல் ரூபமாகச் செலுத்தப்படுகிற விஷயத்திலே, வருஷவாரி குத்தகை மதிப்பானது—அக்கம்பக்கத்திலுள்ள அதே விதமான அதே தரவாரி நிலங்களுக்காகச் செலுத்தப்பட்ட குத்தகைத்தொகையும், எந்த நிலங்களின் குத்தகைத்தொகை மாசூல் ரூபமாகச் செலுத்தப்படுகிறதோ அந்த நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காக கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தத்தக்க யாதொரு நீர்பாய்ச்சுவரியும் சேர்ந்து எவ்வளவாகிறதோ அந்தத் தொகையாயிருப்பதாகக் கொள்ளப்படும்.

(iii) முழுமையுமாகிலும் சிறிதுமட்டிலாகிலும் தீர்வை ஜாரியாகி கவர்ன்மெண்டாரிடத்திலிருந்து பெற்றுக் கைப்பற்றிலிருந்து வரும் இனும் நிலங்களின் விஷயத்திலும், 17-வது பிரிவின்படி ஊழிய நிபந்தனையினின்று நிவர்த்திக்கப்பட்ட இனும் நிலங்களின் விஷயத்திலும், வருஷவாரி குத்தகை மதிப்பானது அந்த நிலங்கள் இனும் நிலங்களாயிராவிட்டால் அவைகளுக்காக எவ்வளவு தீர்வை செலுத்தவேண்டியதாகுமோ அந்த முழுத்தீர்வையும், அப்படிப்பட்ட நிலங்களுக்காக கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தத்தக்க நீர்பாய்ச்சுவரி ஏதாவதிருந்தால் அதுவுஞ்சேர்ந்து எவ்வளவாகிறதோ அந்தத்தொகையாயிருப்பதாகக் கொள்ளப்படும்; அப்படிப்பட்ட முழுத்தீர்வையும் நீர்பாய்ச்சுவரியும் ரெவினியு போர்டாருடைய பொதுவான உத்தரவுகளுக் குட்பட்டு ஜில்லா கலெக்டரால் நிர்ணயிக்கப்படும்.

கவர்ன்மெண்டாரிடத்திலிருந்து பெற்றுக் கைப்பற்றிலிருந்துவரும் நிலங்களின் விஷயத்திலும் ஊழியநிபந்தனையினின்று நிவர்த்திகப்பட்ட கிராம ஊழிய இனங்களின் விஷயத்திலும்.

ஆனால், யாதொரு பூஸ்திதிக்குடையவர் நீர்பாய்ச்சுவரி ரூபமாக கவர்ன்மெண்டாருக்கு யாதொரு விசேஷ தொகை செலுத்துவது காரணமாகத் தம்முடைய குத்தகைத் தொகையை அதிகப்படுத்திக் கொள்ள 1865-ம்ஞுத்திய சென்னபட்டணத்து 8-வது ஆக்ட் 11-வது பிரிவைச்சேர்ந்த iv குறிப்பிட்ட பாகத்திற்கண்ட நிபந்தனைகளின் பிரகாரம் கலெக்டரால் அனுமதி கொடுக்கப் பெற்றிருக்கும் விஷயத்திலே, மேலே கண்டபடி நிச்சயிக்கப்பட்ட தொகையிலிருந்து நீர்பாய்ச்சுவரி யளவுக்கு அப்படி அதிகமாக்கப்பட்ட குத்தகைத் தொகையைக் கழித்தெடுத்தபின் மிகுதியாயிருக்கும் தொகை வருஷவாரி குத்தகை மதிப்பாகும்.

21. டிவிஷன் விசாரணை ரெவினியு உத்தியோகஸ்தர் கேட்கும்போதெல்லாம், அப்படி கேட்டபிறகு மூன்றுமாதத்திற்குள்ளாக ஒவ்வொரு பூஸ்திதிக்குடையவரும்-அடுத்த முந்திய பசலியிலே தம்முடைய பூஸ்திதியில் அனுபவிக்கப்பட்ட எல்லா நிலங்களின் வருஷவாரி குத்தகை மதிப்புகளை, கவர்ன்மெண்டாருக்குத் தம்முடைய குத்தகைதாரர்களால் செலுத்தப்படத்தக்க நீர்பாய்ச்சுவரி ஏதாவ

அனுபவிக்கப்பட்ட நிலங்களுக்கு ஜாபிதா வேண்டுமென்று கேட்டால் பூஸ்திதிக் குடையவர் சவதரிக்கவேண்டுமென்பது.

திருந்தால் அது நீங்கலாக, அடுத்த முந்திய பிரிவில் நிர்ணயித்திருக்கிறபடி கணக்கிட்டுக்கண்டு அந்த நிலங்களுக்கு ஒரு சரியான ஜாபிதாவை மேற்படி உத்தியோகஸ்தருக்குச் சவதரிக்கவேண்டும்.

ஜாபிதா சவதரிக்கப்படாதபோது டிவிஷன் உத்தியோகஸ்தர் தாமே பூஸ்திதியின் குத்தகை மதிப்பை நிர்ணயிக்கலாம்.

22. யாதொரு பூஸ்திதிக்குடையவர் முந்திய பிரிவில் சொல்லியிருக்கிறபடி ஜாபிதா சவதரிக்கத் தவறியிருப்பாராகில், அந்த பூஸ்திதிக்குடையவரது குத்தகைதாரர்களால் கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தப்படத்தக்க நீர்பாய்ச்சவரி ஏதாவதிருந்தால் அது நீங்கலாக பிரஸ்தாப பூஸ்திதியின் வருஷவாரி குத்தகை மதிப்பை அந்த டிவிஷன் விசாரணை ரெவினியு உத்தியோகஸ்தர் எப்போதாவது தாமே கணக்கிடலாம்; அப்படிசெய்கிற விஷயத்திலே அவர்-அந்தப்படி கணக்கிட்ட தொகையையும் 19-வது பிரிவின்படி அதற்காக விதித்து வசூல் செய்யத்தக்க (கிராம ஊழிய) வரித்தொகையையும் ஆலசிய மில்லாமல் பூஸ்திதிக்குடையவருக்குத் தெரிவிக்கவேண்டியதோடுங்கூட அப்போதே, அந்தப்படி கணக்கேற்படுத்தியதற்கு ஆதாரமாயிருந்த அம்சங்களையும் அவருக்கு அறிவிக்கவேண்டும்.

டிவிஷன் உத்தியோகஸ்தர் செலுத்தப்படத்தக்க (கிராமஊழிய) வரியை நிர்ணயிக்கவேண்டுமென்பதும் ஜாபிதாவைத் திருத்தலாமென்பதும்.

23. 21-வது பிரிவின்படி பூஸ்திதிக்குடையவரால் சவதரிக்கப்பட்ட ஜாபிதா சரியானதுதானென்று டிவிஷன் விசாரணை ரெவினியு உத்தியோகஸ்தர் திருப்தியடைந்தால், அவர்-19-வது பிரிவின்படி பூஸ்திதிக்குடையவருடைய பூஸ்திதி விஷயமாக அவரால் செலுத்தப்படத்தக்க (கிராம ஊழிய) வரிக்கு அப்படிப்பட்ட ஜாபிதாவுக்கேற்றபடி அந்த பூஸ்திதிக்குடையவருக்குத் தீர்வை விதிக்கவேண்டும். மேற்படி ஜாபிதா சரியானதென்று மேற்படி ரெவினியு உத்தியோகஸ்தர் திருப்தியடையாவிட்டால் அவர் அதைத்திருத்தலாம்; அந்தப்படிசெய்கிற விஷயத்திலே அவர்-திருத்தப்பட்ட அந்த ஜாபிதாவின் நகலையும், மேலேகண்டபடி அவரிடத்திலிருந்து வசூல் செய்யத்தக்க வரியின் தொகையைக்குறித்த நோட்டீசையும் பூஸ்திதிக்குடையவருக்கு ஆலசியமில்லாமல் அனுப்புவதோடுங்கூட அப்போ

தே, அந்தப்படி திருத்தியதற்கு ஆதாரமாயிருக்கும் அம்சங்களையும் அவருக்குத் தெரிவிக்கவேண்டும்.

22-வது 23-வது பிரிவுகளின்படி செய்யப்பட்ட உத்தரவுகளின்மேல் அப்பீல்.

24. டிவிஷன் விசாரணை ரெவினியு உத்தியோகஸ்தர் 22-வது பிரிவின்படி பூஸ்திதியின் குத்தகை மதிப்பைக் கணக்கிட்டாலும், 23-வது பிரிவின்படி ஜாபிதாவைத் திருத்தினாலும், இது விஷயத்தில் சம்பந்தப்பட்ட பூஸ்திதிக்குடையவர்-மேற்படி தீர்மானம் தமக்குத் தெரிவிக்கப்பட்ட தேதிமுதல் இரண்டு மாதத்திற் குள்ளாக எப்போதாவது ஜில்லா கலெக்ட்டருக்கும், ஜில்லா கலெக்டருடைய தீர்மானமாயிருந்தால் மேற்படி தேதிமுதல் மூன்று மாதங்களுக்குள்ளாக எப்போதாவது ரெவினியுபோர்டாருக்கும் அப்பீல்செய்துகொள்ளச் சுதந்தரமுடையவராவார். அப்பீல் செய்துகொள்ளப்படுவதன்மேல் சந்தர்ப்பத்திற்கேற்றபடி ஜில்லா கலெக்டரோ அல்லது ரெவினியு போர்டாரோ செய்யும் தீர்மானமானது முடிவானதாகும்.

பூஸ்திதியின் விஷயமாகச் சேரவேண்டியதா யிருக்கிறமொத்த (கிராம ஊழிய) வரியை பூஸ்திதிக் குடையவர் செலுத்த வேண்டுமென்பது.

25. (1) ஒவ்வொரு பூஸ்திதிக்குடையவரும் தம்முடைய பூஸ்திதியிலுள்ள அனுபவிக்கப்பட்ட எல்லா நிலங்களின் விஷயத்திலும் இந்த ஆக்டின்படி சேரவேண்டியதாயிருக்கிற (கிராமவூழிய) வரியை, 32-வது பிரிவின்படி செய்யப்பட்ட விதிகளைக்கொண்டு ரெவினியு போர்டார் நிர்ணயிக்கக்கூடிய வாயிதாக்களாகவும் காலங்களிலும், அடியிற்கண்ட விலக்குகளுக்குட்பட்டுச் செலுத்தவேண்டும்.

பூஸ்திதிக்குடையவர் தம்முடைய குத்தகைதாரர்களிடத்திலிருந்து (கிராமவூழிய) வரியில் பாதியை வசூல்செய்யலாம்.

விலக்கு (i).—குத்தகைதாரர்களால் அனுபவிக்கப்பட்ட எல்லா நிலங்களின் விஷயத்திலும், அந்தப்படி அனுபவிக்கப்பட்ட நிலங்களின் விஷயமாக பூஸ்திதிக்குடையவர் செலுத்தத்தக்க (கிராமவூழிய) வரியில் பாதித்தொகையை அது குத்தகைத்தொகை பாக்கியா யிருந்தாற்போல 1865-ம் ஆண்டு சென்னபட்டணத்து 8-வது ஆக்டின் நிபந்தனைகளின் பிரகாரம் அந்த குத்தகைதாரர்களிடத்திலிருந்து அவர் வசூல்செய்வது சட்ட சம்மதமாகும்.

நீர்பாய்ச்சுவரியின்மேல் செலுத்த வேண்டிய (கிராம ஊழிய) வரியைசில விஷயங்களிலே குத்தகைதாரர்கள் செலுத்த வேண்டுமென்பது

விலக்கு (ii).—பூஸ்திதிக்குடையவரது குத்தகைதாரர்கள் கவர்ன்மெண்டாருக்கு நீர்பாய்ச்சுவரி செலுத்துகிற விஷயங்களிலே, அந்த குத்தகைதாரர்கள் நீர்பாய்ச்சுவரியோடுங்கூட அந்த வரித்தொகையின்மேல் செலுத்தவேண்டியதாயிருக்கிற (கிராமவூழிய) வரியையும் செலுத்தவேண்டும்.

விலக்கு (iii).—முழுமையும் இனும் கிராமமாயிராத இனும் விஷயத்திலே—

பூஸ்திதிக்குடையவர் சில தொகைகள் கழிக்கப்படுவதற்குட்பட்டுச் சில்லறை இனங்களுக்காகச் செலுத்தப்படவேண்டிய (கிராம ஊழிய) வரிமுழுவதையும் வசூல் செய்யலாம்.

முதலாவது, (a) அந்த இனும் விஷயமாக வருஷாந்தரம் அந்த இனும் இருக்கிற பூஸ்திதிக்குடையவருக்குச்செலுத்தப்படத்தக்கதாயிருக்கும் தொகையை மேற்படி இனும் குத்தகை மதிப்பிலிருந்து கழித்த பிறகு அந்த குத்தகை மதிப்பு விஷயமாக அவர் செலுத்தத்தக்கதாயிருக்கிற (கிராமவூழிய) வரியையும், (b) அந்தப்படி கழிக்கப்பட்ட தொகையின் விஷயமாகச் செலுத்தத்தக்க (கிராமவூழிய) வரியில் பாதியையும் அது குத்தகைத்தொகை பாக்கியாயிருந்தாலெப்படியோ அப்படியே 1865-ம்வருத்து 8-வது ஆக்டின் நிபந்தனைகளின் பிரகாரம், அந்த இனும் வைத்துக்கொண்டிருக்கிறவரிடத்திலிருந்து, அந்த பூஸ்திதிக்குடையவர் வசூல் செய்வது சட்ட சம்மதமாகும்.

சில்லறை இனும்தாரர் தம்முடைய குத்தகைதாரர்களிடத்திலிருந்து (கிராமவூழிய) வரியில் பாதியை வசூல்செய்யலாம்.

இரண்டாவது, இனும் வைத்துக்கொண்டிருக்கிறவர் தம்முடைய குத்தகைதாரர்களால் அனுபவிக்கப்பட்ட நிலங்களின் விஷயமாகச்செலுத்தப்படத்தக்க (கிராம ஊழிய) வரியில் பாதியை அவர்களிடத்திலிருந்து மேலேகண்ட மாதிரியாகவே வசூல் செய்வது சட்ட சம்மதமாகும்.

(கிராம ஊழிய) வரிபாக்கி முதலில்

(2) இந்தப்பிரிவின்படி பூஸ்திதிக்குடையவராலும் இனும் வைத்துக்கொண்டிருக்கிறவராலும் வசூல்செய்யப்படத் தக்கதாயிருக்கிற (கிராமவூழிய) வரி பாக்

செலுத்த வேண்டிய செலவாயிருக்க வேண்டுமென்பது.

கியானது-அது விஷயத்தில் சம்பந்தப்பட்ட நிலத்துக்காகச் செய்யவேண்டிய முதல் செலவாயிருக்க வேண்டும்.

பூஸ்திதிக்குடையவரது நிலையான நிலத்தீர்வைமேலேற்படும் (கிராம ஊழிய) வரியில் பாதியை வஜாசெய்வது.

26. 4-வது பிரிவிற்கண்ட (a), (b), (c), (e) குறிப்பிட்ட வகுப்புகளில் அடங்கும் பூஸ்திதிக்குடைய ஒவ்வொருவரும்-தம்முடைய பூஸ்திதியின் வருஷவாரி குத்தகை மதிப்பு முழுமையிலே, அந்த பூஸ்திதி சம்பந்தமாய் அவர் கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தத்தக்க நிலையாய்ப் பைசலாதியான கிஸ்திக்தொகைக்குச் சமானமாகிய தொகையின்மேல் அவர் செலுத்தத்தக்க (கிராமவூழிய) வரியில் பாதிவஜா பெற்றுக்கொள்ள அர்ஹராவார். ஆனால், 25-வது பிரிவின்படி அப்படிப்பட்ட பூஸ்திதிக்குடையவர் தம்முடைய பூஸ்திதியிலே குத்தகைதாரர்களிடத்திலிருந்தாவது இனுங்களை வைத்துக்கொண்டிருக்கிறவர்களிடத்திலிருந்தாவது வசூல் செய்யத்தக்க தொகையானது-அந்தப்படி வஜா ஒத்துக்கொடுக்கப்படாதிருந்தால் கவர்ன்மெண்டாருக்கு எவ்வளவு தொகை அவர் செலுத்தும்படியாய் இருந்திருக்குமோ அந்த மொத்தத்தொகையின்மேல் கணக்கு செய்யப்படும்.

குத்தகைதாரர்களிடத்திலிருந்து வசூல் செய்வதைப் பற்றி விலக்கு.

திருஷ்டாந்தம்.

பூஸ்திதியின் குத்தகைப்பட்டி	ரூபா.	10,000
நிலையாய்ப் பைசலாதியான நிலத்தீர்வை ...	,,	4,000
கிராம ஊழிய வரிவீதம் நூற்றுக்கு 5.		
இந்த விஷயத்திலே, 10,000 ரூபாய்க்கு நூற்றுக்கு 5 வீதமாக பூஸ்திதிக்குடையவர் செலுத்த வேண்டியது	,,	500
4,000 ரூபாய்க்கு நூற்றுக்கு $2\frac{1}{2}$ வீதமாகக் கழிக்க வேண்டியது	,	100
செலுத்தவேண்டிய நிகரத்தொகை ...	,,	400

ஆனால், பூஸ்திதிக்குடையவர் தம்முடைய குத்தகைதாரர்களிடத்திலிருந்து நூற்றுக்கு 2½ வீதமாக 10,000 ரூபாய்க்கு ரூபாய் 250 வசூல்செய்ய அர்ஹராயிருக்கிறார்; ஆகையால், பூஸ்திதிக்குடையவர் ரூபாய் 100 செலுத்தினால், அவருடைய குத்தகைதாரர்கள் ரூபாய் 250 செலுத்துகிறார்கள்.

(1) யாதொரு பூஸ்திதியிலே கிராம சிப்பந்திகளுக்காகப் பிடிக்கும் செலவின் பொருட்டு, நிலையாய் ஏற்பட்ட நிலத்தீர்வையைக் குறைந்து, அப்படி குறைக்கப்பட்ட தொகையை அந்த கிராம சிப்பந்திகளின் சம்பளம் கொடுப்பதற்கு உபயோகிக்கவேண்டுமென்கிற ஷரத்தின்மேல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால், இந்த ஆக்டின் வியாபகத்திற்குள்ளாக்கப்படும் வகுப்புகளைச்சேர்ந்த கிராம உத்தியோகஸ்தர்களின் வருஷவாரி சம்பளத்திற்கு அந்தப்படி குறைக்கப்பட்டகாலத்தில் போதுமான அளவுள்ளதும், மேற்கண்டபடி குறைக்கப்பட்ட தொகைக்கு அதிகப்படாததுமான தொகையைத் தற்காலத்திலுள்ள நிலையாய் ஏற்பட்ட நிலத்தீர்வையுடன் சேர்த்துக்கொடுக்கும்படி பூஸ்திதிக்குடையவருக்குக் கவர்ன்மெண்டார் உத்தரவுசெய்வது சட்ட சம்மதமாகும்.

சில சந்தர்ப்பங்களில் நிலையாய் ஏற்பட்ட நிலத்தீர்வைக்கு அதிகமாகச்செலுத்துவது சட்ட சம்மதமாகுமென்பது.

(2) கிராம சிப்பந்திகளுக்காகப் பிடிக்கும் மேற்படி செலவின் பொருட்டு, யாதொரு பூஸ்திதியின் நிலையான நிலத்தீர்வை ஏற்படுத்துவதற்கு முன்னமே அதன் ஐவேஜிலிருந்து கழித்துக்கொள்வதென்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்குமானால், இந்த ஆக்டின் வியாபகத்திற்குள்ளாக்கப்படும் வகுப்புகளைச்சேர்ந்த கிராம உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்துக்காக மேற்கண்டபடி கழிக்கப்படாதபட்சத்தில் எவ்வளவு தொகை சேர்க்கப்பட்டிருந்திருக்கவேண்டுமோ அவ்வளவு தொகையைத் தற்காலத்திலுள்ள நிலையாய் ஏற்பட்ட நிலத்தீர்வையுடன் சேர்த்துக்கொடுக்கும்படி பூஸ்திதிக்குடையவருக்குக் கவர்ன்மெண்டார் உத்தரவு செய்வது சட்டசம்மதமாகும்.

(1) (2) குறிக்கப்பட்ட உட்பிரிவுகளில் குறிக்கப்பட்ட இரண்டு விஷயங்களில் எதிலும் பூஸ்திதிக்குடையவர் இனி எப்போதும் மேற்கண்ட வகுப்புகளைச்சேர்ந்த கிராம உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளங்கொடுக்கவேண்டிய உத்தரவாதமுள்ளவராகமாட்டார்; நிலையாய் ஏற்பட்ட நிலத்தீர்வையோடு செலுத்தப்படும் தொகைகள் ஒரு

வருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராமவூழிய நிதிக்கு வரவாகவைக்கப்படும்.

சில சந்தர்ப்பங்களில் நிலையாய் ஏற்பட்ட நிலத்தீர்வை குறைக்கப்படும்.

(3) இந்த ஆக்ட் 2-வது பிரிவின்படி வியாபிக்கச்செய்யப்பட்டிருக்கிறதும், இந்த ஆக்ட் எந்தத்தேதியிலே யாதொரு பூஸ்திதியில் வியாபிக்கச் செய்யப்படுகிறதோ அந்தத் தேதியில் அந்த பூஸ்திதியில் இருப்பதுமான யாதொரு உத்தியோகத்தை வைத்து ஆதரிக்கப்பிடிக்கும் செலவானது பூஸ்திதியின் நிலையாய் ஏற்பட்ட நிலத்தீர்வை எதன்மேலே நிஷ்கரிஷை செய்யப்பட்டதோ அந்த ஐவேஜில் அடங்கியிருந்தால், அவ்விதம் ஐவேஜில் சேர்க்கப்பட்டிராமலிருந்தால் எவ்வளவுக்கு ஷை நிலையான நிலத்தீர்வை நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்குமோ அவ்வளவுக்கு அந்த நிலத்தீர்வை குறைக்கப்படும்.

சில விஷயங்களில் குத்தகைத்தொகையை உயர்த்தலாம் அல்லது குறைக்கலாம்.

(4) யாதொரு நிலத்தின் விஷயமாக பூஸ்திதிக்குடையவருக்குச் செலுத்தத்தக்க குத்தகைத்தொகையானது சந்தர்ப்பத்திற்கேற்றபடி கிராம உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்தின் யாதொரு பாகத்தைக் குத்தகைதாராவது பூஸ்திதிக்குடையவராவது கொடுக்க ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பொருள்படும்படியாக, இந்த ஆக்ட் செலாவணியாகும் தேதியில் செலாவணியாய்க்கொண்டிருக்கிற உடன்படிக்கையின்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கிற யாதொரு விஷயத்திலே, பூஸ்திதிக்குடையவராவது குத்தகைதாராவது மேற்படி குத்தகைத் தொகையை அதிகப்படுத்துவதற்காக அனுமதி வேண்டுமென்று கலெக்டருக்கு விண்ணப்பம் பண்ணிக்கொள்வதோ அதைக் குறைக்கவேண்டுமென்று கேட்பதோ சட்டசம்மதமாகும்; அல்லாமலும், அப்படிப்பட்ட விண்ணப்பத்தை வரப்பெற்றுக்கொள்வதன்மேலும், அந்த தாவா நியாயமானதுதானென்று திருப்திகரமாய் ருஜூகாட்டப்படுவதன்மேலும், கலெக்டரானவர் அந்தப்படி அனுமதிகொடுத்து, அப்படிப்பட்ட உடன்படிக்கை ஏதும் ஏற்பட்டிராவிட்டால் அந்த குத்தகைத்தொகை எவ்வளவாக நிர்ணயிக்கப்பட்டிருக்குமோ அவ்வளவாக அந்த குத்தகைத்தொகையை உயர்த்தவேண்டும் அல்லது குறைக்கவேண்டும்.

4-ம் அத்தியாயம்.

கிராமவூழிய நிதியும், அதன் ஏற்பாடும் அதிலிருந்து சம்பளங்களைக் கொடுப்பதும்.

ஒருவருக்கே யுரிய பூஸ்திதிகளின் கிராம வூழிய நிதி

27. 19-வது பிரிவின்படி விளம்பரம் பிரசுரஞ்செய்யப்பட்ட தேதியிலாவது அதற்குப்பிறகாவது ஒருவருக்கே யுரிய பூஸ்திதிகளின் கிராமவூழிய நிதியென்று வழங்கவேண்டிய ஒரு நிதி ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்பாடாகவேண்டும். மேற்படி நிதிக்கு அடியிற் கண்ட வருவாய்கள் ஏற்பட்டிருக்கவேண்டும்:—

(i) கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தத்தக்க ஜோடி ஏதாவதிருந்தால் அது நீங்கலாக, 17-வது பிரிவின்படி ஊழிய நிபந்தனையினின்று நிவர்த்திக்கப்பட்ட இனுங்களுக்கு விதிக்கப்படும் க்விட்ரென்ட்;

(ii) 19-வது பிரிவின்படி விதித்து வசூல்செய்யப்படும் (கிராமவூழிய) வரி;

(iii) அடுத்து முந்திய பிரிவின்படி நிலையான நிலத்தீர்வை போடுங்கூடச் செலுத்தப்படும் தொகைகள்;

(iv) இந்த ஆக்டின்படி விதிக்கப்படும் சகல தண்டத்தொகைகளும் அபராதங்களும்;

(v) இந்த ஆக்டின் காரியங்களுக்காகப் பொதுவான வருமானத்திலிருந்து ஈவுத்தொகைகள் எவையேனும் கொடுக்கப்படுமாகில் அப்படிப்பட்ட சகல தொகைகளும்,

மேலும், இந்த நிதி டிஸ்ட்ரிக்ட் ட்ரெஷரி என்னும் ஜில்லா கஜானாவில் வைக்கப்பட்டிருக்கவேண்டும்; அல்லாமலும், அது 32-வது பிரிவின்படி ரெவினியு போர்டாரால் செய்யப்பட்ட விதிகளுக்குட்பட்டு ஜில்லா கலெக்டருடைய விசாரணையில் இருக்கவேண்டும்.

விளம்பரத்தில் பிரசுரிக்கப்படும் தேதிக்குப்பிறகு

28. 19-வது பிரிவின்படி யாதொரு பூஸ்திதியில் பிரசுரிக்கப்படும் விளம்பரத்தில் கண்ட தேதியிலாவது அதற்குப்பிறகாவது, 32-வது பிரிவின்படி செய்யப்பட்ட விதிகளைக்கொண்டு ரெவினியுபோர்டாரால்

நிதியிலிருந்து கிராம உத்தியோகஸ்தர்களுடைய சம்பளங்களையும் வர்த்தனைகளையும் கொடுக்கவேண்டுமென்பது.

நிர்ணயிக்கப்படக்கூடிய விதப்படிக்கும் மாதிரியாகவும், அந்த பூஸ்திதி எவ்விடத்திலிருக்கிறதோ அந்த ஜில்லாவின் மேற்கண்ட நிதியிலிருந்து, கிராம உத்தியோகஸ்தர்கள் பெற்றுக்கொள்ள அர்ஹராயிருக்கக்கூடிய சம்பளங்களையும் வேறே வர்த்தனைகளையும் அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

விளம்பரத்தில் பிரசுரிக்கப்படும் தேதிக்குப் பிறகு கிராம உத்தியோகஸ்தர்களின் விஷயமாகக் கட்டணம் முதலியவை வசூல் செய்யவுங் கூடாது கேட்கவுங் கூடாதென்பது.

29. 19-வது பிரிவின்படி யாதொரு பூஸ்திதியில் பிரசுரஞ்செய்யப்படும் தேதியிலாவது அதற்குப்பிறகாவது கிராம உத்தியோகஸ்தர்களின் சம்பளத்திற்காக அப்படிப்பட்ட பூஸ்திதியில் வசூல் செய்யப்பட்டாவது கேட்கப்படத்தக்கதாகவாவதுள்ள எல்லாக்கட்டணங்களும் மகமைகளும் வர்த்தனைகளும் அறுதியாய் எடுபட்டுப்போய் நின்றுவிடவேண்டும்.

கட்டண முதலியவைகளைக் கேட்டால் தண்டனை.

அதற்குப் பிறகு மேற்படி பூஸ்திதியிலே யாராகிலும் அந்த கட்டணங்களையாவது மகமைகளையாவது வர்த்தனைகளையாவது செலுத்தும்படி கேட்டாலும் வசூல் செய்தாலும் பெற்றுக்கொண்டாலும், அவர்-மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பாகக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல் ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனைக்குள்ளாவார்.

---

5 - ம் அத்தியாயம்.

பொது.

தண்டனைகள்.

30. (1) யாதொரு பூஸ்திதிக்குடையவர் :—

(a) 5-வது பிரிவில் செய்யச்சொல்லியிருக்கிறபடி ரெஜிஸ்டர் சவதரிக்கவும்.

(b) 13-வது பிரிவில் செய்யச்சொல்லியிருக்கிறபடி மைனர் என்னும் வயதுவராத வாரிஸின் பெயரைத் தெரிவிக்கவும்,

(c) 21-வது பிரிவில் செய்யச்சொல்லியிருக்கிறபடி கலெக்டருக்கு ஜாபிதா சவதரிக்கவும்,

வேண்டுமென்று தவறினால், அப்படிப்பட்ட ஒவ்வொருவரும் அப்படிப்பட்ட ஒவ்வொரு தவறுதலுக்காகவும் நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை ஜில்லா கலெக்டரால் விதிக்கப்படுவதற்குள்ளாவார். ஆனால், 5-வது பிரிவில் செய்யச்சொல்லியிருக்கிறபடி பூஸ்திதிக்குடையவர் வேண்டுமென்று ரெஜிஸ்டரைச் சவதரிக்கத்தவறுவாராகில், முதல் அபராத தண்டனை விதிக்கப்பட்ட பிறகு அந்த தவறு நடந்துகொண்டேயிருக்கிற நாளொன்றுக்கு 25-ரூபாய்க்கு மேற்படாமல் இன்னும் அபராத தண்டனைக்குள்ளாவார். இந்தப்பிரிவின்படி விதிக்கப்பட்ட அபராதமானது-நிலவருமான பாக்கியை வசூல் செய்வதற்காக 1864-ம்வருஷத்திய சென்னபட்டணத்து 2-வது ஆக்டில் நிபந்தனை கண்டிருக்கிற விதமாய் வசூல் செய்யப்படத்தக்கதாகும்.

(2) இந்தப்பிரிவின்படி விதிக்கப்பட்ட ஒவ்வொரு அபராத தண்டனையின்மேலும் ரெவினியு போர்டாருக்கு மூன்று மாதத்திற்குள்ளாக அப்பீல் செய்துகொள்ளலாகும்.

விதிகள் செய்ய அதிகாரம்.

31. ரெவினியு போர்டார்:கவர்ன்மெண்டாருடைய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டும் முன்னதாகப் பிரசுரஞ்செய்தானபின்பும், அடியிற்கண்ட விஷயங்களைக்குறித்து இந்த ஆக்டுக்கு விரோதமாயிராத விதிகளை ஏற்படுத்தலாம்; அந்த விஷயங்களாவன:—

(i) கிராமங்களைப் பிரிப்பதும் தொகுப்பதும் ஒன்றாக்குவதும்;

(ii) கிராம உத்தியோகஸ்தர்கள் அடைந்திருக்கவேண்டிய வித்தியா யோக்கியதைகள்;

(iii) 5-வது பிரிவின்படி தயார்செய்யவேண்டிய ரெஜிஸ்டருக்கு நமூனாவும், 9-வது பிரிவின்படி அனுப்பவேண்டிய சேமக நோடீஸுக்கு நமூனாவும் ;

(iv) கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ஏற்படுத்தவேண்டிய சம்பளங்களும் வேறே வர்த்தனைகளும், அவைகளைக்கொடுக்கும் விதமும் :

(v) அந்தந்த கிராம உத்தியோகஸ்தர்களுடைய அலுவல்களும், அவர்கள் வைக்கவேண்டிய கணக்குகள், ரெஜிஸ்டர்கள் முதலியவற்றின் விவரங்களும் நமூனாக்களும் ;

(vi) 16-வது பிரிவின்படி விசாரணை நடத்துகையில் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை ;

(vii) கிராம உத்தியோகஸ்தர்களால் வைக்கப்படும் கணக்குகள் முதலிய தஸ்தவேஜுகளைப் பத்திரமாய் வைப்பதும், கொண்டுவந்து காட்டுவதும், ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குக் கொடுப்பதும் ;

(viii) இந்த ஆக்டின்படி ஏற்படுத்தப்படும் நிதியை நிர்வாகம் பண்ணி மேற்பரிசோதனைசெய்வதும், அவைகள் சம்பந்தமாய் வைக்கவேண்டிய கணக்குகளும் ;

(ix) க்விட்ரென்டையும் (கிராமவூழிய) வரியையும் வாயிதாக்களாகச் செலுத்தவேண்டிய தேதிகளும், அந்தந்த வாயிதாக்களில் செலுத்தவேண்டிய தொகைகளும் ;

(x) கிராமவூழியத்தின் திறமை அதிகப்படுத்துவதற்கு அநுகூலமான எவையேனும் இதர விஷயங்கள்.

சில விஷயங்களில் ஸிவில் கோர்ட்டாருக்கு அதிகாரவரம்பு கிடையாதென்பது.

32. இந்த ஆக்டின்படி ஏற்பாடான நிதியின் யாதொரு பாகத்தை அனுபவிக்கவேண்டுமென்பதாகக் கொண்டுவருகிற யாதொரு தாவாவையாகிலும், யாதொரு பூஸ்திதியின் வருஷாந்தர குத்தகை மதிப்பின் தொகையைக் குறித்தாவது இந்த ஆக்டின்படி விதிக்கப்பட்டாயினும் விதித்து வசூல்செய்யப்பட்டாயினுமுள்ள க்விட்ரென்ட், (கிராமவூழிய) வரி அல்லது 27-வது பிரிவின்படி செலுத்தப்பட்ட தொகைகளின் வீதங்கள் அல்லது மொத்தத்தைக் குறித்தாவது உண்டாகிற யாதொரு கேள்வியையாகிலும் ஆலோசிக்கவோ அல்லது தீர்மானிக்கவோ எந்த ஸிவில் கோர்ட்டாருக்கும் அதிகாரம் கிடையாது.

விலக்கு.

ஆனால் 18-வது 25-வது பிரிவுகளின்படி இனும்தாரர்களிடத்திலிருந்தாவது குத்தகைதாரர்களிடத்திலிருந்தாவது பூஸ்திதிக்குடையவரால் வசூல்செய்யப்படத்தக்க எந்த தொகைகளையும் வியாஜ்ஜியமூலமாய் வசூல்செய்ய அந்த பூஸ்திதிக்குடையவருக்கேனும், இனும் வைத்துக்கொண்டிருக்கிறவர் 25-வது பிரிவின்படி குத்தகைதார்களிடத்திலிருந்து வசூல்செய்யத்தக்க எவ்வித தொகைகளையும் அதே மாதிரியாக வசூல்செய்ய அந்த இனும் வைத்துக்

கொண்டிருப்பவருச்சேனும் இந்த ஆர்டிலுள்ளதெதனுலும் தடையுண்டாகமாட்டாது.

சில விஷயங்களிலே ஜில்லாகலெக்டர்களுக்குச் செய்து கொள்ளப்பட்ட அப்பீல்களை ரெவினியு போர்டார் பைசல் செய்வது.

33. ஜில்லா கலெச்டர் ஹோதாவிலே இந்த ஆர்டின்படி அப்பீல் யாருக்குச் செய்து கொள்ளப்படுகிறதோ அந்த உத்தியோகஸ்தரானவர்-எதன்மேல் அப்பீல் செய்துகொள்ளப்படுகிறதோ அந்த தீர்மானத்தை டிவிஷன் விசாரணை ரெவினியு உத்தியோகஸ்தர் ஹோதாவிலே செய்த உத்தியோகஸ்தராயிருக்க நேர்ந்தால், அவர் அந்த சங்கதியை ரெவினியுபோர்டாருக்கு ரிபோர்ட் செய்யவேண்டும்; மேற்படி போர்டாரால் அந்த அப்பீல் பைசல் செய்யப்படும்; அவர்கள் செய்யும் தீர்மானம் முடிவானதாகும்.

சென்னபட்டணம் பரம்பரையான கிராம உத்தியோகஸ்தர்களைப்பற்றிய 1895-ம் ௵த்து 3-வது ஆக்டின் 20-வது பிரிவின்படிக்கான விதிகள்.

சென்னபட்டணம் பரம்பரையான கிராம உத்தியோகஸ்தர்களைப்பற்றிய 1895 ம் ௵த்து 3 வது ஆக்டின் 20 வது பிரிவினால் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைக்கொண்டு, கவர்ன்மெண்டாருடைய அங்கீகாரத்தின்மேல், ரெவினியு போர்டார்-களிகூர்ந்து அடியில் வருகிற விதிகளை ஏற்படுத்தி, பின்வரும் நமூனாக்களை நிர்ணயிக்கிறார்கள் :—

(i) வது பகுதியின்படி—கிராமங்களை பிரிப்பதும், தொகுப்பதும், ஒன்றாய்ச்சேர்ப்பதும்.

1. கிராம நத்தங்களுக்கும் மத்தியிலுள்ள தூரம் ஒன்றரை மைலுக்கு அதிகப்படாமலிருக்கும்பக்ஷத்தில், இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட எவையேனும் கிராமங்களையாவது அவற்றின் பாகங்களையாவது ஒரு தனியான புது கிராமமாய் ஏற்படும்படி தொகுக்கலாம் அல்லது ஒன்றாய்ச்சேர்க்கலாம்.

ஆனால், புதிய தலைமையான கிராமத்திலிருந்து ஒன்றரை மைலுக்கு அதிகமான தூரத்தில் முக்கியமான சில குக்கிராமங்கள் இருக்குமாகில், அவ்வாறு தொகுப்பதாவது ஒன்றாய்ச் சேர்ப்பதாவது கூடாது.

2. தூர அளவு அதிகப்பட்டபோதிலும், குடிவாசமில்லாத அல்லது அற்பமான கிராமங்களையும், எல்லைகளை நன்றாய்ப் பிரித்தறியக்கூடாத விதமாய் ஒன்றோடொன்று கலந்துள்ள நிலங்களிருக்கிற கிராமங்களையும் ஒன்றாய்த்தொகுக்கலாம்,

3. ஒவ்வொரு புதிய கிராமத்துக்கும் ஒரு கிராமப்பெரியதனக்காரர் அல்லது மணியக்காரரும், அதமம் ஒரு தலையாரி அல்லது வெட்டியும் இருக்கவேண்டும்; ஆனால், சிறிய கிராமங்களிலே முக்கியமான யாதொரு கிராமத்தில் அவசியமாயிருக்கும்பக்ஷத்திலே, அப்படிப்பட்ட சிறு கிராமத்தில் வசித்துக்கொண்டிருக்கவும் காவல் காக்கவும் பிரத்தியேகமாய் ஒரு தலையாரியை நியமிக்கலாம்.

4, ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், பல கிராமங்களைத் தொகுத்துக் கர்ணங்களின் விசாரணையின் கீழுள்ளவைகளாக ஏற்படுத்தலாம்,

5, பரிபாலன அனுகூலத்திற்காக யுக்தமாய்த் தோற்றும்போதெல்லாம், யாதொரு கிராமத்தை இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கிராமங்களாகப் பிரிக்கலாம்,

6. கிராமங்களைத் தொகுப்பதையோ, அல்லது ஒன்றாய்ச் சேர்ப்பதையோ அல்லது பிரிப்பதையோ பற்றிய பிரேரேபனைகளை அந்தந்த டிஸ்ட்ரிக்ட் கெஜெட்டில் கலெக்டரானவர் முதலில் பிரசித்தஞ் செய்யவேண்டும்; அப்படி பிரசித்தஞ்செய்யும்போது, அந்த பிரேரேபனைகளைக்குறித்து எவையேனும் ஆக்ஷேபனைகளிருந்தால் அது விஷயத்தில் சிரத்தையுள்ளவர்கள் விளம்பரம் பிரசுரஞ்செய்த தேதிமுதல் ஒருமாதத்திற்குக் குறையாத காலத்திற் குள்ளாகத் தங்கள் ஆக்ஷேபனைகளை எழுதித் தெரிவிக்கவேண்டுமென்று ஒரு விளம்பரமும் பிரசுரஞ்செய்யவேண்டும். அவ்விளம்பரத்தின் ஒரு பிரதியை, அதனல் பாதிக்கப்படும்போலிருக்கிற கிராமத்திலாவது கிராமங்களிலாவது பகிரங்கமான யாதொரு இடத்தில் ஒட்டிவைக்கவும் வேண்டும். மேலேகண்ட கால அளவு கழிந்தபிறகு, கலெக்டரானவர் தமது பிரேரேபனைகளையும், எவையேனும் ஆக்ஷேபனைகள் வரப்பெற்றிருந்தால் அவற்றின் சுருக்கத்தையும் அவைகளின்மேல் அவருடைய அபிப்பிராயங்களையும் ரெவினியு போர்டாருக்குத் தெரிவிக்கவேண்டும். போர்டார் அப்படிப்பட்ட ஆக்ஷேபனைகளைக்குறித்து ஆலோசனைபண்ணி அந்த பிரேரேபனைகளின்மேல் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற உத்தரவைப் பிறப்பிக்கவேண்டும்; அதன்மேல் அந்த உத்தரவு முடிவானதாகும். அந்த உத்தரவின் ஒரு பிரதியை அதற்குச் சம்பந்தப்பட்ட டிஸ்ட்ரிக்ட் கெஜெட்டில் பிரசுரஞ்செய்யவேண்டும்.

(ii)-வது பகுதியின்படி—6-வது, 7-வது, 8-வது பிரிவுகளின்படி விசாரணைகளை நடத்துவதும், 23-வது பிரிவின்படி அப்பீல் விசாரணைகளை நடத்துவதும்.

(a) 6-வது, 7-வது, 8-வது பிரிவுகளின்படி விசாரணைகளை நடத்துவது.

7. 6 வது பிரிவு.—6-வது பிரிவைச்சேர்ந்த நூதன உத்தியோகங்களுக்கு நபர்களை நியமிக்கையிலே, கலெக்டரானவர் (d) குறிப்பிட்ட பகுதி நீங்கலாக 10-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட நிபந்தனைகளை அனுசரித்து நடக்கவேண்டும். இதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் நமூனைக்களின்படி நேமகங்கள் செய்யப்படவேண்டும்,

8. 7-வது, 8-வது பிரிவுகள்.—யாதொரு கிராம உத்தியோகஸ்தர் மேலாவது ஊழியக்காரன்மேலாவது செய்யப்பட்ட பிராதுகளையும், அவைகளுக்கு எதிர்வாதமாக அவனால் எடுத்துக்காட்டப்பட்ட சமாதானங்களையும், சாட்சிகள் சொல்லும் சங்கதிகளையும் சாமானியமான விஷயங்களில் தவிர மற்றபடி, எழுதி

வைக்கவேண்டும். குற்றஞ்சாட்டப்பட்டவன் எதிரிலே எல்லா சாக்ஷிகளையும் விசாரிக்கவேண்டும்; குற்றஞ்சாட்டப்பட்டவன் விசாரிக்கப்படும் எல்லா பிராது பக்கத்துக்குச் சாக்ஷிகளுக்கும் குறுக்குசவால் போடலாம். சாக்ஷியமாக ஹாஜர் செய்யப்பட்ட சகல தஸ்தாவேஜுகளையும் குற்றஞ்சாட்டப்பட்டவனுடைய பரிசோதனைக்காகக் காட்டி, அவைகளைப்பற்றி அவன் சொல்லுகிற அபிப்பிராயங்களை எழுதிவைக்கவேண்டும்.

குற்றஞ்சாட்டப்பட்டவன் வேண்டுமென்றும் பிடிவாதத்துடனும் விசாரணைக்கு ஹாஜராகவில்லையென்றாகிலும், ஹாஜராகித் தன்மேல் கொண்டுவரப்பட்ட பிராதுகளுக்கு ஜவாபுசொல்லும்படிக் கட்டளையிடும் உத்தரவின் தேதியிலிருந்து ஆறுமாதத்துக்குக் குறைவுபடாத நியாயமான காலத்துக்குள் ஹாஜராக, மனதையோ தேகத்தையோ சேர்ந்த வியாதியின்பொருட்டு அசக்தனாயிருக்கிறானென்றாகிலும் எழுதிவைக்கப்படும் காரணங்களால் விசாரணை நடத்தும் ரெவினியு ஆபீஸராவது பூஸ்திதிக்குடையவராவது திருப்தியடைந்தால், குற்றஞ்சாட்டப்பட்டவன் ஹாஜராகாத காலத்தில் விசாரணை நடத்தலாம். ஆயினும், அப்படிப்பட்ட விஷயத்தில் விசாரணை நடத்துவதற்கு முன்னமே ரெவினியு ஆபீஸர் அல்லது பூஸ்திதிக்குடையவர் மேலே சொன்னபடி திருப்தியடைந்தாரென்பதும் குறித்த தேதியில் விசாரணை ஒருதலைபாய் நடத்தப்படுமென்பதுமான செய்தியைத் தெரிவிக்கும் ஒரு புதிய நோடீஸை மேற்படி ரெவினியு ஆபீஸர் அல்லது பூஸ்திதிக்குடையவர் குற்றஞ்சாட்டப் பட்டவனுக்குப பிறப்பிப்பார்.

9. அந்த கேஸைப்பற்றி உத்தரவுகளைப் பிறப்பிக்கையிலே, சந்தர்ப்பத்துக்கேற்றபடி, ரெவினியு ஆபீஸராவது பூஸ்திதிக்குடையவராவது அந்தந்த பிராதுகளைப்பற்றிய சாக்ஷியத்தைச் சுருக்கமாகத் தொகுத்துக்காட்டி, பிரதி பிராதின் மீதும் குற்றம் ஏற்படவில்லையென்றாகிலும் குற்றஸ்தாபனை ஆயிற்றென்றாகிலும் தெளிவான உத்தரவை, அந்த உத்தரவுக்கு ஆதாரமான காரணத்தின் சுருக்கமான சாராம்சம் சகிதமாகவும், குற்றஸ்தாபனையானதன்மேல் பிறப்பிக்கப்பட்ட தண்டனையையும் இங்கிலீஷ் பாஷையிலாவது சுதேச பாஷையிலாவது எழுதி வைக்கவேண்டும்.

10. அந்த உத்தரவின் அடியிலே, அப்பீல்செய்துகொள்வதற்கென்று ஏற்படுத்தப்பட்ட கால அளவு எந்த தேதியில் கழிகிறதோ அந்த தேதியைத் தெளிவாகக் குறித்துவைக்கவேண்டும்; அந்த உத்தரவின் ஒரு நகலை அது விஷயத்தில் சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகஸ்தருக்கோ அல்லது ஊழியக்காரனுக்கோ எவ்வித கட்டணமுமில்லாமலே கொடுக்கவேண்டும்.

(b) 23-வது பிரிவின்படி அப்பீல் விசாரணைகளை நடத்துவது.

11. 6, 7 அல்லது 8 வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவுக்குமேல் அப்பீல் செய்துகொள்ளும்பக்ஷத்தில், அந்த அப்பீலின் யதாஸ்திலே எந்த உத்த

வுக்குமேல் அப்பீல் செய்துகொள்ளப்படுகிறதோ அந்த உத்தரவு ஆக்ஷேபிக்கத்தக்க தென்பதற்குள்ள காரணங்களை நியாயங்காட்டாமலும் விருத்தாந்தமாக வளர்த்தாமலும் சுருக்கமாய்த் தனித்தனியான தலைப்புகளின் கீழே குறித்துவைக்க வேண்டும்; அப்படிப்பட்ட காரணங்களுக்கு வரிசைக்கிரமமாக இலக்கம் போட வேண்டும். அப்பீலின் யாதாஸ்துடன் மேலே சொல்லப்பட்ட 10 வது விதியின்படி மனுதாருக்குக் கொடுக்கப்பட்ட உத்தரவின் பிரதியையாவது அல்லது அப்படிப்பட்ட உத்தரவின் சரியென்று உறுதிமொழி கூறப்பட்ட பிரதியையாவது சேர்த்து அனுப்பவேண்டும்.

12. ஒரு அப்பீல் யாதாஸ்து ஏற்றுக்கொள்ளப்படும் பக்ஷத்தில், அப்பீல் அதிகாரியானவர் அப்பீலை விசாரணை செய்வதற்காக ஒரு தேதியை நிர்ணயித்து, அதைப்பற்றி அப்பீல்தாரருக்கு தகுந்த நோடிஸ் கொடுக்கவேண்டும்.

13. அப்பீலானது 6-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவின்மேல் செய்யப்பட்டிருக்குமாகில், யாருடைய உத்தியோக நியமனத்தைப்பற்றி ஆக்ஷேபனை செய்யப்பட்டிருக்கிறதோ அந்த நபருக்கு மேற்படி சங்கதியைப்பற்றியும் விசாரணையின் தேதியைப்பற்றியும் தகுந்த நோடிஸ் சேர்ப்பிக்கவேண்டும்; அந்த நபர் மேற்சொன்ன அப்பீலில் பிரதிவாதியாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட நோடிஸில், அந்த நபர் மேலேசொன்னபடி குறிக்கப்பட்ட தினத்தில் ஹாஜராகாமற்போனால் அபபீலானது ஒருதலையாய் விசாரிக்கப்படுமென்று தெரிவிக்கவேண்டும்.

14. அப்படி நிர்ணயிக்கப்பட்ட தினத்திலாவது, அல்லது வேறெந்த தேதிக்கு விசாரணை தள்ளி வைத்துக்கொள்ளப்படுகிறதோ அந்த தினத்திலாவது, அபபீலுக்கு ஆதாரமாக அப்பீல்தாரர் சொல்லும் விஷயங்கள் கேட்கப்படும். 6-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவின்மேல் அந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கும் பக்ஷத்தில், பிரதிவாதியும் ஹாஜராயிருந்தால் அவர்சொல்லும் விஷயங்களும் கேட்கப்படும்.

15. பிரதிவாதி ஹாஜராகாதகாலத்தில் ஒருதலையாய் ஒருஅப்பீல் விசாரிக்கப்பட்டு அவருக்கு விரோதமாக தீர்ப்பு கொடுக்கப்படும் பக்ஷத்தில், தமக்கு நோடிஸ் சேர்பிக்கப்படவில்லையென்றாவது அப்பீல் விசாரணைக்கு வரும்போது போதுமான காரணத்தால் ஹாஜராகத் தடைபட்டதென்றாவது அப்பிரதிவாதி ருஜுப்படுத்தினால், மேற்படி அப்பீலை மறுபடியும் விசாரிப்பதற்காக அவர் அப்பீல் அதிகாரியிடத்தில் விண்ணப்பஞ்செய்துகொள்ளலாம்.

16. இன்னும் சாக்ஷியம் வேண்டியதென்று அப்பீல் அதிகாரி நினைத்தால், அவர் அப்படிப்பட்ட சாக்ஷியத்தை தாமேயாவது பெற்றுக்கொள்ளலாம்; இல்லாவிட்டால், எந்த உத்தியோகஸ்தருடைய உத்தரவுக்குமேல் அப்பீல் செய்யப்படுகிறதோ அந்த உத்தியோகஸ்தர் இன்னும் அதிகமான சாக்ஷியத்தைப் பெற்றுக்

கொண்டு, அதைப்பற்றிய தஸ்தவேஜை குறிக்கப்பட்ட யாதொரு தேதிக்குள் அப்பீலதிகாரிக்கு அனுப்பவேண்டுமென்று அந்த உத்தியோகஸ்தருக்குக் கட்டளையிடலாம்,

17. அதிகமான சாக்ஷியம் பெற்றுக்கொள்ளும்படி கட்டளையிடப்பட்ட அல்லது பெற்றுக்கொள்வதற்கு அனுமதிகொடுக்கப்பட்ட கேஸுகளிலெல்லாம் அப்பீல் அதிகாரியானவர் மேற்படி சாக்ஷியம் எந்த விஷயங்களைச் சேர்ந்ததாயிருக்கவேண்டுமோ அவ்விஷயங்களைக் குறிக்கவேண்டும்.

18. அப்பீலதிகாரி யாதொரு அப்பீலை வாசித்து அப்பீல்வாதியை விசாரணை செய்தபிறகு தாம் அது விஷயத்தில் பிரவேசிப்பதற்குப் போதுமான காரணமில்லையென்று நினைத்தால், அந்த அப்பீல் அதிகாரி மேற்படி அப்பீலை சுருக்கமாய்த் தள்ளிவிடுவதற்கு 12 வது முதல் 17 வது வரைக்குமான விதிகளிலுள்ளதெதனும் தடையுண்டாகமாட்டாது. மேலே 8 வது விதியிற்கண்ட கிரமாசாரங்களெல்லாம் அனுசரிக்கப்படாததனால் அப்பீல்தாரர் முக்கியாம்சத்தில் பிரதிகூலமாய் பாதிக்கப்பட்டிருப்பதாக அப்பீலதிகாரிக்குத் தோற்றினாலன்றி மற்றப்படி, மேற்படி கிரமாசாரங்களை அனுசரிக்காத காரணத்தினாலேயே யாதொரு விசாரணையானது குறைவாயிருப்பதாக எண்ணப்படமாட்டாது.

19. அப்பீலை விசாரணை செய்கிற உத்தியோகஸ்தரானவர் தமது தீர்மானத்தையும் அதற்குள்ள நியாயங்களையும் தமது கைப்பட இங்கிலிஷில் எழுதிக்கொண்டு, அதற்கு ஒரு நகலை யாதொரு கட்டணமும் வாங்காமலே அப்பீல்தாரருக்கும் உத்தியோகஸ்தர் அல்லது பூஸ்திதிக்குடையவருக்கும் கொடுக்கவேண்டும்.

20. 11, 16, 17, 19 வது விதிகள் ரெவினியூ போர்டாருக்குச் செய்து கொள்ளப்பட்ட அப்பீல்களுக்குப் பிரயோகப்படும். போர்டாருக்குச் செய்துக் கொள்ளும் அப்பீல்களை டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் மூலமாக அனுப்பவேண்டும்; அந்த டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் தவிர்க்கத்தக்க எவ்வித தாமதமுமில்லாமல் அவைகளை ரெவினியு போர்டாருக்கு அனுப்பவேண்டும். அப்பீலானது கால அளவு கடந்துபோயிருந்தாலாவது, கிரமமாய் ஸ்டாம்பு ஒட்டப்படாமலிருந்தாலாவது, சுருக்கவகையாகத் தள்ளிவிடப்படக்கூடியதா யிருந்தாலாவது, இந்த ஆக்டின்படி ஏற்றுக்கொள்ளப்படத் தகாததாயிருந்தாலாவதன்றி மற்றப்படி, அது சம்பந்தமான தஸ்தவேஜுகளையும் அனுப்பவேண்டும்.

(iii)-வது பகுதியின்படி—3-வது பிரிவில் (1) குறிப்பிட்ட வகுப்பாகிற கிராம உத்தியோகங்களை வகிப்பவர்களுக்கு இருக்கவேண்டிய வித்தியா சம்பந்தமான யோக்கியதைகள்.

21. யாதொரு நபர் அடியிற்கண்ட வித்யா ஸம்பந்தமான பரீக்ஷைகளின்படி யோக்கியதை பெற்றிருந்தாலொழிய, அவர்-கர்ணம் (கிராமம்) பெரியதனக்

-காரர் அல்லது மணியக்காரர் என்னும் உத்தியோகத்துக்கு நியமிக்கப்பட லாயக்குள்ளவராகமாட்டார். அவையாவன :—

கர்ணம்

(a) கணக்கைப்பற்றிய வில்லேஜ் மானுயலென்னும் புஸ்தகம்,

(b) கிராம உத்தியோகஸ்தர்களுடைய அதிகாரங்களும் கடமைகளும்,

இவைகளில் கிராம உத்தியோகஸ்தர்களுக்கென்று பிரத்தியேகமாய் ஏற்பட்டிருக்கும் பரீக்ஷை.

கர்ணம் உத்தியோகத்தை அபேக்ஷித்து நிற்பவர்கள்-லாண்ட் ரெகார்ட்ஸ் சிப்பந்தியைச்சேர்ந்த ஒரு உத்தியோகஸ்தராலாவது யாதொரு டிஸ்ட்ரிக்ட் ஸர்வேயராலாவது நடத்தப்பட்டுவரும் கர்ணம் பள்ளிக்கூடத்திலே நிர்ணயிக்கப்பட்ட ஸர்வேபயிற்சி அடைந்திருக்கிறார்களென்றாகிலும், யாதொருஸர்வே உத்தியோகஸ்தரால் நடத்தப்பட்டுவரும் கர்ணம் பள்ளிகூடத்திலே ஸர்வே பரீக்ஷையில் தேரியிருக்கிறார்களென்றாகிலும் காட்டும் ஸெர்டிபிகேட்டையும் ஹாஜர்படுத்தவேண்டும்.

மணியக்காரர் அல்லது (கிராமப்) பெரியதனக்காரர்.

(a) கிராம உத்தியோகஸ்தர்களுடைய அதிகாரங்களும் கடமைகளும்,

(b) கிராம சுகாதாரம்,

இவைகளில் கிராம உத்தியோகஸ்தர்களுக்கென்று பிரத்தியேகமாய் ஏற்பட்டிருக்கும் பரீக்ஷை. அல்லது.

கிராமப் பெரியதனக்காரருடைய வேலைகளைச் செய்வதற்குப் போதுமான வித்யா ஸம்பந்தமான யோக்கியதை அபேட்சகருக்கு இருக்கிறதா என்று டிவிஷனல் ஆபீஸர் தெரிந்து திருப்தி அடைவதன்பொருட்டு, அவர் கட்டளையிடுகிறபடி வாய்மொழியாக நடத்தப்படும் பரீக்ஷை.

22. மேலேசொன்ன வித்யானது-1893-ம் வருஷம் ஜூலைமீ 1உயில் உத்தியோகத்திலிருந்த கிராம உத்தியோகஸ்தர்களுக்காவது, அந்தத் தேதியில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களாயிருந்து 1897-ம் வருஷம் ஜூலைமீ 1உயிலோ அல்லது அதற்கு முன்பாகவோ தங்களுடைய டிவிஷனல் ஆபீஸர்களின் ஆபீஸில் பெயர் தாக்கல் செய்யப்பட்டிருக்கிற ஷை உத்தியோகஸ்தர்களின் வாரிசுகளுக்காவது பிரயோகமாகமாட்டாது.

(iv)-வது பகுதியின்படி—வியாஜ்ஜியங்களையும் வியாஜ்ஜியங்களில் பிறப்பிக்கப்பட்ட தீர்மானங்கள் அல்லது உத்தரவுகளுக்குமேல் செய்யப்படும் அப்பீல்களையும் பைசல் பண்ணுகையில் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறையும், அது சம்பந்தமாக வைத்துவரவேண்டிய ரேஜிஸ்டர்களும்.

(a) வியாஜ்ஜியங்கள்.

23. இந்த ஆக்டின் 13 வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கொண்டுவரப்படும் ஒவ்வொரு வியாஜ்ஜியத்தையும், இங்கிலீஷிலாவது ஜில்

லாவின் சுதேச பாஷையிலாவது எழுதியுள்ள ப்ளெய்ன்டைக் கலெக்டரிடத்தில் தாக்கல்செய்து தொடரவேண்டும்.

23-A. சுயேச்சையான அதிகாரமுடைய யாதொரு ராஜா அல்லது ஆளும் யாதொரு அதிபதி ப்ரிடிஷ் கவர்ன்மெண்டாரோடு சிநேகமாய் அவர்களுக்கு அடங்கியிருந்தாலும் இராவிட்டாலும், ப்ரிடிஷ் இந்தியாவுக்குள் வாசஞ்செய்தாலும் ப்ரிடிஷ் இந்தியாவுக்கு வெளியே வாசஞ்செய்தாலும் அப்படிப்பட்டவர் கேட்டுக்கொள்வதன்மேல் (அல்லது அப்படிப்பட்ட ராஜா அல்லது அதிபதியின் பட்சத்திலே பிரவர்த்திக்கத் தகுந்தவரென்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படுகிற யாதொரு நபர் கேட்டுக்கொள்வதன்மேல்) அவர் பட்சத்திலே யாதொரு வியாஜ்ஜியம் தொடருவதற்காகிலும் அதில் பிரதிவாதஞ் செய்வதற்காகிலும் கவர்ன்மெண்டாருடைய உத்தாவினால் பிரத்தியேகமாய் நியமிக்கப்பட்டவர்கள் அங்கீகரிக்கப்பட்ட எஜெண்டுகளாக எண்ணப்படுவார்கள்; அவர்கள் அப்படிப்பட்ட ராஜா அல்லது அதிபதி பட்சத்திலே ஹாஜராகலாம், பிரவர்த்திக்கலாம், விண்ணப்பஞ் செய்துகொள்ளலாம்.

குறிக்கப்பட்ட யாதொரு வியாஜ்ஜியத்தின் காரியத்துக்காகவாவது குறிக்கப்பட்ட பல வியாஜ்ஜியங்களின் காரியத்துக்காகவாவது அந்த ராஜா அல்லது அதிபதிபட்சத்திலே எந்தெந்த வியாஜ்ஜியங்கள் தொடருவதாகிலும் எவைகளில் பிரதிவாதஞ் செய்வதாகிலும் அப்போதைக்கப்போது அவசியமாயிருக்கலாமோ அப்படிப்பட்ட சகல வியாஜ்ஜியங்களின் காரியத்துக்காகவாவது இந்த விதியின் படிக்கான யாதொரு நேமகம் செய்யப்படலாம்.

இந்த விதியின்படி நியமிக்கப்பட்டவர்-அப்படிப்பட்ட யாதொரு வியாஜ்ஜியம் அல்லது வியாஜ்ஜியங்களில் தாமே கட்சிக்காரராயிருந்தாற்போல அந்தவியாஜ்ஜியம் அல்லது வியாஜ்ஜியங்களிலே ஹாஜராவதற்கும் விண்ணப்பஞ் செய்துகொள்வதற்கும் பிரவர்த்திப்பதற்கும் நபர்களுக்கு அதிகாரம் கொடுக்கலாம் அல்லது நபர்களை நியமிக்கலாம்.

24. மேற்படி ப்ளெய்ன்டில் கீழே குறிக்கும் விஷயங்கள் அடங்கியிருக்கவேண்டும்:—

(a) எந்தக் கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டிருக்கிறதோ அந்தக் கோர்ட்டின் பெயர்;

(b) வாதியின் பெயர், விவரம், வயது, இருப்பிடம், அவருடைய வித்தியாசம்பந்தமான யோக்கியதைகள்;

(c) விசாரித்தறியக்கூடுமான வரையில் பிரதிவாதியின் பெயர், விவரம், இருப்பிடம், பிரதிவாதி மைனராயிருந்தால், விசாரித்தறியக்கூடுமான வரையில் அவருடைய கார்டியனுடைய பெயர், விவரம், இருப்பிடம்; மைனர் கார்டியனைப் பேர் வியாஜ்ஜியத்தில் விவரிப்பதற்குப் பிரதிவாதியாக்கவேண்டும்:

(d) வியாஜ்ஜியமூலம் எந்த சந்தர்ப்பங்களால் நேரிட்டதோ அவற்றைக் குறித்துத் தெளிவாகவும் சுருக்கமாகவுமுள்ள ஒரு ஸ்டேட்மென்டும், அது எப்பொழுது நேரிட்டதென்பதும்;

(e) வாதியின் தாவா இப்படிப்பட்டதென்பதும், அது எந்த சட்ட நிபந்தனையை அனுசரித்துச் செய்யப்படுகிறதோ அந்த சட்ட நிபந்தனையும்;

(f) வாதி தாவாசெய்துகொள்ளும் பரிகாரத்தைச்செய்து கொடுக்கும்படி கேட்பது.

24-A. யாதொரு கிராம உத்தியோகத்தின்பொருட்டு வியாஜ்ஜியம் தொடரப்பட்டால், வாதியானவர்-அந்த உத்தியோகத்துக்குத் தம்மைவிட அதிக நெருங்கின வாரிசுகளென்று தமக்குத் தெரிந்திருக்கிற அல்லது தாம் நம்புவதற்கு நியாயமிருக்கிற நபர்களையெல்லாம் பிரதிவாதிகளாகச் சேர்க்கவேண்டும்.

25. பிரதிவாதிகள் எத்தனைபேர் இருக்கிறார்களோ அத்தனை ப்ளெய்ன்ட் பிரதிகளையாவது அல்லது சுருக்கமான ஸ்டேட்மென்டுகளையாவது ப்ளெய்ன்டோடுகூட வைத்தனுப்பவேண்டும்; மேலும், வாதி அந்த ப்ளெய்ன்டின் அடியில் கையொப்பமிட்டு உறுதிமொழி கூறவேண்டும்.

26. கீழே குறிக்கும் விஷயங்களில் ப்ளெய்ன்ட் தள்ளப்படும் :—

(a) சென்னபட்டணத்து 1894-ம் வருஷத்திய ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராம ஊழிய ஆக்டின் 10 வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாவது, சென்னபட்டணம் பரம்பரையான கிராம உத்தியோகங்களைப்பற்றிய 1895-ம் வருஷத்து ஆக்டின் 10-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவு அல்லது 11-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாவது வாதியானவர் நியமனத்திற்கு அர்ஹராயிராவிட்டால்;

(b) சென்னபட்டணம் பரம்பரையான கிராம உத்தியோகங்களைப்பற்றிய 1895-ம் வருஷத்து ஆக்டின் 14-வது பிரிவின்படியாவது சட்டத்தில் தீர்மானமாய் ஏற்பட்டிருக்கிற யாதொரு விதியினாலாவது வியாஜ்ஜியம் கொண்டுவருவதற்குக் காலம் கடந்துபோயிருக்கிறதாக ப்ளெய்ன்டிலிருக்கும் ஸ்டேட்மென்டினால் தெரியவந்தால்;

(c) கேட்டுக்கொள்ளப்படும் பரிகாரமானது பாத்தியதை முதலியதை நிர்ணயித்து வரையறுப்பதற்காக மாத்திரம் டிக்ரி பெறவேண்டுமென்பதாயிருந்தால்;

(d) ப்ளெய்ன்டை குறித்தகாலத்துக்குள் திருத்துவதற்காகத் திருப்பிக்கொடுத்திருந்து, அது அந்த குறித்த காலத்துக்குள் திருத்தப்படாவிட்டால்;

(e) வாதியானவர் பின்வரும் 34-A விதியின்படி கலெக்டரால் பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து நடக்கத்தவறினால்;

யாதொரு ப்ளெய்ன்ட் கலெக்டரால் தள்ளிவிடப்பட்டால், அவருடைய உத்தரவுக்குக் காரணத்தை அவர் எழுதிவைக்கவேண்டும்.

27. யாதொரு ப்ளெய்ன்ட் 23, 24, 24-A, 25-வது விதிகளிற்கண்ட நிபந்தனைகளை அனுசரித்தில்லையென்று கலெக்டர் அபிப்பிராயப்படும் பக்ஷத்தில், அவர் அதை வாதிக்குத் திரும்ப அனுப்பிவிடலாம், அல்லது அதைத் திருத்தும்படி வாதிக்கு அனுமதி கொடுக்கலாம்.

27-A. வியாஜ்ஜியம் தொடரப்பட்டபின்பு எப்போதாவது, வாதி விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், (a) யாதொரு ஒழுங்குக்குறைவு ஏற்பட்டிருக்கும் காரணத்தினால் வியாஜ்ஜியம் கெட்டுப்போகுமென்றாவது, (b) அந்த வியாஜ்ஜிய விஷயத்துக்காகவாகிலும் விட்டுவிடப்பட்ட தம்முடைய தாவாவின் ஒரு பாகத்தைக்குறித்தாகிலும் புதிதாய் வியாஜ்ஜியம் கொண்டுவரும் சுதந்தரத்துடன் அந்த வியாஜ்ஜியத்தைத் தள்ளிக்கொள்ளவோ அல்லது மேற்படி தாவாவின் பாகத்தை விட்டுவிடவோ அவருக்கு அனுமதிகொடுப்பதற்குப் போதுமான காரணங்கள் இருக்கின்றனவென்றாவது கோர்ட்டாருக்குத் திருப்திகரமாய்த் தெரியவந்தால், கோர்ட்டார் - செலவைப் பற்றியாகிலும் மற்றப்படியாகிலும் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற ஷரத்துகளின்படி அப்படிப்பட்ட அனுமதி கொடுக்கலாம்.

வாதியானவர் அப்படிப்பட்ட அனுமதியில்லாமல் வியாஜ்ஜியத்தைத் தள்ளிக்கொண்டாலும் தம்முடைய தாவாவின் ஒரு பாகத்தை விட்டுவிட்டாலும், அவர் கோர்ட்டார் தீர்மானிக்கும் செலவுக்குப் பொறுப்பேற்றவராயிருக்கவேண்டியதுமல்லாமல், அப்படிப்பட்ட வியாஜ்ஜிய விஷயத்துக்காகவாவது அந்த தாவா பாகத்தைக்குறித்தாவது புதிதாய் வேறே வியாஜ்ஜியம் கொண்டுவர அவருக்குத்தடையும் ஏற்படும். பல வாதிகளில் ஒருவர் மற்றவர்களுடைய சம்மதமில்லாமல் வியாஜ்ஜியத்தைத் தள்ளிக்கொள்ளும்படி அவருக்கு அனுமதிகொடுக்க கோர்ட்டாருக்கு இந்த விதியிலுள்ள எதனாலும் அதிகாரம் உண்டாவதாக எண்ணக்கூடாது.

28. வாதியானவர் தம் சுவாதீனத்தில் அல்லது வசத்தில் இருக்கும் தஸ்தவேஜுகளில் எவை தம்முடைய தாவாவுக்கு ஆதாரமான சாக்ஷியமாக இருக்குமென்று நம்புகிறாரோ அந்த தஸ்தவேஜுகளையெல்லாம் தம்முடைய ப்ளெய்ன்டோடு தாக்கல்செய்யவேண்டும்.

29. ப்ளெய்ன்ட் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாதி அவசியமான ப்ராஸெஸ் என்னும் கட்டளைக்கட்டணத்தைச் செலுத்தினால், கலெக்டர் ஒவ்வொரு பிரதிவாதிக்கும் ஸம்மன் அனுப்பவேண்டும்; மேலும், ப்ளெய்ன்டுக்கு ஒரு நகலையாவது 25 வது விதியில் சொல்லப்பட்டிருக்கும் யாதொரு சுருக்கமான ஸ்டேட்மென்டையாவது அதனுடன்கூட வைத்து அனுப்பவேண்டும். ஆயினும் ப்ளெய்ன்டை ஏற்றுக்கொள்ளுங்காலத்தில் பிரதிவாதி ஆஜராயிருக்கும் பக்ஷத்தில், கலெக்டர் வியாஜ்ஜியத்தை விசாரணைசெய்ய உடனே ஆரம்பிக்கலாம்.

பிரதிவாதியை ஸம்மன் செய்வதற்காகக் கொடுக்கவேண்டிய ப்ராஸெஸ் என்னும் கட்டளைக் கட்டணத்தை கலெக்டரால் குறிக்கப்படும் நியாயமான கால த்துக்குள் வாதியானவர் கொடுக்காவிட்டால், ப்ளெய்ன்ட் தள்ளிவிடப்படும்.

30, குறிக்கப்பட்ட தேதியில் பிரதிவாதி ஸம்மனில் சொல்லப்பட்டிருக் கும் இடத்தில் ஹாஜராகவேண்டுமென்றும், அப்படி ஹாஜராகும்போது, நியாய மான சகல நிவாரணைகளுக்கு முட்பட்டு, தம்முடைய சுவாதீனத்திலாவது வசத் திலாவது இருக்கும் தஸ்தவேஜுகளில் வாதி பரிசோதித்துப்பார்க்க விரும்பும் அல்லது பிரதிவாதி தம்முடைய கக்ஷிக்கு ஆதாரமாக விருக்குமென்று எண்ணு கிற எல்லா தஸ்தவேஜுகளையும் எடுத்துக்கொண்டு வரவேண்டுமென்றும் ஸம்ம னில் உத்தரவு செய்திருக்கவேண்டும்.

31. 28 வது, 30-வது விதிகளிற்கண்ட நிபந்தனைகளின் பிரகாரம் ஹாஜர் செய்யப்பட்டிருக்கவேண்டிய, ஆனால் செய்யப்படாத, யாதொரு கக்ஷிக்காரரு டைய ஸ்வாதினத்தில் அல்லது வசத்திலிருக்கும் எந்த தஸ்தவேஜு சாக்ஷியமும், அதை ஹாஜர்செய்யாததற்குச் சரியான காரணம் கலெக்டருக்குத் திருப்தியாகும் படி காண்பித்தாலொழிய, விசாரணையின் பின்வருகிற எந்த நிலைமையிலும் ஏற் றுக்கொள்ளப்படாது. அப்படிப்பட்ட சாக்ஷியத்தை ஏற்றுக்கொள்ளும் கலெக்டர் அப்படி செய்வதற்குத் தம்முடைய காரணங்களை எழுதிவைக்க வேண்டும்.

32. முதல் விசாரணை நடக்கும்தேதியில், ஒவ்வொரு கக்ஷிக்காரரும் எவர்க ளுடைய சாக்ஷியம் தம்முடைய கக்ஷிக்கு ஆதாரமாயிருக்குமென்று நினைக்கிறரோ அப்படிப்பட்ட சாக்ஷிகளையாவது, தஸ்தவேஜுகளை ஹாஜர்படுத்தும்படி கட்டளை யிடப்பட்ட சாக்ஷிகளையாவது கொண்டுவந்து ஹாஜர்ப்படுத்தவேண்டும்.

33. யாதொரு கக்ஷிக்காரருக்கு வேண்டியிருக்கிற சாக்ஷிகளில் (ப்ராஸெஸ்) கட்டளை பிறப்பிக்காமல் வாராதவர்களை, அவசியமான ப்ராஸெஸ் பீஸ் என்னும கட்டளைக் கட்டணமும் படியும் செலுத்தப்படுவதன்மேல் ஸம்மன்செய்து வரவ ழைக்கவேண்டும்.

34. பிரதிவாதிக்கும் சாக்ஷிகளுக்கும் அனுப்பப்படும் ஸம்மன்களைச் சென் னப்பட்டணம் 1869-ம்ஸூத்து 3-வது ஆக்டில் நிபந்தனை கண்டிருக்கிற பிரகா ரம் தயார்செய்து சேர்ப்பிக்கவேண்டும்.

34 A. மேலேகண்ட 24-A விதியின்படி ப்ளெய்ன்டில் பிரதிவாதிகளா கக் காட்டப்பட்டிருக்கும் நபர்களைத் தவிர வேறே எவர்களேனும் ஏற்கனவே ரெகார்டில் குறிப்பிட்டுள்ள கட்சிக்காரர்களுக்கு இருக்கும் பரம்பரை பாத்தியதை யிலும் மேலான பரம்பரை பாத்தியதைகள் உள்ளவர்களாயிருக்கிறார்க ளென்று இந்த வியாஜ்ஜியத்தைச்சேர்ந்த ரெகார்டுகளிலிருந்தாவது கட்சிக்காரர்க ளுடைய மனுக்களிலிருந்தாவது பிரதேச உத்தியோகஸ்தர்களின் ரிபோர்ட்டுகளி

விருந்தாவது மற்றப்படியாவது கலெக்டர் நம்புவதற்கு முகாந்தாமிருந்தால், அவா
அப்படிப்பட்ட நபர்களையுங்கூட பிரதிவாதிகளாய்ச் சேர்க்கும்படி வாதிக்கு எப்
போதாகிலும் கட்டளையிடலாம்; அதன்மேல், மேலே 29 வது விதியில் நிர்ண
யிக்கப்பட்ட நடவடிக்கை முறையானது பிரயோகப்படும்.

35. வியாஜ்ஜியத்தின் விசாரணைக்காக ஏற்படுத்தப்பட்ட தேதியிலாவது,
வியாஜ்ஜியத்தின் விசாரணை பிற்பாடு எந்த தேதிக்கு தள்ளிவைத்துக்கொள்ளப்ப
டுகிறதோ அந்த தினத்திலாவது, நேரிலாகிலும் அதிகாரங்கொடுக்கப்பட்ட ஏஜ
ண்டுகள் மூலமாகவாகிலும் உபய கக்ஷிக்காரர்களில் எவரும் ஹாஜராகாவிட்டால்
அந்த வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிடவேண்டும்.

36. பிரதிவாதி ஹாஜராகி வாதி ஹாஜராகாவிட்டால் (வாதியின்), தாவா
வையாவது அதில் ஒரு பாகத்தையாவது பிரதிவாதி ஒப்புக்கொண்டாலொழிய
கலெக்டரானவர் வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிடவேண்டும்; வாதியின் தாவாவைப்
பிரதிவாதி ஒப்புக்கொள்ளுகிற பக்ஷத்தில், செலவில்லாமலே கலெக்டர் பிரதிவா
திக்கு விரோதமாக தீர்ப்பு கொடுக்கவேண்டும்; ஆனால், ஒருவருக்கதிகமாகப் பல
பிரதிவாதிகள் இருந்தால், அப்படிப்பட்ட தீர்ப்பானது தாவாவை ஒப்புக்கொள்
ளுகிற பிரதிவாதிக்கு மாத்திரம் விரோதமாயிருக்கவேண்டும்.

37. வாதி ஹாஜராகி பிரதிவாதி ஹாஜராகாவிட்டால், பிரதிவாதிக்கு ஸம்
மன் சரியாகச் சேர்ப்பிக்கப்பட்டதென்று ரூபிக்கப்படுவதன்மேல், கலெக்டரான
வர்-வியாஜ்ஜியத்தை விசாரணைசெய்து, பிரதிவாதிக்கு பிரதிகூலமாக ஒருதலை
யாகத் தீர்ப்பு கொடுக்கலாம்.

38. ஹாஜராகாத காரணத்தினாலாவது ஒருதலையாகவாவது தீர்ப்புகொடுக்
கிற பக்ஷத்தில், தீர்ப்பு கொடுத்த தேதி முதற்கொண்டு அறுபது தினங்களுக்குள்
ளாகப் போதுமான நல்ல காரணம் காட்டப்பட்டால், கலெக்டரானவர் அந்த
டிக்ரியை ரத்துசெய்ய உத்தரவுபண்ணி, அந்த வியாஜ்ஜியத்தை நடத்துவதற்காக
ஒரு நாளை நியமிக்கவேண்டும். ஆனால், எதிர் கக்ஷிக்காரனை ஸம்மன்செய்து
அவர் ஹாஜரானால் அவரை அதற்காதாரமான சங்கதிகளை விசாரித்தறிந்தாலொ
ழிய, அப்படிப்பட்ட யாதொரு டிக்ரியைத் திருத்துவதாகிலும், வேறுபடுத்துவதா
கிலும் நேர் விரோதமாய் மாற்றுவதாகிலும் கூடாது.

39. பிரதிவாதி ஹாஜரானால், ப்ளெய்ண்டில் கண்டிருக்கிற தாவாவை அந்
தப் பிரதிவாதி ஒப்புக்கொள்ளுகிறாரோவென்று கலெக்டர் விசாரித்தறியவேண்டும்;
பிரதிவாதி ஒப்புக்கொள்ளாத பக்ஷத்திலே, அவருக்குள்ள ஆட்சேபனைகளைச்
சொல்லும்படி அவரை கலெக்டர் கேட்கவேண்டும். அவர் சொல்லுவதை எழுத்
துமூலமாய் ரெகார்ட் செய்யவேண்டும். 24 A. விதியின்படியாவது, 34 A. விதி
யின்படியாவது பிரதிவாதியாகக் காட்டப்பட்டிருக்கும் யாதொரு நபரின் விஷய
த்திலே, கலெக்டரானவர்-அந்த உத்தியோகத்துக்கு அந்த நபருக்குரிய பாத்தியதை
யை விட்டுவிடுவதாய் ஒரு வாக்குமூலம் எழுதிக்கொடுக்கும்படியாவது, மற்றவர்

களுடைய பாத்தியதையைக்காட்டிலும் தம்முடைய பாத்தியதைமேலானதென்று ஸ்தாபித்து இதர கட்சிக்காரர்களின் தாவாக்களை எதிர்க்கும்படியாவது அந்த நப்ரைக்கேட்கவேண்டும். ஆயினும், மைனர்கள் என்னும் வயதுவராதவர்களுக்காகப் பிரவர்த்திக்கும் கார்டியன்களுக்கு, அந்த மைனர்களின் பாத்தியதைகளை விட்டுவிட அனுமதி கொடுக்கப்படமாட்டாது.

40. வியாஜ்ஜியம் விசாரணையாகுங்காலத்திலே, கக்ஷிக்காரர்கள் அல்லது அவர்களுடைய அதிகாரங்கொடுக்கப்பெற்ற ஏஜெண்டுகளையும், சாக்ஷிகளையும் விமரிசை செய்வதற்கு முன்னே, சத்தியம் செய்வித்தாவது, பிரமாண பூர்வகமாய் உறுதிமொழி கூறுவித்தாவது, சாக்ஷிகளை விமரிசை செய்வதைக்குறித்து அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கிற சட்டத்தின்படி மற்றப்படி நடவடிக்கை நடத்தியாவது விமரிசை செய்யவேண்டும்.

41. வாதி, பிரதிவாதி, சாக்ஷிகள் இவர்களுடைய சாக்ஷியத்தை அந்தந்த ஜில்லாவின் சுதேச பாஷையிலாவது இங்க்லிஷிலாவது விருத்தாந்த ரூபமாக எழுதிக்கொள்ளவேண்டும்; அவசியமானால், சாட்சி சொன்னவனுக்கு அதைப்படித்து விளக்கிக்காட்டினபிறகு அதில் கலெக்டர் கையெழுத்துசெய்யவேண்டும்,

42. கலெக்டரானவர் வியாஜ்ஜியத்தின் உண்மையை நன்றாய் விளக்குவதற்கு அவசியமாக இன்னும் அதிக சாட்சியம் அல்லது தஸ்தாவேஜுகள் வேண்டியிருந்தால் அவைகளைக்கொண்டுவரும்படி கட்டளையிட்டு, மேலேகண்டபடி அவசியமாய் வேண்டியிருக்கும் இன்னும் அதிக சாட்சிகளையும் ஸம்மன்செய்து வரவழைக்கலாம்.

43. கலெக்டரானவர்-யாதொரு வியாஜ்ஜியத்தில் வியாஜ்ஜியம் நடத்தவோ அல்லது எதிர்வாதம் பண்ணவோ ஆரம்பிக்கும்பொருட்டு வாதிக்காவது பிரதிவாதிக்காவது அவகாசம் கொடுக்கலாம்: இதுவுமல்லாமல், போதுமான காரணமெழுதிக் கலெக்டர் தமக்கு எப்படி யுக்தமென்று தோற்றுமோ அந்தப்பிரகாரமே விசாரணையைத் தள்ளிவைக்கலாம்.

44. ப்ளெய்ன்டும், பிறப்பிக்கப்பட்டிருக்கும் ஸம்மன்கள் அல்லது அவைகளின் நகல்களும், வாதி அல்லது அவருடைய அதிகாரம்பெற்ற ஏஜென்டை விசாரணைசெய்த சங்கதிகளும், பிரதிவாதியினிடத்திலிருந்தாவது அவருடைய அதிகாரம்பெற்ற ஏஜென்டினிடத்திலிருந்தாவது வாங்கப்பட்ட வாக்குமூலமும் அல்லது பிரதிவாதி தாக்கல்செய்திருக்கிற யாதொரு விவரப்பத்திரிகையும், சாக்ஷிகளுடைய சாக்ஷியமும், தாக்கல்செய்யப்பட்ட தஸ்தவேஜுகளின் ஜாபிதாவும் வியாஜ்ஜியத்தைச்சேர்ந்த ரெகார்டாகும் (தஸ்தவேஜுகளாகும்.) அப்படிப்பட்ட தஸ்தவேஜுகள் கலெக்டரால் நிறுத்திவைத்துக்கொள்ளப்பட்டால், அவைகளை ரெகார்டில் சேர்த்துவைக்கவேண்டும்.

45. வியாஜ்ஜிய விசாரணை முடிந்தவுடனே, கலெக்டரானவர்தம்முடைய டிக்ரியைச் சொல்லவேண்டும் ; அந்த டிக்ரியை ஆக்டின் 16-வது பிரிவு (1)-வது உட்பிரிவு (iii) வது பகுதியில் கண்டிருக்கிறபடி தயார்செய்து, அந்த டிக்ரி சொல்லப்படும் காலத்தில் அதில் அவர் தேதிபோட்டுக் கையெழுத்து செய்யவேண்டும்.

45-A. மேலேகண்ட 24-A விதியின்படியாவது 34-A விதியின்படியாவது பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டிருக்கும் யாதொரு நபர்-கலெக்டரால் குறிப்பிடப்பட்ட தேதியில் ஹாஜராகத் தவறினாலும், தமக்குப் பிரதிகூலமாக (எக்ஸ் பார்டியாய்) ஒருதலையாய்ப் பிறப்பிக்கப்பட்டிருக்கும் யாதொரு டிக்ரியை ரத்து செய்வதற்காக மேலேகண்ட 38-வது விதியின்படி நடவடிக்கை நடத்தத்தவறினாலும், அல்லது அவர் கலெக்டருக்கு முன் ஹாஜராகி அந்த உத்தியோகத்தின் விஷயமாய்த் தமக்குள்ள பாத்தியதையை விட்டுவிட்டாலும், அல்லது இதர கட்சிக்காரர்களின் தாவாக்களை சித்திபெறும்படியாய் எதிர்க்கத்தவறினாலும், அப்படிப்பட்ட நபரை அதே உத்தியோகத்துக்காகப் பின்பு வியாஜ்ஜியம் தொடருவதினின்றும் விலக்கவேண்டும்.

46. வியாஜ்ஜியத்தில் நேரிட்ட செலவு இவ்வளவென்றும், அவைகள் எந்தக் கட்சிக்காரர்களுக்கு நேரிட்டதோ அவர்களின் பெயர்களையும், அந்தச்செலவுகளை அவரவர்கள் இவ்வளவு இவ்வளவு கொடுக்கவேண்டுமென்றும் அந்த டிக்ரியில் கண்டெழுதியிருக்கவேண்டும்.

47. கக்ஷிக்காரர்கள் கலெக்டருக்கு விண்ணப்பஞ்செய்துகொள்வதன்மேல் அவர்களுடைய செலவில் டிக்ரிக்குச் சரியானவைகளென்று உறுதிமொழி கூறப்பட்ட நகல்களை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

48. வியாஜ்ஜியம் செய்வதற்குள்ள சுதந்தரம் கெடாதிருக்கிற பட்சத்தில் வாதி அல்லது பிரதிவாதி இறந்துபோவதனால், வியாஜ்ஜியம் பலவீனமடையமாட்டாது,

(b) வியாஜ்ஜியங்களில் பிறப்பிக்கப்பட்ட டிக்ரிகளுக்கு மேலாவது உத்தரவுகளுக்கு மேலாவது செய்யப்படும் அப்பீல்களைப்பற்றிய நடவடிக்கை

49. 13-வது பிரிவின்படி தாக்கல்செய்யப்பட்ட வியாஜ்ஜியங்களில் கலெக்டரால் செய்யப்படும் டிக்ரிக்குமேலோ அல்லது உத்தரவுக்குமேலோ செய்யப்படும் அப்பீலிலே, அப்படிப்பட்ட டிக்ரி அல்லது உத்தரவுக்குள்ள ஆக்ஷேபணையின் ஆதாரங்களை [illegible]காட்டாமலும் விருத்தாந்தமாக வளர்த்தாமலும் சுருக்கமாய்ப் பிரத்தியேகமான தலைப்புகளின்கீழே காட்டவேண்டும் ; அப்படிப்பட்ட ஆதாரங்களுக்கு வரிசைக்கிரமமாக இலக்கமிடவேண்டும்.

50. எதன்மேல் அப்பீல் செய்யப்படுகிறதோ அந்த டிக்ரி அல்லது உத்தரவுக்குச் சரியானதென்று உறுதிமொழி கூறப்பட்ட ஒரு நகலை அப்பீல் யதாஸ்துடனே வைத்தனுப்பவேண்டும். ஜில்லா கலெக்டரானவர் அப்பீலதிகாரியாயிருக்கும்பக்ஷத்தில், யதாஸ்தை நேராகவாவது கிரமமாய் அதிகாரங்கொடுக்கப்பெற்ற ஏஜெண்டாவது கொடுக்கவேண்டும்.

51. அப்பீல் ஏற்றுக்கொள்ளப்பட்டபிறகு, தாம் பிரவேசிப்பதற்குத்தகுந்த ஆதாரம் ஒன்றும் அகப்படாவிட்டால் வியாஜ்ஜியத்தின் தஸ்தவேஜுகளை வரவழைக்காமலே வியாஜ்ஜியத்தை அப்பீல் அதிகாரியானவர் தமக்கு இஷ்டமிருந்தால் தள்ளிவிடலாம்: ஜில்லா கலெக்டரானவர் அப்பீலதிகாரியாயிருக்கும் பக்ஷத்தில், டை. அப்பீலை அப்படி தள்ளிவிடுவதற்குமுன் அப்பீல் வாதியை அவர் விசாரணை செய்யவேண்டும்.

52. வியாஜ்ஜியங்களின் பரிசீலனையைப்பற்றி 16-வது பிரிவு 1-வது உட்பிரிவிலும், 29-வது விதியிலும், 34 முதல் 42 வரையிலுள்ள விதிகளிலும், 43-வது விதியிலும், 45 முதல் 48-வது வரையிலுள்ள விதிகளிலும் கண்டிருக்கிற நிபந்தனைகள் அவசியமான மாறுதல்களுடனே ஜில்லா கலெக்டரால் செய்யப்படும் அப்பீல் விசாரணைக்குப் பிரயோகப்படும்.

53. அப்பீல் அதிகாரியானவர் இன்னும் வேண்டுமான சாட்சியத்தைத் தாமே வாங்கலாம், அல்லது கலெக்டரையாவது தாம் கட்டளையிடும் வேறே உத்தியோகஸ்தரையாவது அதை வாங்கும்படிசெய்து, அவசியமாயிருக்கிற விஷயங்களைக்குறித்து ஒரு தீர்மானத்தைத் தெரிவிக்கும்படி அவருக்குக் கட்டளையிடலாம். மேலும், அப்பீல் அதிகாரியானவர்-அப்பீல் கடைசியாய்ப் பைசலாகிற வரையிலே, எதன்மேல் அப்பீல் செய்யப்பட்டிருக்கிறதோ அந்த டிக்ரி அல்லது உத்தரவை நிறைவேற்றுவதை நிறுத்திவைக்கும்படியாக உத்தரவுகள் பிறப்பிக்கலாம்.

54. முதல் வியாஜ்ஜியத்தைப் பரிசீலனைசெய்த உத்தியோகஸ்தருக்கு டிக்ரியின் ஒரு நகலை அனுப்பவேண்டும். அதை அவர் அந்த வியாஜ்ஜியத்தின் தஸ்தாவேஜுகளுடன் தாக்கல்பண்ணி, வியாஜ்ஜியங்களைக்குறித்த ரெஜிஸ்டரிலே பதிவுசெய்துகொள்ளவேண்டும். போர்டார் அப்பீலதிகாரியாயிருக்கும்பக்ஷத்தில், அப்பீல்வாதிக்கும் அப்பீல் பிரதிவாதிக்கும் போர்டாருடைய டிக்ரி நகல்களையும் அனுப்பவேண்டும்.

55. ரெவினியு போர்டாருக்குச் செய்துகொள்ளும் இரண்டாவது அப்பீலில், முதல் டிக்ரிக்கும் அப்பீல் டிக்ரிக்கும் சரியான நகல்களென்று உறுதிமொழி கூறப்பட்ட நகல்களை அப்பீல் யாதாஸ்துடன் வைத்தனுப்பவேண்டும்.

56. ரெவினியு போர்டார் அந்த வியாஜ்ஜியத்திற்குச் சம்பந்தமான தஸ்த வேஜுகளை வரவழைத்து, கலெக்டரை இன்னும் வேண்டுமான சாட்சியத்தை வாங்கியனுப்பும்படிசெய்து, அவசியமாயிருக்கிற விஷயங்களைப்பற்றி ஒரு தீர்மானத்தைத் தெரிவிக்கும்படி அவருக்குக் கட்டளையிடலாம்.

57. டிக்ரியின் ஒரு நகலை அப்பீல்வாதிக்கும் அப்பீல்பிரதிவாதிக்கும் ஜில்லா கலெக்டருக்குங்கூட அனுப்பவேண்டும்.

57 A. போர்டார் தங்களுக்குமுன் வரும் ஒவ்வொரு விண்ணப்பம் அல்லது அப்பீலின் செலவுகளையும் கொடுத்துப் பங்கிடும் விஷயத்திலாவது அவைகளைக் கொடாமல் நிறுத்தும் விஷயத்திலாவது முற்றிலும் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி நடந்துகொள்ளலாம்; மேலும், அவர்கள் - அப்பீலின்மேலாகிலும் புனராலோசனைக்காகவாகிலும் தங்களுக்குமுன் வரும் யாதொரு வியாஜ்ஜியத்திலாவது விண்ணப்பத்திலாவது விவகாரத்திலாவது பிடித்திருக்கும் செலவுகளைக்குறித்து யாதொரு கீழ்க்கோர்ட்டார் செய்திருக்கும் எந்த உத்தரவையாகிலும் ரத்துசெய்யலாம், மாற்றலாம் அல்லது அதனுடன் இன்னும் விஷயங்களைச் சேர்க்கலாம்.

(c) வியாஜ்ஜியங்களுக்கும் அப்பீல்களுக்கும் சம்பந்தமாக வைத்துவரவேண்டிய ரேஜிஸ்டர்கள்.

58. இதற்கென்று ஏற்பட்டிருக்கிறநமூனுக்களின்படி மூன்று ரெஜிஸ்டர்களை வைத்துவரவேண்டும்; அவையாவன:—(1) வியாஜ்ஜியங்களைக்குறித்த ரெஜிஸ்டர், (2) அப்பீல்களைக்குறித்த ரெஜிஸ்டர், (3) ஸம்மன்களைக்குறித்த ரெஜிஸ்டர்.

(V) - வது பகுதியின்படி—வியாஜ்ஜியங்களில் பிறப்பிக்கப்பட்ட டிக்ரிகளையும் உத்தரவுகளையும் நிறைவேற்றுவதும், செலவுகளை கணக்கிட்டு ஏற்படுத்துவதும்.

A.—முதல் வியாஜ்ஜியங்களிலும் அப்பீல் வியாஜ்ஜியங்களிலும் பிறப்பிக்கப்பட்ட டிக்ரிகளையும் உத்தரவுகளையும் நிறைவேற்றுவது.

59. யாதொரு டிக்ரி அல்லது உத்தரவைப் பெற்றிருப்பவர் அதை நிறைவேற்ற விரும்பினால், பிரதமத்திலே அவர் அந்த டிக்ரியையோ அல்லது உத்தரவையோ பிறப்பித்த கலெக்டருக்கு அடியிற்கண்ட நமூனுப்படி எழுத்துமூலமாக ஒரு விண்ணப்பம் பண்ணிக்கொள்ளவேண்டும்.

முதல் வியாஜ்ஜியங்களிலும் அப்பீல் வியாஜ்ஜியங்களிலும் பிறப்பிக்கப்பட்ட டிக்ரிகளையாவது உத்தரவுகளையாவது நிறைவேற்றுவதற்கான விண்ணப்ப நமூனா. (காலத்தில் பதியவேண்டும்).

நிறைவேற்றுவதற்கான விண்ணப்பம் எந்த வியாஜ்ஜியத்திற்குச் சம்பந்தப்படுகிறதோ அந்த வியாஜ்ஜியத்தின் நம்பர்; வியாஜ்ஜியத்தின் கட்சிக்காரர்களுடைய பெயர்கள்; டிக்ரி அல்லது உத்தரவின் தேதி; டிக்ரி அல்லது உத்தரவுக்கு மேல் ஏதாவது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறதா; டிக்ரியையாவது உத்தரவையாவது எவர்மேல் நிறைவேற்றவேண்டுமென்று நாடப்படுகிறதோ அவருடைய பெயர்; சொத்தை ஒப்பிப்பது, பணத்தை வசூல்செய்வது முதலான எந்த விதத்தில் கோர்ட்டாருடைய உதவி வேண்டியதாயிருக்கிறதோ அந்த விதம்; கட்டவேண்டிய கட்டளைக் கட்டணம் விண்ணப்பத்துடன் ஹாஜர் செய்யப்பட்டதா, அப்படிக்கானால் அதன்தொகை; நிறைவேற்றும்பொருட்டு நடத்தப்பட்ட முந்திய நடவடிக்கைகள் எவையேனுமிருந்தால் அவை.

60. விண்ணப்பத்தை வரப்பெற்றுக்கொண்டவுடனே அதில் தேதிபோடவேண்டும்; பிறகு அதை அதற்கென்று வைக்கப்பட்டிருக்கவேண்டிய ரெஜிஸ்டரிலும் வியாஜ்ஜியங்களைக்குறித்த ரெஜிஸ்டரின் ஷராகலத்திலும் பதியவேண்டும். அந்த விண்ணப்பமானது காலநிர்ணய தோஷத்தினால் பாதிக்கப்படாமலும் அப்பீலுக்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் கால அளவு கழிந்தது முதல் 30 தினங்களுக்குள்ளே, விண்ணப்பத்தில் குறிக்கப்பட்டிருக்கிற டிக்ரியையோ அல்லது உத்தரவையோ நிறைவேற்றுவதை நிறுத்திவைக்கவேண்டுமென்று அப்பீல் கோர்ட்டிலிருந்து யாதொரு உத்தரவும் வராமலுமிருந்தால், கலெக்டரானவர் - அப்படிப்பட்ட டிக்ரியையாவது உத்தரவையாவது பின்வருகிற பிரகாரம் நிறைவேற்றத் தொடங்கலாம் :—

(a) யாதொரு நபர் அசையாப்பொருளின் ஸ்வாதீனத்திற்குப்பாத்தியதை உடையவராக நிர்ணயிக்கப்பட்டால்—தீர்மானத்தின்படி அந்த அசையாப்பொருளின் ஸ்வாதீனத்தை ஒப்பிக்கவும், டிக்ரி அல்லது உத்தரவின்படி நடக்கக்கடமைப்பட்ட யாவனொருவன் அந்த சொத்தைக் காலிசெய்வதில்லையென்று சொல்லுகிற பட்சத்தில் அப்படிப்பட்டவனை அவசியமிருந்தால் அப்புறப்படுத்தவும், யாதொரு நபருக்கு அதிகாரங்கொடுத்து அந்த நபருடைய பெயரையும் மேல்விலாசத்தையும் எழுதிக் கலெக்டருடைய கையெழுத்தும் முத்திரையும் போடப்பட்ட யாதொரு வாரண்டைப் பிறப்பிப்பது.

(b) நிலத்தின் யாதொரு வாடகைக்கோ அல்லது தீர்வைக்கோ யாதொரு நபர் பாத்தியதை உடையவராக நிர்ணயிக்கப்பட்டால்—டிக்ரி பெற்றிருப்பவருக்கு அந்த வாடகையையோ அல்லது தீர்வையையோ கொடுத்துவிடவேண்டுமென்று கட்டளையிட்டு அப்படிப்பட்ட நிலத்தின் அனுபோக பாத்தியதை உடையவ

ருக்கு எழுத்து மூலமாயும் கலெக்டருடைய கையெழுத்தும் முத்திரையும்போட்டும் நோடிஸ் பிறப்பிப்பது.

(c) பாத்தியமில்லாமல் அனுபவிக்கப்பட்ட வரும்படியையாவது செலவுகளையாவது யாதொரு பணத்தொகையையாவது செலுத்துவதற் குள்ளானவனென்று யாதொரு நபர் தீர்மானிக்கப்பட்டால்—நிலத்தீர்வை பாக்கியை வசூல் பண்ணுவதற்கென்று செய்திருக்கிற ஏற்பாட்டின்படி] நடவடிக்கை நடத்துவது.

(d) யாதொரு உத்தியோகத்தை வகிக்க பாத்தியதை உடையவரென்றா யாதொரு நபர் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விஷயங்களிலே—அந்த உத்தியோகத்தைச் சேர்ந்த அலுவல்களை நடத்தக்கூடாதென்றாகிலும், அதைச்சேர்ந்த கடமைகளைச் செய்யக்கூடாதென்றாகிலும், அதற்குரிய வருமானங்கள் எவையேனுமிருந்தால் அவைகளை வசூல்செய்யக்கூடாதென்றாகிலும், நோடிஸில் கண்ட நபரையோ அல்லது நபர்களையோ தடுப்பதாகக் கலெக்டருடைய கையெழுத்தும் முத்திரையும் போடப்பட்ட எழுத்துமூலமான ஒரு நோடிஸைப் பிறப்பிப்பது. அந்த உத்தியோகத்தின் வருமானம் நிலவாடகையாகவோ அல்லது தீர்வையாகவோ இருக்கிற விஷயங்களில், டிக்ரிபெற்றிருப்பவருக்கு அந்த வாடகையையோ அல்லது தீர்வையையோ கொடுத்துவிடவேண்டுமென்று கட்டளையிட்டு, அந்த நிலங்களின் அனுபோகபாத்தியதை உடையவருக்குங்கூட நோடிஸ் கொடுக்கவேண்டும்.

61. வியாஜ்ஜியங்களைக்குறித்த ரெஜிஸ்டரில் பதிவாகும்படி கலெக்டருக்குத் தெரிவிக்கப்பட்டாலன்றி மற்றப்படி, யாதொரு டிக்ரியின் பிரகாரம் தொகை கட்டப்பட்டதும், அதைக்கணக்கில் சரிக்கட்டினதும் கலெக்டரால் அங்கீகரிக்கப்படமாட்டா.

62. டிக்ரிகளை நிறைவேற்றுவதற்காகச் செய்யப்படும் விண்ணப்பங்களைக் குறித்த ரெஜிஸ்டர்களையும், டிக்ரிகளை நிறைவேற்றும்படி பிறப்பிக்கப்பட்ட வாரண்டுகள் அல்லது இதர கட்டளைகளைக்குறித்த ரெஜிஸ்டர்களையும், இதக்கென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நமூனக்களின்படி வைத்துவரவேண்டும், 60-வது விதியில் குறிப்பிடப்பட்ட வாரன்டையும் நோடிஸுகளையும் குறித்த நமூனக்கள் கடைசியில் அச்சிடப்பட்டிருக்கின்றன.

B.—செலவுகளை கணக்கிட்டு ஏற்படுத்துவது.

63. சகல வியாஜ்ஜியங்களுக்காகவோ அல்லது அப்பீல்களுக்காகவோ அல்லது நிறைவேற்றுவதைப்பற்றிய (எக்ஸிக்யூஷன்) நடவடிக்கைக்காகவோ பிடிக்குஞ்செலவுகளை, அனுபந்தத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற கட்டணவீதத்தை அனுசரித்துக் கணக்கிடவேண்டும். நியாயாதிகளின் கட்டணங்களாக யாதொரு செலவும் கொடுக்கும்படி தீர்மானிக்கப்படமாட்டாது.

(vi)-வது பகுதியின்படி—3-வது பிரிவில் (1)-வது வகுப்பில் வரும் கிராம உத்தியோகங்களை வகித்திருப்பவர்களுக்கு ஏற்படுத்த வேண்டிய சம்பளங்களும் வேறே வர்த்தனைகளும், அவைகளைக் கொடுக்கும் விதமும்.

A.—சம்பளங்களும் வேறே வர்த்தனைகளும்.

64. ஆக்டின் 3 வது பிரிவு (1) குறிப்பிட்ட வகுப்பில் வரும் கிராம உத்தியோகங்களை வகித்திருப்பவர்களுக்கு, கவர்ன்மெண்டாருடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டு ரெவினியு போர்டாரால் அப்போதைக்கப்போது நிஷ்கரிஷை செய்யப்படும் வீதத்தின்படி நிஷ்கரிஷையான மாதாந்தரச் சம்பளம் கொடுக்கப்படும்.

65. சம்பளத்தையும் பதிலுக்கு வேலை பார்ப்பதற்கான வர்த்தனைகளையுங் குறித்து ஸிவில் ஸெர்விஸ் ரெகுலேஷன்களில் ஏற்படுத்தியிருக்கும் விதிகள் கிராம உத்தியோகஸ்தர்களுக்குப் பிரயோகப்படமாட்டா.

66. யாதொரு கர்ணமாவது கிராமப் பெரியதனக்காரராவது இரண்டு அல்லது பல கிராமங்களின் வேலைகளை நடத்தினால், டிவிஷனல் ஆபீஸருடைய அனுமதியின்மேல், அவருக்கு அப்படிப்பட்ட இரண்டு அல்லது சகல உத்தியோகங்களின் முழுச்சம்பளத்தையும் கொடுக்கலாம். மொத்தத்தில் மூன்று மாதத்துக்கு அதிகப்படாமல் காலியாகிற ஸ்வல்ப விஷயங்களில் மாத்திரம் இந்த சம்பந்தஞ் செய்ய இடமுண்டு.

67. தாசில்தாரர்களும் சுயாதீனமான அதிகாரம் வகித்திருக்கும் டெப்யுடி தாசில்தாரர்களும் ஒரு தடவையில் மூன்று மாதத்துக்கு மேற்படாத கால அளவுகளுக்குக் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ரஜா கொடுக்கலாம். ரஜா பெற்றுக்கொள்ளும் உத்தியோகஸ்தருடைய யாதொரு பாத்தியஸ்தராவது சினேகிதராவது அவருடைய உத்திரவாதத்தின்மேல் அந்த உத்தியோக அலுவல்களை நடத்தவேண்டியதென்னும் ஷரத்தின்மேல் சாதாரணமாய் அப்படிப்பட்ட ரஜா கொடுக்கவேண்டும்.

68. தாசில்தார்களும் சுயாதீனமான அதிகாரம் வகித்திருக்கும் டெப்யுடி தாசில்தார்களும் ரஜாவிலிருக்கும் கிராம உத்தியோகஸ்தர்களுக்குப் பர்த்தியாக நபர்களைச் சம்பளம்கொடுத்து நியமிப்பது அவசியமாயிருந்தால், ஏககாலத்தில் மூன்று மாதத்துக்கு அதிகப்படாத கால அளவுக்கு கிராம உத்தியோகஸ்தர்களுக்குப் பர்த்தியாக நபர்களைச் சம்பளம்கொடுத்து நியமிக்கலாம்; ஆனால், இது-கீழ்த்தர ஊழியக்காரர்களின் விஷயத்தில் தவிர மற்ற விஷயங்களிலே, அந்தப்படி செய்திருக்கும் நேமகங்களைப்பற்றிய ஒரு ஸ்டேட்மெண்டைக் கிராமசாரமான அனுமதிக்காக டிவிஷனல் ஆபீஸருக்குப் பிரதிமாதமும் அனுப்பவேண்டுமென்னும் விலக்கு நிபந்தனைக்கு உட்பட்டதாகும்.

69. மூன்று மாதத்துக்கு அதிகமான கால அளவுகளுக்கு ரஜாவேண்டு மென்று செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்களை டிவிஷனல் ஆபீஸர்கள் பைசல்பண்ணவேண்டும்.

70. ரஜாவாங்கி யிருப்பதனுலோ அல்லது வேலையினின்றும் நீக்கிவைக்கப்பட்டிருப்பதனுலோ நிலையான யாதொரு உத்தியோகஸ்தர் வேலைக்கு வராம லிருக்கும்போது பதிலுக்கு யாரையாவது நியமித்தால், அந்த உத்தியோகத்துக்குரிய சம்பள முழுவதையும், பதிலுக்கு வேலைபார்ப்பவருக்குக் கொடுக்கவேண்டும்; ஆனல், அவர் வேறொரு கிராமத்தின் கிராம உத்தியோகஸ்தராக இருக்கிற பக்ஷத்தில் அந்தப்படி செய்யாமல் மேலே சொன்ன 66-வது விதியை அனுசரிக்கவேண்டும்.

71. ஸம்மன் செய்யப்படுவதன்மேல் கோர்ட்டுகளுக்குப் போய் ஹாஜரா கிற கிராம உத்தியோகஸ்தர்கள் அலுவல்மேலிருப்பவர்களாக எண்ணப்படுவார்கள்.

B.—கிராம உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் முதலானவைகளைக் கொடுக்கும் விதம்.

72. ஆக்டின் 3 வது பிரிவு (1) குறிப்பிட்ட வகுப்பில் வரும் கிராம உத்தியோகங்களை வகித்திருப்பவர்களுக்கு அவர்கள் உத்தியோகஞ்செய்கிற கிராமங்களின் ரெவினியு வசூல்களிலிருந்து சம்பளம் கொடுக்கவேண்டும்; ஆனல், கிராமங்களில் வசூல் குறைவாகவோ அல்லது சூனியமாகவோ இருந்தால், அவர்களுடைய சம்பளத்தை யாதொரு ஸர்க்கார் ட்ரெஷரியிலிருந்தாகிலும் (கஜானவிலிருந்தாகிலும்) பாங்கியிலிருந்தாகிலும் வாங்கலாம்.

73. ஒவ்வொரு மாதத்தின் ஆரம்பத்திலும் அதற்கு முன்மாதத்தில் வாஸ்தவத்திலே வேலையிலிருந்த கிராமச் சிப்பந்தியின் சம்பளப்பட்டிகளை கர்ணம், கிராமப் பெரியதனக்காரர் ஆகிய இவர்களுடைய கையெழுத்து சகிதமாய் அதற்கென்றேற்படுத்தியிருக்கிற நமூனப்படி தயார்செய்து தாலூக்கா ஆபீஸுக்கு அனுப்பவேண்டும்; இந்த நமூனவின் அச்சிட்ட பிரதிகள் தாசில்தாரர்களால் சர்ப்பராசெய்யப்படும். கொடுக்கவேண்டியதாயிருந்தும் ரஜா பெற்றுக்கொண்டு வராமலிருப்பது முதலான காரணத்தினல் பில் செய்யப்படாமலிருக்கிற யாதொரு தொகையை, அது வாங்கப்படாத சந்தர்ப்பங்களைப்பற்றி ஒரு சுருக்கமான விவரத்துடனே ஷரா கலத்தில் குறிக்கவேண்டும்: பின்னல் பில்செய்து அந்தத் தொகையைக் கொடுக்கும்படி கேட்கும்போது இந்தப் பதிவுகளைச் சுட்டிக்காட்டவேண்டும்.

74. பிரதி ரெவினியு கிராமத்துக்காகவாவது கிராமப் பெரியதனக்காரர் விசாரணையிலிருக்கிற பிரதேசத்துக்காகவாவது தனித்தனியே சம்பளப்பட்டி

அனுப்பவேண்டுமேயன்றி, யாதொரு கர்ணத்தின் வசத்திலிருக்கும் கிராமங்களின் தொகுப்புக்காக மொத்தமாய் அனுப்பக்கூடாது.

75. இந்த சம்பளப்பட்டியானது-தாலூகா ஆபீஸில் பரிசோதிக்கப்பட்டுத் தாசில்தாரோ அல்லது அவரில்லாவிட்டால் தாலூகா ஷிரஸ்ததாரோ அல்லது ஹெட் அக்கௌன்டான்டோ கையெழுத்துபண்ணி (சம்பளம்) கொடுக்கலாமென்று எண்டார்ஸ்செய்த உத்தரவுடனே கிராமங்களுக்குத் திரும்பவும் அனுப்பிவிடப்படும்.

76. சம்பளம் கொடுத்தபிறகு அதற்கென்று ஏற்படுத்தியிருக்கிற கலத்திலே கையெழுத்துக்களை வாங்கி, சம்பளப்பட்டியைக் கிராம இரிசால்களுடனே தாலூகாவுக்கு அனுப்பவேண்டும்; சம்பளமாகக் கொடுத்துச் செலவான தொகையை, (13, 15-வது நெ.) கிராம ரொக்கக் கணக்குகளிலே மொத்த வசூலிலிருந்து கழிக்கப்பட்ட தொகையாகக் காட்டியிருக்கவேண்டும்.

77. சம்பளத்தை யாதொரு சர்க்கார் ட்ரெஷரியிலிருந்து வாங்குவதாயிருந்தால், சம்பளம் கொடுக்கவேண்டிய உத்தரவைச் சம்பளப்பட்டியின்மேல் எண்டார்ஸ் பண்ணவேண்டும்; ஆனால், சம்பளத்தை யாதொரு பாங்கிலிருந்து வாங்குவதாயிருந்தால், அச்சடித்த ஒரு செக்கைக் கொடுக்கவேண்டும். இந்த இரண்டு விஷயங்களில் எதிலும், சம்பளம் வாங்கிக்கொண்டவர்களுடைய கையெழுத்துக்களைப் பெற்றபிறகு மீண்டும் தாலூகா ஆபீஸுக்கு அனுப்பும் பொருட்டுச் சம்பளப்பட்டியைக் கிராமத்துக்குத் திருப்பவும் அனுப்பவேண்டும்.

78. பாக்கியாக நின்றிருக்கிற தொகைகளைப் பிரத்தியேகமான சம்பளப் பட்டிகளில் பில்பண்ணவேண்டும்; அந்த பாக்கிகள் எவ்வளவு காலத்துக்காகச் சேரவேண்டுமோ அந்தக் கால அளவுகளின் விவரங்களையும், அவைகள் ட்ரெஷரிக்கு எப்போதேனும் வாபஸ் பண்ணப்பட்டிருந்தால் அவ்வாறு வாபஸான மாதங்களின் விவரங்களையும் ஜாக்கிரதையாகக் குறிக்கவேண்டும்.

79. யாதொரு சம்பளம் ஒருவருஷத்துக்கு அதிகமாக வாங்கப்படாமலிருந்தால், அதை ட்ரெஷரி டெப்புடி கலெக்டருடைய அனுமதியை அதற்கென்று பிரத்தியேகமாய்ப் பெற்றுக்கொள்ளாமல் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு பட்வாடா பண்ணக்கூடாது.

80. பாங்கின் பெயருக்கோ அல்லது ட்ரெஷரி பெயருக்கோ செக்குகளினாலாவது பேமெண்ட் ஆர்டர்களென்னும் தொகை கொடுப்பதற்கான உத்தரவுகளினாலாவது தொகைகள் வாங்கப்படுகிற விஷயங்களிலே, பட்வாடாசெய்யப்படாத சம்பளங்களை அடுத்தமாதச் சம்பளப் பட்டியில் தொகையைக் குறைவாக வாங்குவதனாலே வாபஸ் செய்யவேண்டும்.

(ii)-வது பகுதியின்படி—3-வது பிரிவு (1)-வது (3)-வது வகுப்புகளில் வரும் கிராம உத்தியோகங்களை வகித்திருக்கிறவர்களுடைய கடமைகளும், அவர்கள் வைக்கவேண்டிய கணக்குகளுக்கும் ரெஜிஸ்டர்களுக்கும் விவரமும் நமூனக்களும்.

A.—3-வது பிரிவு (1)-வது வகுப்பில் வரும் கிராம உத்தியோகங்களை வகித்திருப்பவர்களுடைய கடமைகள்.

81. 3-வது பிரிவு (1)-வது வகுப்பில் வரும் கிராம உத்தியோகங்களை வகித்திருப்பவர்கள் கிராம உத்தியோகஸ்தர்களைக்குறித்த சட்ட புஸ்தகத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற அலுவல்களையும், தகுந்த அதிகாரியால் அப்போதைக்கப்போது அவர்கள் வேறே என்னென்ன செய்யவேண்டுமென்று உத்தரவாகிறதோ அந்த அலுவல்களையும் செய்யவேண்டும். அல்லாமலும், கிராமக் கணக்குகளைப் பற்றிய மானுயலில் அடங்கியிருக்கிற கணக்குகளையும் ரெஜிஸ்டர்களையும், அப்போதைக்கப்போது தகுந்த அதிகாரியால் அவர்கள் வேறே என்னென்ன கணக்குகள் தயார்செய்யவேண்டுமென்று உத்தரவு செய்யப்படுகிறதோ அந்தக் கணக்குகளையும் அவர்கள் வைத்துவரவேண்டும்.

B.—3-வது பிரிவு (3)-வது வகுப்பில் வரும் கிராம உத்தியோகங்களை வகித்திருப்பவர்களுடைய கடமைகள்.

82. 1802-ம்ளுத்திய சென்னபட்டணத்து 29-வது ரெகுலேஷன் செலாவணியாய்க்கொண்டிருக்கிற ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளிலுள்ள கர்ணங்கள் நீங்கலாக, 1894-ம்ளுத்திய சென்னபட்டணத்து 2-வது ஆக்ட் வியாபிக்கும்படி செய்யப்பட்டிராத ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளிலுள்ள கர்ணம், பெரியதனக்காரர், தலையாரி ஆகிய உத்தியோகங்களை வகித்திருப்பவர்கள் - 1894 ம்ளுத்திய சென்னபட்டணத்து 2-வது ஆக்ட் 32-வது பிரிவின்படி செய்யப்பட்ட விதிகளில் அப்படிப்பட்ட உத்தியோகங்களை வகுத்திருப்பவர்களுக்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கடமைகளைச் செய்யவும் கணக்குகளை வைத்துவரவும் வேண்டும்.

83. வெட்டிகள் அல்லது தோட்டிகள் - ரெவினியு (தீர்வை) வசூல்செய்வதற்காகப் பிறப்பிக்கப்பட்ட ப்ராஸெஸ் என்னும் கட்டளைகளை நிறைவேற்றவும், பூஸ்திதிக்குடையவருக்குச் சேரவேண்டிய வாடகைகளை வசூல்செய்யவும், நிலங்களையும் தானியத்தையும் அளக்கும் விஷயத்திலும், பயிர்களைப் பார்வையிடும் விஷயத்திலும், பூஸ்திதிக்குடையவர் அல்லது அவருடைய கீழுத்தியோகஸ்தர்களுக்கும், ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும், கிராமத்திலுள்ள குடிகளுக்கும், சமாசாரங்களையும் கணக்குகளையும், ரிட்டர்ன்களையும் (விவரக்கணக்குகளையும்) கொண்டுபோகும் விஷயத்திலும் கர்ணத்தின் உத்தரவுகளின்படி நடக்கவும் வேண்டும்.

84. பெரியதனக்காரருடைய உத்தரவுகளின்படி நடக்கும் நீர்க்கட்டி, ஏரிகளினின்றும் கால்வாய்களினின்றும் நீர்ப்பாய்ச்சலுள்ள கிராம நிலங்களின் நீர்ப்பாய்ச்சல் பொறுப்பையுடையவனுவான். நீர்க்கட்டி இல்லாத இடங்களில், கிராமத்தின் குடிகள் தாங்களே அந்த வேலையைப் பார்ப்பது வழக்கமாயிருந்தாலன்றி மற்றப்படி, அந்த வேலையை வெட்டிகள் செய்யவேண்டும்.

(viii)-வது பகுதியின்படி—கிராம உத்தியோகஸ்தர்களால் வைக்கப்பட்ட கணக்குகளையும் வேறே தஸதவேஜுகளையும் பத்திரமாக வைப்பதும், ஹாஜர்செய்வதும், ட்ரான்ஸபர் பண்ணுவதும்.

85. பூஸ்திதிக்குடையவராலாவது கலெக்டராலாவது பார்வையிடுவதற்கு அதிகாரம் கொடுக்கப்பெற்ற உத்தியோகஸ்தர்களுடைய பரிசோதனைக்காக, அவர்களால் உத்தரவு செய்யப்படுகிற சமயத்தில், கர்ணங்களும் மணியக்காரர்களும்—தங்களால் வைத்து வரப்பட்டோ அல்லது தங்களுடைய வசத்திலோ இருக்கிற கணக்குகளையும், ரெஜிஸ்டர்களையும், வேறே தஸ்தவேஜுகளையும் ஹாஜர்செய்ய வேண்டும்.

ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளில் கர்ணங்களால் வைக்கப்பட்டிருக்கும் கணக்குகள்- எல்லா நியாயமான காலங்களிலும் கிராமத்தில் நிலங்களையுடைய அல்லது நிலங்களைச் சாகுபடிசெய்கிற நபர்களும் பார்வையிடக்கூடியவைகளாயிருக்க வேண்டும்.

86. இதில் முன்னே சொல்லியிருக்கிறபடி தங்களுடைய கணக்குகளையும் இதரமான தஸ்தவேஜுகளையும் ஹாஜர்பண்ணும்படி உத்தரவு செய்யப்பட்ட காலங்களிலன்றி மற்றக் காலங்களில், அவர்கள்-கிராம மானுயலில் வேறுவிதமாகச் சொல்லப்பட்டிருந்தாலொழிய, அவைகளைத் தங்களுடைய கிராமங்களிலே பந்தோபஸ்தாக வைத்திருக்கவேண்டும். ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் விஷயத்திலே, கணக்குகளும் தஸ்தவேஜுகளும் யூனி கிராமங்களில் வேண்டியிராத போது தாசில்தாரர் அல்லது டெப்புடி தாசில்தாரருடைய ஆபீஸில் வைத்து வைக்கப்படவேண்டும்.

87. ஆக்டின் 7 வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி சிறிதுகாலத்துக்கு வேலையிலிருந்து நீக்கிவைக்கப்பட்டாலும் தள்ளிவிடப்பட்டாலும், அவர்கள் எல்லாக் கணக்குகளையும் மற்ற தஸ்தவேஜுகளையும் தங்களுக்குப் பிறகு தங்கள் வேலைக்குக் கிரமமாக நியமிக்கப்படுகிறவர்களிடத்தில் ஒப்பிக்கவேண்டும்.

1894-ம் வருஷத்து 2-வது ஆக்டின் விதிகள்.

கிராமங்களைப் பிரிப்பதும் தொகுப்பதும் ஒன்றாய்ச் சேர்ப்பதும் உத்தியோகஸ்தர்களை நியமிப்பதும்.

1. * * * * * *

2. யாதொரு கிராமத்தின் பேரீஜ் 2,000 ரூபாய்க்குக் குறைவாயிருந்தால் ஜில்லா கலெக்டரானவர் - (சென்னபட்டணம்) 1894ம் வருஷத்திய 2-வது ஆக்டின் 7-வது பிரிவின்படி (பெரியதனக்காரரோ அல்லது கர்ணமோ) எந்த உத்தியோகஸ்தரை அதற்கு ஏற்படுத்தவேண்டுமென்பதை நிச்சயிக்கவேண்டும்; அப்படி நிச்சயிக்கும்பொழுது, அந்த காலத்தில் வாஸ்தவமாய் வேலைபார்த்து வரும் நபர்களுக்குள் எவ்வெவர் பெரியதனக்காரர், கர்ணம், முன்சிப், இவர்களுடைய அலுவல்களைச்செய்ய யோக்கியதை யுள்ளவர்களா யிருக்கிறார்களென்பதைப்பற்றி யோசிக்கவேண்டும். அனுமதிகொடுக்கப்பட்ட உத்தியோகத்தை வஹிப்பவர்-இந்த மூன்று உத்தியோகங்களையுஞ்சேர்ந்த அலுவல்களைச் செய்யவேண்டும். மற்ற உத்தியோகம் அல்லது உத்தியோகங்களை எடுத்துவிடவேண்டும். ஒரு கிராமத்தின் ஜனசங்கியை 1,500 ஆகவும் அதற்கு மேற்பட்டும் இருந்தாலும், ஒரு கிராமத்தின் பரிமாணம் அல்லது இதர சந்தர்ப்பங்களை உத்தேசிக்கும்போது பெரியதனக்காரர், கர்ணம் இவ்விரண்டு உத்தியோகஸ்தர்களையும் ஏற்படுத்துவது நியாயமாகத்தோற்றினாலும், இந்த விதியை அனுசரிக்காமலிருக்கலாம். 15-வது பிரிவின் (1) குறிப்பிட்ட உட்பிரிவு அல்லது (2) குறிப்பிட்ட உட்பிரிவு பிரயோகப்படுகிற விஷயங்களிலிருப்பதுபோல, அந்த கிராமத்தில் அல்லது அதற்குச் சரியான கிராமங்களில், திருத்தம் செய்வதற்குமுன், யாதொரு வகுப்பைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் ஒருவருக்குமேலிருந்திருந்தால், ஜில்லா கலெக்டரானவர்-முதலில் 7-வது பிரிவின்படிக்கு ஓர் உத்திரவு செய்யவேண்டியதல்லாமல், 15-வது பிரிவின் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்கீழ் வரும் விஷயங்களில், அப்பொழுதிருக்கும் கிராம உத்தியோகஸ்தர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்குள்ள பாத்தியதைகளையுங்கூட கவனிக்கவேண்டும்; அதன்மேல் பூஸ்திதிக்குடையவர் 15 வது பிரிவின் (2) குறிப்பிட்ட உட்பிரிவின்கீழ்வரும் விஷயங்களில், [15 (1) பிரிவின்படி] ஏற்படுத்தப்பட்ட அல்லது [15 (2) பிரிவின்படி] நிறுத்திக்கொள்ளப்பட்ட உத்தியோகங்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தனவோ அதே வகுப்பைச் சேர்ந்த உத்தியோகங்களை அப்போது வஹிக்கும் நபர்களுக்குள்ளிருந்தாவது, 15-வது பிரிவின் (1) குறிப்பிட்ட உட்பிரிவின் கீழ்வரும் விஷயங்களில், மேலே சொன்னவர்களுக்குள்ளும் அவர்களுடைய குடும்பங்களுக்குள்ளு மிருந்தாவது பொறுக்கி யெடுக்கவேண்டும்.

3. இந்த ஆக்டின் 6-வது 7-வது பிரிவுகளின்படி கிராம உத்தியோகங்களைச் சீர்திருத்துவதற்கான பிரேரேபணைகளைப் போர்டாருடைய உத்தரவுக்கா

அனுப்பும்போது கலெக்டர்கள், சாத்தியமானவரையில், பின்வரும் விதிகளை அனுசரித்து நடக்கவேண்டும்:—

(i) கிராமநத்தங்களுக்கு மத்தியிலுள்ள தூரம் ஒன்றரைமைலுக்கு மேற்படாமலும், ஒன்ருய்ச்சேர்க்கப்பட்ட கிராமங்களின் கூட்டுத்தீர்வை 2,000 ரூபாய்க்கு மேற்படாமலும் இருக்கும் விஷயத்திலே, கிராம சிப்பந்திகளைத் திருத்தியமைக்கும் காரியத்திற்காக அடுத்துள்ள கிராமங்களை சாதாரணமாய் ஒன்ருேடொன்று சேர்க்கவேண்டும். ஆனல், புதிய தலைகிராமத்திலிருந்து ஒன்றரைமைலுக்கு மேற்பட்ட தூரத்திலே சுற்றுப்பக்கங்களில் முக்கியமான மஜராக்கள் இருக்கும் பட்சத்தில் சாதாரணமாகக் கிராமங்களை ஒன்ருேடொன்று சேர்க்கக்கூடாது.

(ii) ஜனவாசமில்லாத கிராமங்களையும், எல்லைகளைச் சரியாகப் பிரிக்கமுடியாத விதமாய் ஒன்ருேடொன்று கலந்துள்ள நிலங்களிலிருக்கும் கிராமங்களையும், இடையிலுள்ள தூரம் குறித்த அளவுக்கு மேற்பட்டிருந்தபோதிலும், ஒன்ருேடொன்று தொகுப்பாகச் சேர்க்கலாம். கிராமங்களைச் சேர்ப்பது யுக்தமென்று தோற்றுமானல், சேர்க்கப்பட்ட கிராமங்களின் கூட்டுத்தீர்வை 2,000 ரூபாய்க்கு மேற்பட்டிருக்குமென்கிற காரணமானது கிராமங்களை ஒன்ருய்ச்சேர்ப்பதற்குத் தடையாயிருக்கலாகாது.

(iii) 2-வது விதியில் நிபந்தனைகண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, ஒவ்வொரு புது கிராமத்திலும் குறைந்தது ஒரு கர்ணமும், ஒரு பெரியதனக்காரரும், ஒரு தலையாரியும் இருக்கவேண்டும்; ஆனல், ஒரு தொகுப்பிலிருக்கும் சிறு கிராமங்களில் எதாவது ஒரு கிராமம் பிரதானமாயிருக்கும் காரணத்தினல் அவசியமாயின், அட்டடிப்பட்ட சிறு கிராமத்தில் வசித்துக் காவல்காக்க பிரத்தியேகமாய் ஒரு தலையாரியை நியமிக்கலாம்.

(iv) சிப்பந்திகள் இவ்வளவு பெயர்கள் இருக்கவேண்டு மென்பதைப்பற்றியும் அவர்களுக்கு இவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டுமென்பதைப் பற்றியும் [மேலேகண்ட 2-வது விதியின் நிபந்தனைகளுக்கும் பின்வரும் (v) குறிப்பிட்ட பகுதிக்கு முட்பட்டு] அடியிற்கண்ட விதத்தின்படி சிபாரிசுசெய்யவேண்டும்; அப்படி செய்யும்போது, எவ்வளவு தூரம் அந்த விதத்தை அனுசரிப்பது சாத்தியமோ அவ்வளவு தூரம் அனுசரித்துச் செய்யவேண்டும்:—

கவர்ன்மெண்டுக்குச் செலுத்தத்தக்க தண்ணீர்த்தீர்வை அல்லது
க்விட்ரென்ட் உள்பட பேஷ் தாம்.

ரூ. 1,500 ஆகவும், அதற்குக் குறைந்தும் இருந்தால்—ரூ. 4 சம்பளமுடைய ஒரு கர்ணம் அல்லது பெரியதனக்காரர்.

ரூ. 1,500 க்கு மேற்பட்டும் ரூ. 2,000-க்கு உட்பட்டுமிருந்தால்—ரூ. 5 சம்பளமுடைய ஒரு கர்ணம் அல்லது பெரியதனக்காரர்.

குறிப்பு.—பேரீஜ் ரூ. 15,000-க்கு மேற்படாவிட்டாலுங்கூட, ஜனசங்கியை 1,000-க்கு மேற்படும் இடங்களில் உயர்தரச் சம்பளம் கொடுக்கலாம்.

	கர்ணத்தின் சம்பளம்.	பெரியதனக்காரரின் சம்பளம்.
	ரூ.	ரூ.
ரூ. 2,000-க்குக் குறையாமலும் ரூ. 4,000-க்குக் குறைந்துமிருந்தால்.	6	5
ரூ. 4,000-க்குக் குறையாமலும் ரூ. 8,000-க்குக் குறைந்துமிருந்தால்.	7	6
ரூ. 8,000-க்குக் குறையாமலும் ரூ. 12,000-க்குக் குறைந்துமிருந்தால்.	9	7
ரூ. 12,000 ஆகவும் அதற்கு மேற்பட்டுமிருந்தால்	11	9

குறிப்பு 1.—ரூ 2,000-க்குக் குறைந்த பேரீஜ் உள்ள கிராமங்களுக்குப் பூர்த்தியாய் எல்லா உத்தியோகஸ்தர்களும் இருக்க அனுமதிகொடுக்கப்படும் பக்ஷத்தில், கர்ணத்துக்கு ரூ. 5-ம், பெரியதனக்காரருக்கு ரூ. 4-ம் சம்பள விகிதமாகும்.

குறிப்பு 2.—பேரீஜ் ரூ. 8,000-க்கு மேற்பட்டிருந்து, கிராமத்தை உட்பிரிவினைசெய்வது யுக்தமற்றதாயிருக்கும் பட்சத்தில், அவசியமானால், ஒரு உதவிக் கர்ணமும் மணியக்காரரும் கொடுக்கப்படலாம். இந்த உதவிக் கர்ணத்துக்கும் மணியக்காரருக்கும் கொடுக்கப்படும் சம்பளமானது, பேரீஜ் ரூ. 12,000-க்குக் குறைவாயிருந்தால் முறையே ரூ. 5-ம், ரூ. 4-ம், பேரீஜ் ரூ. 12,000 ஆகவோ அல்லது அதற்கு மேற்பட்டோ இருந்தால் ரூ. 6-ம் ரூ. 5-ம் ஆகும்.

	சங்கியை.	சம்பளம்
தலையாரிகள்		ரூ.
200-க்குக் குறையாமலும் 1,500-க்குக் குறைந்தும் ஜனசங்கியையுள்ள தொகுப்புகளுக்கு.	1	3
1,500-க்குக் குறையாமலும் 3,000-க்குக் குறைந்தும் ஜனசங்கியையுள்ள தொகுப்புகளுக்கு.	2	3
3,000-க்குக் குறையாமலும் 4,500-க்குக் குறைந்தும் ஜனசங்கியையுள்ள தொகுப்புகளுக்கு.	3	3
4,500-ம் அதற்கு மேற்பட்டும் ஜனசங்கியையுள்ள தொகுப்புகளுக்கு.	4	3

(v) (1) கோதாவரி கிருஷ்ணு டெல்டாக்களிலுள்ள அல்லது வேறிடங்களில் ஸர்க்கார் ஜலாதாரங்களால் பாயப்பெற்ற கிராமங்கள் 1,000 ரூபாயாவது அதற்கு மேற்பட்டாவது பாசன வருமான முடையவைகளாயிருந்தால், ரயத்வாரி கிராமங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விதப்படி அவைகளுக்கு கிராமசிப்பந்திகள் ஏற்படுத்தவேண்டும். கர்ணங்களின் விஷயத்திலும் பெரியதனக்காரர்களின் விஷயத்திலும் அனுசரிக்கவேண்டிய சம்பள விதத்தை நிச்சயிக்கையில், கவனிக்கவேண்டிய "வருமானம்" பூஸ்திதிக்குடையவருக்குச் செலுத்தவேண்டிய குத்தகைத் தொகையும் கவர்ன்மெண்டுக்குச் செலுத்தவேண்டிய தீர்வையும் தண்ணீர் வரியும் சேர்ந்த மொத்தத் தொகையாகும்; ஆனால், ஏற்படுத்தவேண்டிய வெட்டிகளின் சங்கியையை நிச்சயிக்கையில் பாசன வருமானத்தை மாத்திரமே கவனிக்கவேண்டும்.

(2) பாசன வருமானம் 1,000 ரூபாய்க்குக் குறைந்திருந்தால், மேலேகண்ட (iv) குறிப்பிட்ட பகுதியில் நிர்ணயிக்கப்பட்ட விதத்தை அனுசரிக்கவேண்டும்; ஆனால் பாசன வருமானம் 200-ரூபாயாகவாவது அதற்கு மேற்பட்டாவது இருந்தால், 3-ரூபாயில் ஒரு வெட்டியையும் ஏற்படுத்தவேண்டும்.

4. ஒருவருக்கே உரிய பூஸ்திதிகளிலுள்ள கிராம உத்தியோகஸ்தர்களுக்குக் கிரமமான வித்தியா பரீட்சைகள் எவையும் நிர்ணயிக்கப்படவில்லை; ஆனால், கர்ணங்கள் பூஸ்திதிக்குடையவருக்கும் டிவிஷனல் ஆபீஸருக்கும் திருப்திகரமாக எழுதப்படிக்கவும் கணக்குவைக்கவும் கூடியவர்களாய்இருக்கவேண்டும்; மேலும், ஸர்வேசெய்யப்பட்ட பூஸ்திதிகளிலுள்ள கர்ணங்கள் ஸர்வே பயிற்சி பெறும்படியும் நிர்ப்பந்திக்கவேண்டும்.

5. ஆக்டின் 5-வது பிரிவின்படி பூஸ்திதிக்குடையவர்கள் அனுப்பவேண்டிய ரெஜிஸ்டர்களும், காலியான வேலைகளுக்குச் செய்யப்படும் நேமகங்களைகுறித்து 9-வது பிரிவின்படி டிவிஷனல் ஆபீஸர்களுக்கு அனுப்பவேண்டிய நோடீஸும் இதற்கென்று ஏற்பட்டிருக்கும் நமூனுக்களின்படி முறையே இருக்கவேண்டும். 15-வது பிரிவின் (1)-வது (2)-வது உட்பிரிவுகளின்படி தெரிந்தெடுக்கப் படுகிறவர்களைப்பற்றிய நோடீஸுகளை முறையே ஏற்பட்டிருக்கும் நமூனுக்களின்படி எழுதி டிவிஷனல் ஆபீஸருக்கு அனுப்பவேண்டும்.

6. பலவகையான கிராம உத்தியோகஸ்தர்களின் கடமைகளும், அவர்கள் வைத்துவரவேண்டிய கணக்குகள், ரெஜிஸ்டர்கள், இவற்றின் விவரங்களும் நமூனுக்களும்.—(i) கர்ணங்கள்-தாங்கள் இப்பொழுது வழக்கமாக வைத்துவருகிற, அல்லது பூஸ்திதிக்குடையவர்களாகிலும் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களாகிலும் தயார்செய்யும்படி அப்போதைக்கப்போது தங்களுக்குக் கட்டளையிடுகிற அல்லது இனிமேல் அவர்களால் நிர்ணயிக்கப்படக்கூடிய கணக்குகளை வைத்துவரவேண்டும்; மேலும், அவைகளினின்றும் தயார்செய்து அனுப்

படிகேட்கும் ரிடர்ன்களை (விவரக்கணக்குகளை) பூஸ்திதிக்குடையவர்களுக்காவது கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களுக்காவது சவதரிக்கவேண்டும். அன்றியும், பூஸ்திதிக்குடையவர்களாலும் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களாலும் தங்களுக்குப் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளைக் கட்டுக்கட்டி அவர்கள் வைத்திருக்கவேண்டும். தற்காலம் வைத்துவரும்படி உத்தரவாயிருக்கும் கணக்குகளில் சில ஷெட்யூலில் அதிக விவரமாய்க் குறிக்கப்பட்டிருக்கின்றன.

(ii) நியாயமான காலங்களிலெல்லாம் கணக்குகளையும் தஸ்தவேஜுகளையும், பூஸ்திதிக்குடையவராலாவது கவர்ன்மெண்டாராலாவது அவைகளைப் பரிசோதிக்கும்படி அதிகாரங்கொடுக்கப்பெற்ற உத்தியோகஸ்தர்களும், கிராமத்தில் நிலங்களை உடையவர்களாகவாகிலும் சாகுபடி செய்துகொண்டிருப்பவர்களாகவாகிலுமுள்ள நபர்களும் பார்க்கவேண்டுமானால் அவைகள் பார்க்ககூடியவைகளாயிருக்கவேண்டும்; மேலும், கலெக்டராவது பூஸ்திதிக்குடையவராவது இவர்களில் எவராலாகிலும் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தராவது உத்தரவு செய்யக்கூடிய காலங்களிலும் இடங்களிலும் அவருக்கு முன்பாக அவைகளை ஹாஜர்ப்படுத்தவேண்டும்.

(iii) இதில் முன்னே சொல்லியதுபோல் தங்களுடைய கணக்குகளையும் தஸ்தவேஜுகளையும் ஹாஜர்ப்படுத்தவேண்டுமென்று உத்தரவு செய்யப்படும்போதன்றி மற்ற வேளைகளில், கர்ணங்கள் அவைகளைத் தங்கள் கிராமங்களிலே சீராய் வைத்திருந்து, இனி வேண்டியிராதபோது அவைகளைத் தாசில்தாரர் ஆபீஸிலாவது டெப்புடி தாசில்தாரர் ஆபீஸிலாவது வைத்திருக்கவேண்டும்.

(iv) ஆக்டின் 16-வது பிரிவைச்சேர்ந்த (2) குறிப்பிட்ட பகுதியின்படி வேலையிலிருந்து சிறிதுகாலத்துக்கு நீக்கிவைக்கப்பட்டாலும் வேலையிலிருந்து தள்ளிவிடப்பட்டாலும் அவர்கள் எல்லாக் கணக்குகளையும் தஸ்தவேஜுகளையும் தங்களுக்கு பதிலாக கிரமமாய் நியமிக்கப்படும் உத்தியோகஸ்தர்களிடத்தில் ஒப்பிக்கவேண்டும்.

(v) ரயத்துகளும் பூஸ்திதிக்குடையவரும் மாசூலை அந்தப்படியே பங்கிட்டுக்கொள்வதாயிருந்தால், மாசூலை மதிப்பிடும்போதும் தானியத்தைத தாளடிக்கும்போதும் அளக்கும்போதும் கர்ணங்கள் ஹாஜராயிருக்கவேண்டும்.

(vi) கிராம முன்சீப், கிராமப்பெரியதனக்காரர் ஆகிய இவர்கள் தங்கள் ஸிவில், மஜிஸ்டீரியல், போலீஸ் அலுவல்களை நிறைவேற்றுவதில் கர்ணங்கள் அவர்களுக்கு உதவிசெய்யவும் வேண்டும்.

(vii) அஜ்மாஷ் அல்லது பார்வையிடும் வேலையிலும், பட்டாக்களையும் முச்சிலிக்காக்களையும் பரிவர்த்தனைசெய்வதிலும், பூஸ்திதிக்குடையவருக்குப்பணமாகவாவது மாசூல் ரூபமாகவாவது பாக்கியாயிருக்கிற குத்தகைத் தொகையை வசூல்செய்வதிலும் பூஸ்திதிக்குடையவரின் உத்தியோகஸ்தர்களுக்கு அவர்கள் உதவிசெய்யவும் வேண்டும்.

(viii) இந்த ஆக்டின் வியாபகத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட கிராம உத்தியோகங்களுடன் சேர்ந்திருக்கிற இனங்களை ஊழிய நிபந்தனையினின்றும் நிவர்த்திக்கும் வேலையை நிறைவேற்ற இதுவிஷயமாய் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்படும் உத்தியோகஸ்தர்கள் அதைச் செய்யக்கூடியவர்களாயிருப்பதற்கு அவசியமாகும். இன்னும் வேறு சங்கதிகளையும், பரிபாலனம் அல்லது வேறு காரியங்களுக்காகக் கலெக்டரால் கேட்கப்படும் ஏதாவது ரிடர்ன் அல்லது வேறு சங்கதியையும் அவர்கள் சவதரிக்கவேண்டும்.

(ix) கட்டளையிட்டபோது வயல்களை அளப்பதும், வயல் அளவுப் புஸ்தகங்களைத் தயார்செய்து வைத்துவருவதுங்கூட அவர்களுடைய கடமையாகும்.

7. (i) பெரியதனக்காரர்கள் க்விட்ரெண்ட், வருமானவரி, தண்ணீர்வரி, இன்னும் முறையே தங்கள் தங்கள் கிராமங்களில் வசிக்கும் ரயத்துகள் கவர்ன்மெண்டுக்குச் செலுத்தவேண்டிய இதர வரிகள் ஆகிய இவற்றை வசூல் செய்து அனுப்பி, அவைகளை வசூல்செய்வதற்காகப் பிறப்பிக்கப்படும் சகல கட்டளைகளையும் நிறைவேற்றி, பாக்கிக்காக ஜப்தி செய்யப்பட்ட சொத்தைத் தங்கள் வசத்தில் வைத்திருக்கவேண்டும்.

(ii) அவர்கள்-ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களெல்லாருக்கும், பூஸ்திதிக்குடையவர் அல்லது அவருடைய வேலைபாட்களுக்கும் எல்லாப் பிரயாணிகளுக்கும் போக்குவரத்துக்கான வண்டி முதலியவைகள் கிடைப்பதிலும் அவர்கள் ரொக்கம் கொடுத்துச் சாமக்கிரிகள் பெருவதிலும் உதவிசெய்யவேண்டும்; அதே மாதிரியாகப் பிரயாணம்செய்யும் சேனைகளுக்குச் சாமக்கிரிகள் சர்ப்பரா செய்வதில் ரெவினியு உத்தியோகஸ்தர்களுக்கு எல்லா உதவியையும் செய்ய வேண்டும்.

(iii) தங்களுடைய கிராம எல்லைக்குள் குற்றங்கள் யாரும் செய்யாதிருக்கும்படி எல்லாவகையாலும் தடுக்க முயற்சிசெய்வது பெரியதனக்காரர்களுடைய கடமையாகும். அல்லாமலும், அவர்கள்-தங்களுடைய அதிகார வரம்புக்குள் குற்றங்களைத் தடுப்பதிலும் கண்டுபிடிப்பதிலும், ஆளைப் பிடிப்பதற்கான வாரண்டுகள், சோதனை வாரண்டுகள், அபராதங்களை வசூல்செய்யும்பொருட்டு அசையும் சொத்தை ஜப்திசெய்து விற்பதற்காகப் பிறப்பிக்கப்பட்டவாரண்டுகள் ஆகிய இவைகளை நிறைவேற்றுவதிலும், எந்தக் குற்றங்களுக்காக வாரண்டில்லாமலே ஆளைப்பிடிக்கப் போலீஸார் உத்தரவு பெற்றிருக்கிறார்களோ அந்தக் குற்றங்களைச் செய்ததற்காக நபர்களைப் பிடிப்பதிலும் போலீஸாருடன் ஏகோபித்து அவர்களுக்கு உதவிசெய்யவேண்டும்.

(iv) அவர்கள் தங்களுடைய கிராமங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸர்க்கார் கால்நடைப் பவுண்டுகளுக்குத் தங்களுடைய உத்தியோக முறைமையில் அதிகாரிகளாகவும் இருக்கவேண்டும்.

(v) அவர்கள் - பூஸ்திதிக்குடையவருடைய ரொக்க குத்தகைத்தொகைகளை வசூல்செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டால், வசூல்செய்து, அப்படி வசூல்செய்த தொகைகளைத் தங்கள் வசத்தில் வைத்திருந்து, பூஸ்திதிக்குடையவரால் நிச்சயிக்கப்படும் தேதிகளில் அவருடைய ஆபீஸுக்கு அந்தத் தொகைகளை அனுப்பிவிடவேண்டும். தானிய வாடகையை வசூல்செய்யும் விஷயத்தில் அவர்கள் பூஸ்திதிக்குடையவருக்கு நியாயமான உதவியைச் செய்யவேண்டும். மேலும், குத்தகைத்தொகைகளை வசூல்செய்வதற்காகப் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளைத் தாங்களே நிறைவேற்றவாவது வேண்டும், நிறைவேற்றுவதற்கு அவசியமான உதவிசெய்யவாவது வேண்டும்; அல்லாமலும், குத்தகைத்தொகையின் பாக்கிக்காக ஜப்திசெய்யப்பட்ட அசையும்பொருளை அவசியமாயிருக்கும்போது, அவர்கள் தங்களுடைய வசத்தில், வைத்திருக்கவேண்டும். வசூல் செய்யப்பட்ட தொகைகளும் அசையும்பொருளும் தங்கள் வசத்தில் இருக்கும்போது, பூஸ்திதிக்குடையவரின் உத்தியோகஸ்தர்கள் அவைகளைப் பார்வையிட இஷ்டப்பட்டால் பார்வையிடக்கூடியவையா யிருக்கவேண்டும்.

(vi) மரங்கள் கல்வெட்டியெடுக்குமிடங்கள், மீன் பிடிக்குமிடங்கள் முதலியவைகளிலிருந்துவரும் வரி விஷயத்தில் பூஸ்திதிக்குடையவர்களின் பாத்தியதைகளை அவர்கள் காக்கவேண்டும்; மேலும், அவர்கள்-ஏரிகளும் இதா பாசன வேலைகளும் சரியான ஸ்திதியில் இருக்கின்றனவா என்பதையும், அவைகளிலிருந்து ஜலம் சரியாய் பாய்ச்சப்படுகிறதா என்பதையும் மேற்பார்வையிட்டு பூஸ்திதிக்குடையவருக்கு வழக்கமாகச் செய்யப்படும் இதேமாதிரியான கடமைகளையும் செய்யவேண்டும். இதுவுமல்லாமல், தலையாரிகளின் வேலையையும் அவர்கள் அவசியமானவரையில் மேற்பார்வையிடவேண்டும்.

(vii) அடியிற்கண்ட விஷயங்களில் அவர்களிருக்கும் கிராமங்களிலாவது கிராமங்களுக் கருகேயாவது நேரிடும் பொதுஜன இடைஞ்சல்களைக்குறித்துப் பிரதேச சப்-மாஜிஸ்ட்ரேட்டுக்கு அவர்கள் ரிபோர்ட் செய்யவேண்டும்.

(1) பொது ஜனங்களால் உபயோகிக்கப்படுகிறதாகவாவது உபயோகிக்கப்படக்கூடியதாகவாவதுள்ள யாதொரு வழி, நதி அல்லது வாய்க்காலிலிருந்தாகிலும், யாதொரு பொது ஸ்தலத்திலிருந்தாகிலும் ஏதாவது அநியாயமான தடை அல்லது இடைஞ்சலை நீக்கவேண்டுமென்றும்.

(2) ஜன சமூகத்தின் சௌக்கியத்திற்காவது தேகாரோக்கியத்திற்காவது கெடுதியுண்டாகும் காரணத்தால் எந்த வர்த்தகத்தையாகிலும் தொழிலையாகிலும் ஏதேனும் சாமான்கள் அல்லது வர்த்தகச் சரக்குகளை வைத்திருப்பதையாகிலும் ஒழிக்க அல்லது நீக்க அல்லது தடுக்கவேண்டுமென்றும்.

(3) பெருந்தீ அல்லது வெடி உண்டாக்கக்கூடியதாய் ஏதாவது கட்டிடம் கட்டப்பட்டாலும் ஏதாவது வஸ்து ஒருவகை செய்யப்பட்டாலும் அப்படிப்பட்டதைத் தடுக்க அல்லது நிறுத்தவேண்டுமென்றும்.

(4) எந்த கட்டிடமாவது விழத்தக்க ஸ்திதியிலிருப்பதனால் அருகேவசித்துக்கொண்டாவது வேலை செய்துகொண்டாவது பக்கத்தில் நடந்துகொண்டாவதிருக்கும் ஜனங்களுக்குக் கெடுதியுண்டாக்கக் கூடுமென்றும், அது காரணத்தினால் அதை எடுத்துவிடுதல் அல்லது மராமத்து செய்தல் அல்லது அதற்கு முட்டுகொடுத்தல் அவசியமென்றும்.

(5) அப்படிப்பட்ட வழி அல்லது பொது ஸ்தலத்திற்கு அருகே இருக்கும் ஏதாவது குளம், கிணறு அல்லது தோண்டப்பட்ட இடத்திற்கு பொது ஜனங்களுக்கு அபாயம் நேரிடாமலிருக்கும்படி வேலியடைக்க வேண்டுமென்றும்.

அவர்கள் நினைக்கும்போது ரிபோர்ட் செய்யவேண்டும்.

(viii) ரெயில்வேக்களை பாதிக்கக்கூடிய ஏரிகள் எந்த கிராமங்களில் இருக்கின்றனவோ அந்த கிராமங்களின் பெரியதனக்காரர்கள் அந்த ஏரிகளின் நிலைமையை ஜாக்கிரதையாய்க் கவனித்துகொண்டேயிருந்து அவைகள் உடைத்துக்கொள்ளக் கூடிய அபாயமான ஸ்திதியிலிருந்தால் அதிகசமீபத்திலுள்ள ரெயில்வே ஸ்டேஷன் மாஸ்டருக்கு சரியான காலத்தில் எச்சரிக்கை செய்யவேண்டும்.

(ix) பெரியதனக்காரர்கள்-கலெக்டர் நிர்ணயிக்கக்கூடிய ரெஜிஸ்டர்களையும் கணக்குகளையும் வைத்துவரவேண்டும். நியாயமான காலங்களிலெல்லாம் ரெஜிஸ்டர்களையும் கணக்குகளையும், பூஸ்திதிக்குடையவராலாவது கவர்ன்மெண்டாராலாவது அவைகளைப் பரிசோதிக்கும்படி அதிகாரங்கொடுக்கப்பெற்ற உத்தியோகஸ்தர்களும், கிராமத்தில் நிலங்களை உடையவர்களாகிலும் சாகுபடிசெய்துக்கொண்டிருப்பவர்களாகவாகிலுமுள்ள நபர்களும் பார்க்கவேண்டுமானால் அவைகள் பார்க்கக்கூடியவைகளா யிருக்கவேண்டும்; மேலும், கலெக்டராவது பூஸ்திதிக்குடையவராவது இவர்களில் எவராலாகிலும் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தராவது உத்திரவு செய்யக்கூடிய காலங்களிலும் இடங்களிலும் அவருக்கு முன்பாக அவைகளை ஹாஜர்ப்படுத்தவேண்டும்; அல்லாமலும் அவைகளிலிருந்து தயார்செய்யவேண்டிய ரிடர்ன் என்னும் விவரக்கணக்குகளை பெரியதனக்காரர்கள் பூஸ்திதிக்குடையவருக்காவது ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்காவது தயார்செய்து கொடுக்கவும் வேண்டும்.

8. தலையாரிகள் அல்லது கிராமக் காவற்காரர்கள்-ஸம்மன்களையும், நோடீஸுகளையும், உத்தரவுகளையும் சேர்ப்பித்தும், குத்தகைப்பணம் அல்லது வரி வசூல்செய்வதற்காகவன்றி மற்றப்படி எந்த ஹோதாவிலாவது கிராமப்பெரிய

தனக்காரர் பிறப்பிக்கும் கட்டளைகளை நிறைவேற்றியும், கிரமமாக கிராமப் பெரியதனக்காரருக்குக் கீழ்ப்பட்டு வேலைசெய்யவேண்டும்.

பெரியதனக்காரருடைய நேர் அதிகாரத்தின் கீழ் அவர்கள் தங்கள் வழக்கமான போலீஸ் அலுவல்களைச் செய்யவேண்டும்; தீர்வை இருசால்களைத் தாலூகாவுக்கு எடுத்துக்கொண்டுபோகவேண்டும்; கிராமத்தில் சுகாதார விஷயத்தைக் கவனித்துவரவேண்டும். மேலும், அவர்கள் வயல்களையும் பயிர்களையும் பார்த்துக்கொள்ளவேண்டும்; கால்நடை பயிர்கள் மீது நடந்து அவற்றைச் சேதப்படுத்தாமல் தடுக்கவேண்டும்; தாளடிக்குங்களத்தில் வைக்கோற்போரையும் தானிய அம்பாரத்தையும் காவல் காக்கவேண்டும்; பூஸ்திதிக்குடையவரின் குத்தகைத் தொகைகளை எடுத்துக்கொண்டுபோகும்படிக்கும் காவல் காக்கும்படிக்கும் அவர் உத்தரவு செய்தால் அப்படி செய்யவும்வேண்டும். அல்லாமலும், ஜனனமரணங்களைப்பற்றியும், பெருவாரி வியாதிகளும் கால்நடை வியாதிகளும் உண்டாயிருப்பதைப்பற்றியும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு அவர்கள் சமாசாரம் தெரிவிக்கவேண்டும்.

9. அன்றியும், மேலே சொல்லப்பட்ட உத்தியோகஸ்தர்கள்-(1898-ம்ஹூத்து 5-வது ஆக்டாகிய) க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடின் 45-வது பிரிவின்படி அனுப்பவேண்டிய ரிபோர்ட்டுகளை அனுப்பவேண்டும். அல்லாமலும், நோடிஸ் கொடுக்கப்பட்டாலாவது கேட்டுக்கொள்ளப்பட்டாலாவது, அவர்கள் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களுக்கு, 1889-ம்ஹூத்து 4 வது ஆக்டாகிய உப்பு ஆக்ட், 1886 ம்ஹூத்து 1-வது ஆக்டாகிய ஆப்காரி ஆக்ட், 1882-ம்ஹூத்து 5-வது ஆக்டாகிய காட்டைக்குறித்த ஆக்ட் ஆகிய இவற்றின் நிபந்தனைகளைச் சாதாரணமாக நிறைவேற்றுவதில் உதவிசெய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். மேலும், 10 ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புள்ள ஏதாவது புதையல் தங்கள் கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்டால் அதைக்குறித்து ரிபோர்ட்செய்வதும், வாரிசுகளில்லாமல் இறக்கும் நபர்களுடைய ஆஸ்தி ஆட்சிக்காரருக்குச் சேருகிறதென்பதைப்பற்றிச் சமாசாரம் தெரிவிப்பதும் அவர்களுடைய கடமையாகும்.

10. மேலும், பெரியதனக்காரரும் கர்ணமும் தலையாரியும் தங்கள் கிராமங்களில் வசிக்கவேண்டியதன்றி, தங்களுடைய அன்றுடம் அலுவல்கள் கவனிக்கப்படாமற்போகும்படி தங்கள் கிராமங்களை விட்டுப்போகக்கூடாது. பெரியதனக்காரர்-ஒரே காலத்தில் மூன்று நாட்களுக்கு மேற்படாத ஒரு காலத்துக்குத் தம்முடைய சொந்த பொறுப்பின்மேலே தலையாரிக்கு காஷுவல் லீவ் என்னும் ரஜா கொடுக்கலாம். பெரியதனக்காரரும் கர்ணமும் தங்களுடைய சொந்த பொறுப்பின்மேலும் தங்களுடைய அலுவல்கள் கிரமமாய்ச் செய்யப்படுவதற்குக் குந்தகம் ஏற்படாத விதமாகவும், ஒரே காலத்தில் மூன்று நாட்களுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கு காஷுவல் லீவ் எடுத்துக்கொள்ளலாம்; ஆனால் அந்த சங்கதியை அவர்கள் தாசில்தார் அல்லது டெப்யுடி தாசில்தாருக்கும் தங்களுக்குச் சம்பந்தப்பட்ட பூஸ்திதிக்குடையவருக்கும் தெரிவிக்கவேண்டும்.

10-A. (1) சுயேச்சையான விசாரணை அதிகாரம் வகிக்கும் தாசில்தாரர்களும் டெப்யுடி தாசில்தாரர்களும் 10-B விதியின் நிபந்தனைகளுக்குட்பட்டு கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ஒரே காலத்தில் மூன்று மாதத்துக்கு மேற்படாத காலங்களுக்கு லீவ் கொடுத்து, அவசியமானபொழுது, அவர்களுக்கு பர்த்தியாக நபர்களை நியமிக்கலாம்; சேவகர்களின் விஷயத்தில் தவிர மற்ற விஷயங்களிலே, அப்படி செய்யப்பட்ட நேமகங்களைப்பற்றிய ஒரு ஸ்டேட்மெண்டை முறைமையாய் ஜாரிசெய்வதற்காக மாதந்தோறும் டிவிஷனல் ஆபீஸருக்கு அனுப்பவேண்டும். அப்படிப்பட்ட லீவ் கொடுக்கும்பொழுது, லீவ் எடுத்துக்கொண்டவரின் சொந்த பொறுப்பின்மேல் அவருடைய எவரேனும் பந்துவாவது சிநேகிதராவது, ஸர்க்காருக்கு அதிகப்படியான செலவில்லாமல், அந்த உத்தியோகத்தின் அலுவல்களைச் செய்யவேண்டுமென்ற ஷரத்தின்மேல் தான் சாதாரணமாய்க் கொடுக்கவேண்டும்.

(2) மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு லீவுக்காக செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்களை டிவிஷனல் ஆபீஸர்கள் பைசல் செய்யவேண்டும்.

10 B. காஷுவல் லீவில்லாத வேறே லீவுக்காக ஒரு கிராம உத்தியோகஸ்தரிடத்திலிருந்து விண்ணப்பம் வரப்பெற்றவுடனே, தாசில்தாரர் அல்லது டெப்யுடி தாசில்தாரர் அந்த விண்ணப்பத்தின் ஒரு நகலையாவது அந்த விண்ணப்பத்தைப்பற்றிய அவசியமான விவரங்களடங்கிய ஒரு நமூனாவையாவது, தாசில்தாரர் அல்லது டெப்யுடி தாசில்தாரர் அந்த உத்தியோகஸ்தருக்கு பர்த்தியாக நியமிக்க உத்தேசித்திருக்கும் நபரின் பெயருடன் கூட, ரெஜிஸ்டர் தபால் மூலமாய் பூஸ்திதிக்குடையவருக்கு அனுப்பவேண்டும்; மேலும் அப்படி அனுப்பும்பொழுது, பூஸ்திதிக்குடையவர் லீவ் கொடுப்பதைப் பற்றியாவது உத்தேசிக்கப்பட்ட பர்த்தியாளைப்பற்றியாவது ஆட்சேபித்தால், அப்படி ஆட்சேபிப்பதைக் குறித்தும் பர்த்தியாளாக தாம் நியமிக்க விரும்பும் யாதொரு நபரின் பெயரைக் குறித்தும் நோடிஸின் தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் தாசில்தாரர் அல்லது டெப்யுடி தாசில்தாரருக்குத் தெரிவிக்கவேண்டுமென்று காணவேண்டும். பூஸ்திதிக்குடையவரிடத்திலிருந்து பதில் வந்தவுடனாவது, ரெஜிஸ்டர் நோடிஸை அனுப்பின தேதியிலிருந்து பத்து நாள் கழிந்த பிறகு பதிலொன்றும் வாராமலிருந்தாலாவது, தாசில்தாரர் அல்லது டெப்யுடி தாசில்தாரர் லீவ் விண்ணப்பத்தின்மேல் உத்தரவுகள் ஜாரிசெய்து பர்த்தியாள் நியமிக்க அவருக்கு அதிகாரம் இருந்தால் அப்படி நியமித்தோ அல்லது டிவிஷனல் ஆபீஸரின் உத்தரவுகளைப் பெற்றோ அந்த சங்கதியை பூஸ்திதிக்குடையவர் அல்லது அவருடைய பிரதேச எஜெண்டுக்கும் இதுவிஷயத்தில் சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் தெரிவிக்கவேண்டும். நோடிஸின் தேதியிலிருந்து பத்து தினத்துக்குள், 1894-ம்வருஷத்திய சென்னபட்டணத்து ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராம ஊழிய ஆக்ட் 10 (i) பிரிவின்படி யோக்கியதைபெற்ற யாதொரு நபரை பூஸ்தி

திக்குடையவர் நேமகஞ்செய்து அனுப்பினால், சாதாரணமாய் அந்த நேமகத்தை அங்கீகரிக்கவேண்டும்.

நோய் அல்லது போதுமான இதர காரணமிருக்கும் அவசரமான விஷயங்களில், தாசில்தாராவது டெப்புடி தாசில்தாராவது டிவிஷனல் ஆபீஸராவது மேலே விவரித்திருக்கிறபடி பூஸ்திதிக்குடையவருக்கு சமாசாரம் தெரிவிப்பதை எதிர்பார்த்து ஒரு கிராம உத்தியோகஸ்தருக்கு லீவ் கொடுத்து பர்த்தியாளையும் நியமிக்கலாம். அப்படிப்பட்ட விஷயங்களில், லீவ் கொடுக்கப்பட்டதைப்பற்றியும் நேமகஞ் செய்யப்பட்டதைப் பற்றியுமான நோடிஸை கூடிய சீக்கிரத்தில் பூஸ்திதிக்குடையவர்களுக்கு அனுப்பவேண்டும்; மேலும், நிர்ணயிக்கப்பட்ட காலமாகிய பத்து நாட்களுக்குள், அவர் செய்யும் யாதொரு ஆட்சேபனை அல்லது நேமகத்தை, அது வந்தவுடன் கவனிக்கவேண்டும். ஆனால், நோடிஸுக்கு முன்னமே நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்-அவரை நியமித்த உத்தரவானது அதைப் பிறப்பித்த உத்தியோகஸ்தராலாவது அவருக்குமேலுள்ள எந்த அதிகாரியினாலாவது திருத்தப்படுகிற வரையில் கிரமமாய் நியமிக்கப்பட்டவராகவே கருதப்படுவார்.

11. **16-வது பிரிவின்படி விசாரணை நடந்தும்போது அனுசரிக்க வேண்டிய நடவடிக்கை முறை.**—(i) கிராம உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரன்மீது சாற்றப்படும் குற்றங்களையும், எதிர்வாதமாக அவன் சொல்லிக்கொள்ளும் நியாயங்களையும் தெளிவாய் எழுதிவைப்பதுமல்லாமல், சொற்ப கேஸுகளில் தவிர மற்ற விஷயங்களில் கொண்டுவரப்படும் சாட்சியத்தையும் பூர்த்தியாய் எழுதிக்கொள்ளவேண்டும். குற்றச்சாட்டுகளுக்கு அனுகூலமாகச் சொல்லுகிறவர்களும் குற்றஞ்சாட்டப்பட்டவனுக்கு அனுகூலமாகப் பேசுபவர்களும் உட்பட சாட்சிகளை குற்றஞ்சாட்டப்பட்டவனுக்கு முன்னே விசாரிக்கவேண்டும்; மேலும், அச்சாட்சிகளை குறுக்குவிசாரணைசெய்ய குற்றஞ்சாட்டப்பட்டவனுக்கு அனுமதி கொடுக்கவேண்டும். சாட்சியமாகக் கொண்டுவரப்படும் எல்லா தஸ்தாவேஜுகளையும் குற்றஞ்சாட்டப்பட்டவனுடைய பார்வைக்குக்காட்டி அவற்றைப்பற்றி அவன் குறிக்கும் ஷராவை எழுதிவைக்கவேண்டும்.

(ii) ரெவினியு ஆபீஸராவது பூஸ்திதிக்குடையவராவது கேஸின் விஷயத்தில் உத்தரவுகள் பிறப்பிக்கும்போது, பல குற்றச்சாட்டுகளின் விஷயமாகவும் கொண்டுவரப்படும் சாட்சியத்தைச் சுருக்கமாகத் தொகுத்துக்கூறி, இங்கிலீஷிலாவது சுதேச பாஷையிலாவது ஒவ்வொரு குற்றச்சாட்டைப்பற்றியும் குற்றவாளி அல்லவென்று தீர்மானம் செய்யப்பட்டதென்றோ குற்றவாளியெனத் தீர்மானஞ் செய்யப்பட்டதென்றோ ஒரு தெளிவான உத்தரவை எழுதிவைக்கவேண்டியதுமல்லாமல், அதனுடன், இன்ன ஆதாரங்களைக்கொண்டு அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதென்பதைச் சுருக்கமாகத் தெரிவித்து, நடந்த சந்தர்ப்பங்களில் விதிக்கப்பட்ட அபராதத்தொகை அல்லது வேறே தண்டனையையும் குறிக்கவேண்டும்.

(iii) உத்தரவின் அடியில் அப்பீல் செய்வதற்காகக் கொடுக்கப்பட்ட காலம் சமீயும் தேதியைத் தெளிவாகக் குறித்து, பிரதிகளைக் கட்டணமில்லாமலே அது விஷயத்தில் சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரனுக்குக் கொடுக்கவேண்டும்.

அனுபந்தம்.

A. நமூனா.—பூஸ்திதிக்குடையவர் பூஸ்திதியிலுள்ள கிராம உத்தியோகஸ்தர்களைக்குறித்த ரெஜிஸ்டர் வைத்திருக்கவேண்டிய விதம்.

கர்ணங்கள் வைத்துவரும் கணக்குகளின் ஷெட்யூல்.

I. வாரு ஏற்பாட்டில் வைத்திருக்கும் நிலங்களுக்காக—

(a) சேரி நிலங்கள், குடியிருப்பு வீடுகளைச்சேர்ந்த நிலங்கள், ஆகிய இவற்றின் சாகுபடியைத் தெரிவிக்கும் கணக்கு.

(b) அறுப்புக்குத் தயாராயிருக்கும் விளைவையுடைய வயல்களைப்பற்றிய ஸ்டேட்மென்ட்.

(c) விளைவு மதிப்பின் கணக்கு.

(d) சாவி அல்லது விளைவு கெட்டுப்போனதைக் குறித்த கணக்கு.

(e) மொத்தம் மாசூலின் கணக்கு.

(f) பூஸ்திதிக்குடையவரும் பாயக்காரிகளும் தங்களுக்குள் மாசூலை வழக்கமாகப் பங்கிட்டுக்கொள்வதைத் தெரிவிக்கும் ஸ்டேட்மென்ட்.

(g) பூஸ்திதிக்குடையவரும் ரயத்துக்களும் எடுத்துக்கொண்ட மாசூலின் பங்குகளையும் கிராம ஊழியக்காரர்களின் மேரை முதலிய வருமானங்களையும் தெரிவிக்கும் கணக்கு.

(h) பூஸ்திதிக்குடையவரின் பங்கில் குறிக்கப்பட்டிருக்கும் கிராம டௌல் கணக்கு.

(i) சேர்த்துவைக்கப்பட்ட தானியத்தில் பூஸ்திதிக்குடையவரின் பங்கையும், செலவையும், மிகுதியையும் காட்டுகிற கணக்கு.

(j) மாசூல் டிமாண்ட், வசூல், நிலுவை.

II. ரொக்க குத்தகைத்தொகை செலுத்தும் நிலங்களுக்காக—

(1) நபர்வாரி கைப்பற்று நிலமும் தீர்வையும்.

(2) ரொக்க குத்தகைத்தொகையின் கணக்கு.

(3) தோட்ட நிலங்களின் விஸ்தீர்ணமும் தீர்வையும், வாடகை கொடுக்கும் மரங்களின் கணக்கும்.

(4) க்விட்ரென்ட், ஜோடி அல்லது கட்டுபாடி கட்டுகிறவைகளாகவாவது அது கட்டவேண்டியதில்லையென்று நிவாரணையானவைகளாகவாவதுள்ள இனங்களின் நபர்வாரி கணக்கு.
(5) சிட்டா அல்லது ரொக்கக் கணக்கு.
(6) தண்டல் அல்லது வசூல் கணக்கு.
(7) விராசு அல்லது மொத்த கணக்கு.
(8) தீர்வை முதலிய ரொக்க குத்தகைத்தொகைகளின் டிமாண்ட், வசூல், நிலுவை.
(9) இருசால் நாமா.
(10) பூஸ்திதிக்குடையவருக்காகப் பிடித்த செலவைத் தெரிவிக்கும் கணக்கு.

III. பொதுக்கணக்குகள்—

(1) அடங்கல் கணக்கு, அல்லது சேரிநிலம்-குடியிருப்பு வீட்டைச்சேர்ந்த நிலம்-இனம்-ஆகிய இவற்றின் போகவாரி சாகுபடிக்கணக்கு.
(2) ராஜிநாமா கொடுத்துவிட்ட நிலங்களின் கணக்கு
(3) தரிசு புறம்போக்கு நிலங்களின் சாகுபடியைத் தெரிவிக்கும் ஸ்டேட்மென்ட்.
(4) தர்க்காஸ்து எடுத்துக்கொண்ட நிலங்களின் அளவைக்குறித்த கணக்கு.
(5) மேய்ச்சலுக்காக எடுத்துக்கொண்ட தரிசு நிலங்களின் கணக்கு.
(6) ஒவ்வொரு ரயத்தின் கைப்பற்று நிலங்களைக் குறிக்கும் கணக்குகள்.
(7) கைப்பற்று நிலங்கள் மாறுதலையும், வாரிசுநாமா அல்லது ஒருவருக்குப்பின் மற்றொருவர் வருவதனாலாகிய மாறுதலையும் காட்டும் ரெஜிஸ்டர்.
(8) ரோட்வரி கணக்கு.
(9) தக்காவி அல்லது ரயத்துகளுக்குக் கொடுத்த முன்பணத்தின் கணக்கு.
(10) ஒவ்வொரு ரயத்தினுடைய டிமாண்ட், வசூல், நிலுவை.
(11) ஏரிகளில் இவ்வளவென்று மதித்த ஜலத்தின் பரிமாணத்தையும் அதன் பங்கிட்டையும் தெரிவிக்கும் ஸ்டேட்மெண்ட்.
(12) மழையின் கணக்கு.
(13) விலையின் மாதக்கணக்கு.
(14) கிஸ்திபந்தி கணக்கு.
(15) ஜனனமரண ரெஜிஸ்டர்.
(16) கவர்ன்மெண்ட் நிலங்களின் ரெஜிஸ்டர்.

(17) கிராமத்திலிருக்கும் நிலங்களின் எல்லைகளையும் அடையாளங்களையும் குறிப்பிட்டு, அவை எப்படி உப்யோகப்படுத்தப் படுகின்றன, அதாவது பண்படத்தக்கனவா, பயிரிடப்பட்டனவா, பயிரிடப்படாதனவா, மேய்ச்சல் தரையா, வீடு, தோட்டம், ஆறு, குளம், ஊற்று அல்லது கிணற்றுக்காக ஆளப்பட்டனவா, குன்று, காடு, பாறை, இவற்றினால் தரிசாயிருக்கின்றனவா என்பதைத் தெரிவித்து அந்த நிலங்களின் விஸ்தீர்ணத்தைக்காட்டும் ரெஜிஸ்டர்.

B நமூனா.

1894-ம் வருஷத்திய 2-வது ஆக்டாகிய ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராம ஊழியத்தைக்குறித்த ஆக்ட் 9-வது பிரிவின்படி கிராம உத்தியோகஸ்தர்களையும் ஊழியக்காரர்களையும் நியமித்ததைப்பற்றி டிவிஷனல் ஆபீசருக்கு அனுப்பும் நோட்டீஸ்.

(1) இப்போது பர்த்திசெய்யப்பட்ட காலி அலுவல் 8-வது பிரிவின்படி எதில் ரிபோர்ட் செய்யப்பட்டதோ அந்த கடிதத்தின் தேதியும் நம்பரும்.

(2) காலியான வேலைக்கு நியமிக்கப்பட்ட பேருடைய பெயர்.

(3) இதற்கு முன்னே காயமாய் இருந்த நபருக்கும் நியமிக்கப்பட்டவருக்கும் இன்ன பந்துத்துவமென்பது.

(4) முன்னே காயமாயிருந்த நபருக்கு இன்னும் நெருக்கமான வாரிசுதாரராவதிருக்கிறாரா? அப்படியானால் அவருடைய உரிமை என் உபேட்சை செய்யப்பட்டது?

(5) நியமிக்கப்பட்டவரின் வயதும் ஆண் பெண் என்கிற விவரமும்.

(6) நியமிக்கப்பட்டவர் உத்தியோகத்தின் அலுவல்களைச் செய்வதற்கேற்ற தேகசௌக்கியத்தையும் மனோதிடத்தையும் உடைத்தாயிருக்கிறாரா?

(7) நியமிக்கப்பட்டவர் யாதொரு குற்றத்திற்காக எந்த க்ரிமினல் கோர்ட்டாராலாவது குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டாரா? அப்படியானால் எந்த குற்றத்திற்காக, எப்போது?

(8) இந்த வேலைக்காக வித்தியாசம்பந்தமான பரிட்சைகளில் ஏதாவது ஏற்படுத்தப்பட்டிருந்தால் அவைகளில் நியமிக்கப்பட்டவர் எந்த தேதி அல்லது தேதிகளில் தேறினர்?

(9) நியமிக்கப்பட்டவர் உடைத்தாயிருக்கும் பூஸ்திதி ஏதாவதிருந்தால் அதுவும் அதன் பெருமானமும்.

ஏ. பி.

தேதி. பூஸ்திதிக்குடையவர்.

இடம்.

C நமூனு.

1894-ம் வருஷத்து 2-வது ஆக்டின் 15 (1)-வது பிரிவின்படி கிராம உத்தியோகங்களுக்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட நபர்களின் ஜாப்தா.

(1) கிராமங்கள் அல்லது கிராமங்களின் தொகுதியும், ஏற்பாட்டுக்கு அனுமதிகொடுக்கப்பட்ட போர்டாரின் நடவடிக்கைக் குறிப்பில் கண்ட புதுத்தொகுப்பின் வரிசைக்கிரமமான நம்பரும்.

(2) ஏற்பாட்டுக்கு அனுமதிகொடுக்கப்பட்ட விளம்பரத்தின் நகலை பூஸ்திதிக்குடையவர் பெற்றுக்கொண்ட தேதி

(3) வைத்துக்கொள்ள அனுமதிகொடுக்கப்பட்ட சிப்பந்தி.—பழைய நிர்ணய வீதப்படி.

(4) மேற்படி புதிய நிர்ணய வீதப்படி.

(5) திருத்துப்பாடு செய்யப்பட்ட காலத்தில் கடைசியாக உத்தியோகத்தைக் காயமாக வகித்திருந்தவர்கள்.

(6) 5-வது பாராவில் கண்ட கடைசியாக உத்தியோகத்தை வகித்திருந்தவர்களிலிருந்தாவது கடைசியாக உத்தியோகம் வகித்திருந்தவர்களுடைய குடும்பங்களிலிருந்தாவது மிக உயர்ந்த யோக்கியதையுடையவர்களென்பதன்மேல் தெரிந்தெடுக்கப்பட்ட நபர்கள்.

(7) 5-வது பாராவில் கண்ட கடைசியாக உத்தியோகம் வகித்திருந்தவர்களிலிருந்து தெரிந்தெடுக்கப்படவில்லையானால் நியமிக்கப்பட்டவர்களுக்கும் கடைசியாக உத்தியோகம் வகித்திருந்தவர்களுக்கு முள்ள பந்துத்துவம்.

(8) தெரிந்தெடுக்கப்பட்ட நபர்களின் வயதும் யோக்கியதாம்சங்களும்.

(9) பூஸ்திதிக்குடையவரின் அபிப்பிராயக் குறிப்புகள்.

D நமூனு.

1894-ம் வருஷத்து 2-வது ஆக்டின் 15 (2)-வது பிரிவின்படி கிராம உத்தியோகஸ்தர்களுக்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட நபர்களின் ஜாப்தா.

(1) கிராமங்கள் அல்லது கிராமங்களின் தொகுதியும், ஏற்பாட்டுக்கு அனுமதி கொடுக்கப்பட்ட போர்டாரின் நடவடிக்கைக் குறிப்பில் கண்ட வரிசைக் கிரமமான நம்பரும்.

(2) தெரிந்தெடுக்கவேண்டுமென்று அனுப்பட்ட நோடீஸை பூஸ்திதிக்குடையவர் பெற்றுக்கொண்ட தேதி.

(3) வைத்துக்கொள்ள அனுமதிகொடுக்கப்பட்ட ஸ்பந்தி.—பழைய வீத நிர்ணயப்படி.

(4) மேற்படி புதிய வீத நிர்ணயப்படி.

(5) திருத்துப்பாடு செய்யப்பட்ட காலத்தில் கடைசியாக உத்தியோகத்தைச் சாயமாக வகித்திருந்தவர்கள்.

(6) 5 வது பாராவில் கண்ட கடைசியாக உத்தியோகம் வகித்திருந்தவர்களிலிருந்து மிக உயர்ந்த யோக்கியதை யுடையவர்களென்பதன்மேல் தெரிந்தெடுக்கப்பட்ட நபர்கள்.

(7) தெரிந்தெடுக்கப்பட்ட நபர்களின் வயதும், யோக்கியதாம்சங்களும்.

(8) பூஸ்திதிக்குடையவரின் அபிப்பிராயக் குறிப்புகள்.

II-ம் அனுபந்தம்.

(ப்ராஸெஸ்) கட்டளைக் கட்டணங்களின் வீதம்.

1-வது பிரிவு.

		அணா.
1.	பிரதிவாதிக்காவது அப்பீல் பிரதிவாதிக்காவது ஸம்மன் அல்லது நோடீஸ்	8
	பிரதிவாதியாவது அப்பீல் பிரதிவாதியாவது அதே அயலிடத்தில் குடியிருந்தால், ஏககாலத்தில் விண்ணப்பம் செய்துகொள்ளும் பட்சத்திலே, உடன்சேர்க்கையான ஒவ்வொரு பிரதிவாதிக்காகிலும் அப்பீல் பிரதிவாதிக்காகிலும்	4
2.	சாட்சிக்கு ஸம்மன்	8
	சாக்ஷி அதே அயலிடத்தில் குடியிருந்தால், ஏககாலத்தில் விண்ணப்பம் செய்துகொள்ளும் பட்சத்திலே, உடன்சேர்க்கையான ஒவ்வொரு சாக்ஷிக்கும்	4
3.	சொத்தின் ஸ்வாதீனத்தை ஒப்பிப்பதற்காக வாரன்ட் ...	12
4.	வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்பட்டிராத இஞ்ஜங்க்ஷன், உத்தரவு அல்லது நோடீஸ்	8

II-வது பிரிவு.

கிஸ்தி பாக்கிகளை வசூல்செய்வதற்காக எப்படியோ அப்படியே, பாத்தியதையில்லாமல் அனுபவிக்கப்பட்ட வரும்படியையோ அல்லது செலவுகளையோ அல்லது இசாமான பணத்தொகையையோ வசூல்செய்வதற்காகப் பிறப்பிக்கப்பட்ட ப்ராஸெஸ் என்னும் கட்டளை-

1. அசையும்பொருளை ஜப்திசெய்ய அதிகாரங் கொடுப்பதாக நோட்டீஸ் பிறந்திருந்தபோதிலும், நோட்டீஸ் சேர்ப்பித்தவுடனே வாஸ்தவத்தில் ஜப்திசெய்யாமலிருந்தால் அப்படிப்பட்ட நோட்டீஸ் 4
2. அசையும் பொருள்களை ஜப்திசெய்ய அதிகாரங்கொடுப்பதாக நோட்டீஸ் பிறந்து, அதன்பிரகாரம் வாஸ்தவத்தில் ஜப்திசெய்தால அப்படிப்பட்ட நோட்டீஸ் 8
3. அசையும் பொருளின் விற்பனை 8
4. அசையாப்பொருளை ஜப்திசெய்வதற்கு முன்னதாய்ச் சேர்ப்பிக்கப்பட்ட நோட்டீஸ் 4
5. அசையாப்பொருளை ஜப்திசெய்ய நோட்டீஸ் 8
6. அசையாப்பொருளை விற்பனைசெய்ய நோட்டீஸ் 8

III-வது பிரிவு.

சாக்ஷிகளுக்குப் படியும் பிரயாண வர்த்தனைகளும்.

பிரயாணம் செய்தமார்க்கம். (1)	ஐரோப்பியரும் ஈஸ்டிந்தியரும் 1-ம் வகுப்பு. (2)	2-ம் வகுப்பு (3)	3-ம் வகுப்பு. (4)
பிரயாணவர்த்தனை. ரெயில்மார்க்கமாய்.	1-ம் வகுப்பு சத்தம்.	2-ம் வகுப்புசத்தம்.	3-ம் வகுப்புசத்தம்.
போட் மார்க்கமாய்.	மைலுக்கு 8 அணா.	மைலுக்கு 4 அணா.	மைலுக்கு 2 அணா.
கடல் அல்லது கால்வாய் மார்க்கமாய்.	வாஸ்தவத்தில் பிடிக்கும் பிரயாணச்செலவு.		
படி இ[illegible]டிருப்பதைப்பார்க்கிலும் அதிகப்படக்கூடாது.	ஒரு நாளுக்கு 1½ ரூபாய்.	ஒரு நாளுக்கு 8 அணா.	ஒரு நாளுக்கு 4 அணா.

பிரயாணம்செய்த மார்க்கம்.		சுதேசிகள்.		
		1-ம் வகுப்பு. (5)	2-ம் வகுப்பு. (6)	3-ம் வகுப்பு. (7)
பிரயாணவர்த்தனை.	ரெயில்மார்க்கமாய். ரோட்மார்க்கமாய்.	1-ம் வகுப்பு சத்தம். மைலுக்கு 8 அணா.	2-ம் வகுப்பு சத்தம். மைலுக்கு 2 அணா	3-ம் வகுப்பு சத்தம். 10 மைலுக்கு 2 6 அணா. சாக்ஷி நடக்க முடியாவிட்டால் மைலுக்கு 6 பை.
	கடல் அல்லது கால்வாய் மார்க்கமாய்.	வாஸ்தவத்தில் பிடிக்கும் பிரயாணச் செலவு.		
படி இங்கே கண்டிருப்பதைப் பார்க்கிலும் அதிகப்படக்கூடாது.		ஒரு நாளுக்கு 8 அணா	ஒரு நாளுக்கு 6 அணா	ஒரு நாளுக்கு 3 அணா.

III-ம் அனுபந்தம்.

நமூனாக்கள்.

I.—வியாஜ்ஜியங்களைக்குறித்த் ரெஜிஸ்டர் நமூனா.

(1) வியாஜ்ஜியத்தின் நம்பர், (2) ப்ளெய்ன்ட் கொடுக்கப்பட்ட தேதி, (3) வாதியின் பெயரும் விலாசமும், (4) பிரதிவாதியின் பெயரும் விலாசமும், (5) ப்ளெய்ன்டின் சங்கிரகம்—வியாஜ்ஜியம் எந்த உத்தியோகத்துக்குச் சம்பந்தப்படுகிறது? (6) வியாஜ்ஜியம் உத்தியோகத்தைச் சேர்ந்ததா அல்லது அதன் வருமானத்தைச் சேர்ந்ததா? (7) வியாஜ்ஜியத்தின் முடிவு, (8) டிக்ரியின் தேதி, (9) அப்பீலில் டிக்ரியின் தேதியும் சங்கிரகமும். (10) ஷரா.

II.—அப்பீல்களைக்குறித்த ரெஜிஸ்டர் நமூனா.

(1) அப்பீல் நம்பர், (2) (மெமோராண்டம்) யாதாஸ்து கொடுக்கப்பட்ட தேதி, (3) அப்பீல் வாதியின் பெயர், (4) அப்பீல் பிரதிவாதியின் பெயர், (5) முதல் வியாஜ்ஜியத்தின் நம்பரும் வருஷமும், அப்பீல்செய்யப்பட்ட டிக்ரி அல்லது உத்தரவைச் செய்த கோர்ட்டின் பெயரும், (6) அப்பீலின் சுருக்கமான சங்கிரகம்—அப்பீல் எந்த உத்தியோகத்திற்குச் சம்பந்தப்படுகிறது? (7) அந்த அப்பீல் உத்தியோகத்தைச் சேர்ந்ததா அல்லது அதன் வருமானத்தைச் சேர்ந்ததா? (8) அப்பீல் முடிவு, (9) டிக்ரி தேதி, (10) ஷரா.

III.—ஸம்மன்களைக்குறித்த ரெஜிஸ்டர் நமூனா.

(1) வரிசைக்கிரமமான நம்பர், (2) வியாஜ்ஜியத்தின் நம்பர், (3) ஸம்மன் செய்யப்படவேண்டிய நபரின்பெயர், (4) ஸம்மன் விண்ணப்பத்தின் தேதி (5) படியையும் ப்ராஸெஸ் பீஸ் என்னும் கட்டளைக் கட்டணத்தையும் ஹாஜர் படுத்திய தேதி, (6) ஸம்மன் பிறப்பித்த தேதி, (7) எப்போது திருப்ப அனுப்ப வேண்டுமென்பது, (8) எப்போது சேர்ப்பிக்கப்பட்டதென்பது, (9) படியின் தொகையும் ப்ராஸெஸ் என்னும் கட்டளைக் கட்டணத்தின் தொகையும், (10) ஸம்மன் எவரிடத்தில் ஒப்பிக்கப்படுகிறதோ அந்த நபரின் பெயர், (11) ஷரா.

IV.—டிக்ரிகளை நிறைவேற்றுவதற்கான விண்ணப்பங்களைக்குறித்த ரெஜிஸ்டர் நமூனா.

(1) வரிசைக்கிரமமான நம்பர், (2) விண்ணபபம் வரப்பெற்ற தேதி, (3) டிக்ரி அல்லது உத்தரவின் தேதியும், அது சம்மந்தப்படுகிற வியாஜ்ஜியத்தின் நம்பரும், (4) விண்ணப்பத்தாருடைய பெயர், (5) யார்மேல் டிக்ரியையாவது உத்தரவையாவது நிறைவேற்ற வேண்டுமென்று கேட்கப்படுகிறதோ அந்த நபருடைய பெயர், (6) கோர்ட்டாருடைய உதவி எவ்விதமாக வேண்டியிருக்கிறதோ அந்த விதம், (7) வாரன்ட் முதலானவைகளுக்காக ப்ராஸெஸ் என்னும் கட்டளைக் கட்டணம் விண்ணப்பதாரரால் ஹாஜர் பண்ணப்பட்டதா? எப்பொழுது ஹாஜர் பண்ணப்பட்டது? (8) நிறைவேற்றும்படி கட்டளையிட்டுப் பிறப்பித்த உத்தரவின் தேதி, (9) ஷரா.

V.—வாரண்டுகளையும் இதர ப்ராஸெஸ் என்னும் கட்டளைகளையுங் குறித்த ரெஜிஸ்டர் நமூனா.

(1) நிறைவேற்றுவதற்காகச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பத்தின் நம்பர், (2) பிறப்பிக்கப்பட்ட ப்ராஸெஸ் என்னும் கட்டளையின் விவரம், (3) வசூலான ப்ராஸெஸ் என்னும் கட்டளை கட்டணத் தொகை, (4) எந்த நபரின் மீது ப்ராஸெஸ் என்னும் கட்டளை பிறப்பிக்கப்படுகிறதோ அந்த நபரின் பெயர், (5) எந்த நபரிடத்தில் ப்ராஸெஸ் என்னும் கட்டளை ஒப்பிக்கப்படுகிறதோ அந்த நபரின் பெயர், (6) பிறப்பிக்கப்பட்ட தேதி, (7) திரும்ப அனுப்பவேண்டிய தேதி, (8) திரும்ப அனுப்பிவிட்ட தேதி, (9) ஷரா.

vi.—1895-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து 3-வது ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகளிலே 69-வது விதியின் (a) குறிப்பிட்ட பகுதியின்படிக்கான வாரன்ட்.

(இன்ன இடத்து) கலெக்டருடைய கோர்ட்டிலே.

192 —ம்ஸூத்து —ம் ந. ரெவினியு வியாஜ்ஜியம்.

(இன்ன ஊர்) எ, பி.

எதிரி

(இன்ன ஊர்) வி. டி.

க்கு,

(இன்னாருடைய) வசத்திலிருக்கும் (இன்ன சொத்து) ஷை வியாஜ்ஜியத்தில் வாதியாகிய (இன்னாருக்குச்) சேரவேண்டுமென்று டிக்ரி செய்யப்பட்டிருக்கிறபடியால், ஷை சொத்தை ஷை (இன்னாருடைய) ஸ்வாதீனம் செய்யும்படி உமக்கு இதனால் உத்தரவிடப்படுகிறது; மேலும், இந்த டிக்ரியின்படி நடக்கவேண்டிய யாதொரு நபர் ஷை சொத்தினின்றும் வெளிப்படமாட்டேனென்றால், அவனை அப்புறப்படுத்த இதனால் உமக்கு அதிகாரம் கொடுக்கப்படுகிறது.

192 —ம்ஸூ மீ டயில் என் கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போட்டு கொடுக்கப்பட்டது.

முத்திரை,

கலெக்டர்.

---

vii.—1895-ம்ஸூத்திய சென்னபட்டணத்து 3-வது ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகளிலே 60-வது விதியின் (b) குறிப்பிட்ட பகுதியின்படிக்கான நோடீஸ்.

(இன்ன இடத்து) கலெக்டருடைய கோர்ட்டிலே.

192 -ம்ஸூத்து -ம் ந. ரெவினியு வியாஜ்ஜியம்.

(இன்ன ஊர்) எ. பி.

எதிரி

(இன்ன ஊர்) வி. டி.

க்கு,

மேலே குறிப்பிடப்பட்ட வியாஜ்ஜியத்திலே பிறந்த ஒரு டிக்ரியின்படி, ஜில்லாவிலே, கிராமத்தில், ஸர்வே (அல்லது பைமாஷ்) நம்பருள்ளதாய் உம்முடைய அனுபோகத்திலிருக்கும் நிலத்திற்காகக் கொடுக்கவேண்டிய வாடகைக்கு (அல்லது தீர்வைக்கு) உரியவராக (இன்னார்) தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடியால், மேலே குறிப்பிடப்பட்ட டிக்ரி அல்லது உத்தரவை வைத்துக்கொண்

டிருக்கிறவருக்கு டை வாடகையை (அல்லது தீர்வையை) இதனால் கொடுக்க வேண்டியவராவீர்

192 -ம்ளு மீ உயில் என் கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போட்டுக் கொடுக்கப்பட்டது.

முத்திரை,

கலெக்டர்.

---

xiii.—டிக்ரியை வைத்துக்கொண்டிருக்கிறவரல்லாத இதர நபர்களை, உத்தியோகத்தின் அலுவல்களை நடத்தவாவது அதன்படிக்கான கடமைகளைச்செய்யவாவது அதைச்சேர்ந்த வருமானத்தை வசூல் பண்ணவாவது கூடாதென்று தடுக்கும், 1895-ம்ளுத்திய சென்னபட்டணத்து 3 வது ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகளிலே 60-வது விதியின் (d) குறிப்பிட்ட பகுதியின்படிக்கான நோடீஸ்.

(இன்ன இடத்து) கலெக்டருடைய கோர்ட்டிலே.

192 -ம்ளுத்து -ம் ந. ரெவினியு வியாஜ்ஜியம்.

(இன்ன ஊர்) எ. பி.

எதிரி

(இன்ன ஊர்) வி. டி.

க்கு.

மேலே குறிப்பிடப்பட்ட வியாஜ்ஜியத்திலே பிறந்த ஒரு டிக்ரியின்படி ஜில்லாவிலே, கிராமத்தில், உத்தியோகத்திற்கு அர்ஹராயிருப்பதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடியால், டை உத்தியோகத்தின் அலுவல்களை நடத்தவாவது அதன்படிக்கான கடமைகளைச் செய்யவாவது அதைச்சேர்ந்த வருமானத்தை வசூல் பண்ணவாவது கூடாதென்று இதனால் நீர் தடுக்கப்பட்டிருக்கிறீர் அதாவது,

192 -ம்ளு மீ உயில் என் கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போட்டுக்கொடுக்கப்பட்டது.

முத்திரை,

கலெக்டர்.

---

ix.—எந்த நிலங்களிலிருந்து கிடைக்கும் வாடகை அல்லது தீர்வையானது ஒரு கிராம உத்தியோகத்துக்குரிய வருமானமாகிறதோ அந்த நிலங்களின் அனுபோக பாத்தியதையை வைத்துக்கொண்டிருக்கும் நபருக்கு கொடுக்கப்படும். 1895-ம்வருஷத்திய சென்னபட்டணத்து 3-வது ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகளில் 60-வது விதியின் (d) குறிப்பிட்ட பகுதியின் படிக்கான நோட்டீஸ்.

(இன்ன இடத்து) கலெக்டருடைய கோர்ட்டிலே.

192 -ம்வருஷத்து -ம் நெ. ரெவினியு வியாஜ்ஜியம்.

(இன்ன ஊர்) எ. பி.

எதிரி

(இன்ன ஊர்) வி. டி.

க்கு.

மேற்படி வியாஜ்ஜியத்திலே பிறந்த ஒரு டிக்ரியின்படி, ஜில்லாவிலே, கிராமத்தில் உத்தியோகத்திற்கு அர்ஹராயிருப்பதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடியால், மேலே குறிப்பிடப்பட்ட டிக்ரி அல்லது உத்தரவை வைத்துக்கொண்டிருக்கிற நபருக்கு, அந்த உத்தியோகத்திற்குச் சேர்ந்த உம்முடைய வசத்திலுள்ள நிலங்களுக்கான வாடகை அல்லது தீர்வையை இதனால் நீர் கொடுக்கவேண்டியவராவீர்.

192 -ம்வருஷம் மீ உயில் என் கையெழுத்தும் கோர்ட் முத்திரையும் போட்டுக் கொடுக்கப்பட்டது.

முத்திரை,

கலெக்டர்.

III-A அனுபந்தம்.

1895-ம்வருஷத்து 3-வது ஆக்டின் 6 (1)-வது பிரிவின்படி கிராம உத்தியோகங்களுக்கு நபர்களைத் தெரிந்தெடுப்பதற்காக ரேமக ஜாப்தா.

(1) கிராமங்கள் அல்லது கிராமங்களின் தொகுதியும், ஏற்பாட்டுக்கு அனுமதிகொடுக்கப்பட்ட போர்டாரின் நடவடிக்கைக் குறிப்பில்கண்ட வரிசைக்கிரமமான நம்பரும், (2) வைத்துக்கொள்ள அனுமதிகொடுக்கப்பட்ட சிப்பந்தி—பழைய வீத நிர்ணயப்படி, (3) புதிய வீத நிர்ணயப்படி, (4) திருத்துப்பாடு செய்

யப்பட்ட காலத்தில் உத்தியோகத்தைக் கடைசியாக வகித்திருந்தவர்கள், (5) 4-வது நெம்பரில் கண்ட கடைசியாக உத்தியோகம் வகித்திருந்தவர்களிலிருந்தாவது கடைசியாக உத்தியோகம் வகித்தவர்களுடைய குடும்பங்களிலிருந்தாவது மிக உயர்ந்த யோக்கியதை யுடையவர்க ளென்பதன்மேல் தெரிந்தெடுக்கச் சிபாரிசு செய்யப்பெற்ற நபர்கள், (6) 4-வது நெப்பரில்கண்ட கடைசியாக உத்தியோகம் வகித்திருந்தவர்களுடைய குடும்பங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்படவில்லையானால் நியமிக்கப்பட்டவர்களுக்கும் கடைசியாக உத்தியோகம் வகித்திருந்தவர்களுக்கு முள்ள பந்துத்துவம், (7) தெரிந்தெடுக்கப்பட்ட நபர்கள் 10 (1) வது பிரிவின், (a), (b), (c), (e) என்று குறிப்பிட்டுள்ள பகுதிகளில் சொல்லியபடி யோக்கியதாம்சங்களைப் பெற்றிருக்கிறார்களா? (8) தாசில்தாரருடைய அபிப்பிராயக் குறிப்புகள், (9) டிவிஷனல் ஆபீஸரின் உத்தரவு.

III-B அநுபந்தம்.

1895-ம் ஞூத்து 3-வது ஆக்டின் 6 (2)-வது பிரிவின்படி கிராம உத்தியோகங்களுக்கு நபர்களைத் தெரிந்தெடுப்பதற்காக நேமக ஜாப்தா.

(1) கிராமங்கள் அல்லது கிராமங்களின் தொகுதியும், ஏற்பாட்டுக்கு அநுமதி கொடுக்கப்பட்ட போர்டாரின் நடவடிக்கைக்குறிப்பில் கண்ட வரிசைக்கிரமமான நம்பரும், (2) வைத்துக்கொள்ள அநுமதிகொடுக்கப்பட்ட சிப்பந்தி—பழைய வீத நிர்ணயப்படி, (3) புதிய வீத நிர்ணயப்படி, (4) திருத்துப்பாடு செய்யப்பட்ட காலத்தில் உத்தியோகத்தைக் கடைசியாக வகித்திருந்தவர்கள், (5) 4-வது நம்பரில் கண்ட கடைசியாக உத்தியோகம் வகித்திருந்தவர்களிலிருந்து, மிக உயர்ந்த யோக்கியதை உடையவர்கள் என்பதன்மேல் தெரிந்தெடுக்கச் சிபாரிசு செய்யப்பெற்ற நபர்கள், (6) தெரிந்தெடுக்கப்பட்ட நபர்களின் வயதும் யோக்கியதாம்சங்களும், (7) தாசில்தாரருடைய அபிப்பிராயக் குறிப்புகள், (8) டிவிஷனல் ஆபீஸரின் உத்தரவு.

D-நமூனா.

1894-ம் ஞூத்து 2-வது ஆக்டின் 15 (2)-வது பிரிவின்படி கிராம உத்தியோகஸ்தர்களுக்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட நபர்களின் ஜாப்தா.

(1) கிராமங்கள் அல்லது கிராமங்களின் தொகுதியும், ஏற்பாட்டுக்கு அநுமதிகொடுக்கப்பட்ட போர்டாரின் நடவடிக்கைக் குறிப்பில் கண்ட வரிசைக்கிரமமான நம்பரும், (2) தெரிந்தெடுக்கவேண்டுமென்று அனுப்பப்பட்ட நோடீஸ் பூஸ்திதிக்குடையவர் பெற்றுக்கொண்ட தேதி, (3) வைத்துக்கொள்ள அநுமதி கொடுக்கப்பட்ட சிப்பந்தி— பழைய வீத நிர்ணயப்படி, (4) புதிய வீத நிர்ண

யப்படி,(5) திருத்துப்பாடு செய்யப்பட்டகாலத்தில் கடைசியாக உத்தியோகத்தை காயமாக வகித்திருந்தவர்கள், (6) 5 வது நம்பரில் கண்ட கடைசியாக உத்தியோகம் வகித்திருந்தவர்களிலிருந்து மிக உயர்ந்த யோக்கியதை யுடையவர்களென்ப தன்மேல் தெரிந்தெடுக்கப்பட்ட நபர்கள், (7) தெரிந்தெடுக்கப்பட்ட நபர்களின் வயதும், யோக்கியதாம்சங்களும், (8) பூஸ்திதிக்குடையவரின் அபிப்பிராயக் குறிப்புகள்.

IV-அனுபந்தம்.

கிராம உத்தியோகஸ்தர்களுக்கென்றே ஏற்பட்ட (ஸ்பெஷல் டெஸ்ட்) பரீக்ஷை.

கர்ணம், அஸிஸ்டன்ட் (உதவி) கர்ணம், மணியகாரர், முன்ஸிப் ஆகிய இவர்களுடைய உத்தியோகங்களைப் பெற விரும்புகிறவர்கள் அந்த உத்தியோகங்களுக்கு வேண்டிய யோக்கியதையுடையவர்களாயிருக்கிறார்களா என்று பரீக்ஷிப்பதற்காக வருஷந்தோறும் ஒரு பரீக்ஷை நடத்தப்படும்; அந்தப் பரீக்ஷையானது " கிராம உத்தியோகஸ்தர்களுக்கென்றே ஏற்பட்ட (ஸ்பெஷல் டெஸ்ட்) பரீக்ஷை " என்று சொல்லப்படும்.

" II. யாதொரு நபர் அடியிற்கண்ட வித்தியா சம்பந்தமான பரீக்ஷைகளின் பிரகாரம் யோக்கியதை பெற்றவராயிருந்தாலன்றி மற்றப்படி, அவர்-கர்ணம், பெரியதனக்காரர் அல்லது மணியக்காரர் உத்தியோகத்துக்கு நியமிக்கப்படுவதற்கு அர்ஹராகமாட்டார்; ஷை பரீக்ஷைகள் எவையென்றால் :—

கர்ணம்.

(a) வில்லேஜ் மானுயல் ஆவ் அக்கௌன்ட்ஸ் என்னும் கிராமக் கணக்குகளைக் குறித்த புஸ்தகம்,

(b) கிராம உத்தியோகஸ்தர்களுடைய அதிகாரங்கள் கடமைகள் ஆகிய இவைகளில் கிராம உத்தியோகஸ்தர்களுக்கென்றே ஏற்பட்ட (ஸ்பெஷல் டெஸ்ட்) பரீக்ஷை.

கர்ணம் உத்தியோகத்தைப் பெற விரும்புகிறவர்கள் லாண்ட் ரிகார்ட் (நில தஸ்தவேஜுகள் சம்பந்தமான) சிப்பந்தியைச்சேர்ந்த யாதொரு உத்தியோகஸ்தர்களாகிலும் யாதொரு டிஸ்ட்ரிக்ட் ஸர்வேயராவாகிலும் நடத்தப்படும் யாதொரு கர்ணம் பள்ளிக்கூடத்திலே நிர்ணயிக்கப்பட்ட ஸர்வே பயிற்சி அடைந்திருக்கிறார்களென்றுவது, ஸர்வே உத்தியோகஸ்தரொருவரால் நடத்தப்படும் யாதொரு கர்ணம் பள்ளிக்கூடத்திலே ஸர்வே பரீக்ஷையில் தேறியிருக்கிறார்களென்றுவது காட்டும் ஸெர்டிபிகேட்டுகளை ஹாஜர்ப்படுத்தவேண்டும்.

மணியக்காரர் அல்லது பெரியதனக்காரர்.

(a) கிராம உத்தியோகஸ்தர்களுடைய அதிகாரங்கள், கடமைகள்,

(b) கிராம சுகாதாரம்

ஆகிய இவைகளில் கிராம உத்தியோகஸ்தர்களுக்கென்றே ஏற்பட்ட (ஸ்பெஷல் டெஸ்ட்) பரீக்ஷையாவது,

உத்தியோகம் பெற விரும்புகிறவர் கிராம பெரியதனக்காரரின் அலுவல்களைச் செய்ய போதுமான கல்விப்பயிற்சி அடைந்திருக்கிறாரென்று டிவிஷனல் ஆபீஸர் தாம் திருப்தியடையும்பொருட்டு நிர்ணயிக்கக்கூடிய வாய்மொழியான பரீக்ஷையாவது கொடுத்திருக்கவேண்டும்.

குறிப்பு.—வில்லேஜ் மானுயல் ஆவ் அக்கௌன்ட்ஸ் என்னும் கிராமக் கணக்குகளைக்குறித்த புஸ்தகத்தில் நடக்கும் பரீட்சையிலே புஸ்தகங்களை உபயோகித்துக்கொள்ள அனுமதிகொடுக்கப்படும்.

III. டை பரீக்ஷைக்கு வருபவர்கள் செலுத்தவேண்டிய பிரவேச கட்டணமானது - பிரஸ்தாப டிஸ்ட்ரிக்டிலே கவர்ன்மெண்ட் கிராமங்களிலாகிலும் சரி ஒருவருக்கே யுரிய கிராமங்களிலாகிலும் சரி, உத்தியோகத்தை வகிக்கிற கர்ணங்கள், அஸிஸ்டன்ட் கர்ணங்கள், ரெட்டிகள் அல்லது முன்ஸிப்களுடைய குடும்பங்களைச் சேர்ந்த எல்லாருடைய விஷயத்திலும் 12 அணாவும், மற்ற எல்லாருடைய விஷயத்திலும் 4 ரூபாயும் ஆகும். கிராம உத்தியோகஸ்தர்களுடைய குடும்பங்களைச் சேர்ந்தவர்களென்றும் குறைந்த வீதப்படி கட்டணம் செலுத்த உரிமையுள்ளவர்களென்றும் சொல்லிக் கொள்ளுகிற விண்ணப்பதாரர்கள் - தாலூகா தாசில்தாருக்காவது டிவிஷன் டெப்யுடி தாசில்தாருக்காவது முதலில் மனுபண்ணிக்கொள்ள வேண்டும்; இவர் கிரமமாய் விசாரணை செய்த பிறகு, விண்ணப்பதாரரின் பந்துவான உத்தியோகஸ்தரின் பெயரையும் (அவரிருக்கும்) கிராமத்தின் பெயரையும் கண்டெழுதி ஒரு ஸெர்டிபிகேட் கொடுப்பார். இந்த ஸெர்டிபிகேட்டை கட்டணத்தோடுகூட சஜாஞ உத்தியோகஸ்தர் முன்பாக ஹாஜர்ப்படுத்தவேண்டும். பந்துத்துவம் உண்டா இல்லையா என்பதைப்பற்றியாகிலும் இவ்வளவுமட்டிலே பந்துத்துவம் இருக்கிறதென்பதையாகிலும் யாதொரு சந்தேகம் அல்லது விவாதம் நேரிடுமானால், அந்த விஷயத்தைக்குறித்து டிவிஷனல் ஆபீஸர் செய்கிற தீர்மானம் முடிவானதாகும்.

டை பிரவேச கட்டணமானது-மேலே II-வது பிரிவில் சொல்லப்பட்ட பாட விஷயங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு பரீக்ஷைகளுக்காகும்: பரீக்ஷைக்கு வர விரும்புகிறவர் குறித்த எந்த ஸ்பெஷல் டெஸ்டில் பரீக்ஷிக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறாரோ, அதற்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் பாட விஷயங்கள் இரண்டிலுமாவது எதாவதொன்றிலாவது சேரத் தவறிவிட்டால்.

இன்னும் கட்டணம் செலுத்தாமலே அப்படிப்பட்ட பாட விஷயம் அல்லது பாட விஷயங்களில் பிற்பாடு ஒரு தடவை பரீக்ஷைக்கு வர அவருக்கு அனுமதி கொடுக்கப்படும். கிராம உத்தியோகஸ்தர்களுக்கென்றே ஏற்பட்ட ஸ்பெஷல் டெஸ்ட் பரீக்ஷைக்கு வர விரும்புகிறவர்கள் பரீக்ஷைக்கு வர அனுமதிவேண்டுமென்று செய்துகொள்ளும் விண்ணப்பங்கள் யாதொரு காரணத்தைக்கொண்டு தள்ளிவிடப்பட்டால், அப்படிப்பட்டவர்கள் செலுத்தியிருக்கும் பிரவேச கட்டணங்களும், பரீக்ஷைக்கு வர விரும்புகிறவரிடமிருந்து சேரவேண்டிய பிரவேச கட்டணத்தொகைக்கு அதிகமாக வசூலிக்கப்பட்ட யாதொரு தொகையும், விண்ணப்பம் செய்துகொள்ளப்படுவதன்மேல், அவர்களுக்கு வாபஸ்செய்யப்படும்.

iv. பரீக்ஷை தனித்தனியே ஒவ்வொரு ஜில்லாவிலும் நடத்தப்படும்; மேலும், அது முழுவதும் கலெக்டருடைய விசாரணைக்குட்பட்டிருக்கும், பரீக்ஷைக்கு வந்திருப்பவர் அது நடக்கும்பொழுது துன்மார்க்கமாய் நடந்துகொண்டால், அவரைக் கலெக்டர் நிலையாகவாவது சில வருஷங்களுக்காவது இந்த பரீக்ஷைகளுக்கு வரக்கூடாதென்று தடுத்து விடலாம்.

v. மேற்படி பரீக்ஷைகள் ஒவ்வொரு டிவிஷனல் ஆபீஸரின் ஹெட்க்வார்டர் (ஆபீஸ் தலைமை) ஸ்தானத்திலும், அவருடைய மேல் விசாரணைக்குட்பட்டும், டிஸ்ட்ரிக்ட் கெஜெட்டில் விளம்பர மூலமாகக் கலெக்டர் தெரிவிக்கிற காலத்திலே ஜில்லா முழுமையிலும் ஒரே சமயத்தில் வருஷத்துக்கொருமுறை நடத்தப்படும்.

(vi) பரீக்ஷைக்கு வர விரும்புகிறவர்கள் வேறே யாதொரு இடத்திலே ஹாஜராகலாமென்று அவர்களுக்கு டிவிஷனல் ஆபீஸர் அனுமதி கொடுத்தாலன்றி மற்றப்படி அவர்கள் எந்த டிவிஷனைச் சேர்ந்தவர்களோ அந்த டிவிஷன் ஹெட்க்வார்ட்டர் ஸ்தானத்தில்தான் பரீக்ஷைக்கு ஹாஜராகவேண்டும்.

(vii) பாட விஷயங்கள் எல்லாவற்றிலும் பரீக்ஷை எழுத்து மூலமாக நடத்தப்படும்; மேலும், அது அந்தந்த ஜில்லாவின் சுதேச பாஷையில் நடத்தப்படும். ஒவ்வொரு பாடவிஷயத்துக்காகவும் ஜில்லா முழுமைக்கும் ஒரே தொகுப்பு கேள்விகள் கேட்கப்படும்; கலெக்டரால் நியமிக்கப்படும் உத்தியோகஸ்தர் அல்லது உத்தியோகஸ்தர்கள் மேற்படி கேள்விகளைச் சித்தம் செய்து (விடைகளை) மதிப்பிடவேண்டும்.

(viii) ஒவ்வொரு பாட விஷயத்துக்காகவும் ஏற்பட்டுள்ள (மொத்த) மார்க்கிலே (எண்ணிலே) குறைந்த பக்ஷம் மூன்றிலொரு பங்காவது வாங்கினாலொழிய பரீக்ஷைக்கு வந்தவரெவரும் பரீக்ஷையில் தேறினவராக எண்ணப்படமாட்டார்; ஆனால் பரீக்ஷைக்கு வருகிறவர்கள் (ஒவ்வொரு பாடவிஷயத்துக்கும் ஒவ்வொரு தடவையாக) தனித்தனி தவணையாய்ப் பரீக்ஷைக்குவர அனுமதி கொடுக்கப்படும்.

(ix) பரீக்ஷை முடிந்தபிறகு கூடிய சீக்கிரத்திலே, கலெக்டரானவர் – பரீக்ஷையில் தேறினவர்கள் வாங்கிய மார்க் வரிசைக் கிரமப்படி அவர்களைக் குறித்த ஜாபிதாவை டிஸ்ட்ரிக்ட் கெஜட்டில் பிரசுரிப்பார்

x. டிவிஷனல் ஆபீஸரால் கையெழுத்து செய்யப்பட்ட ஸெர்டிபிகேட்டுகள் பரீக்ஷையில் தேறினவர்களுக்கு கொடுக்கப்படும்; பரீக்ஷைக்கு வந்தவர் இன்னார்தானென்று நபரடையாளம் ஸ்திரமாய்த் தெரிவதற்கு அவரைப்பற்றிப் போதுமான விவரம் ௸ ஸெர்டிபிகேட்டுகளில் அடங்கியிருக்கவேண்டும். அப்படிப்பட்ட யாதொரு ஸெர்டிபிகேட்டின் அசல் பிரதி காணாமற்போய்விட்டதென்று டிவிஷனல் ஆபீஸர் தெரிந்து திருப்தியடைந்தால், ஒவ்வொரு விஷயத்திலும் ஒரு ரூபாய் கட்டணம் செலுத்தப்படுவதன்மேல், அதற்கு ஒரு நகல் பிரதியை எப்போதாகிலும் கொடுக்கலாம். ஆனால், விண்ணப்பதாரரால் தடுக்கமுடியாத காரணங்களினால் மேலேகண்டபடி (அசல் பிரதி) காணாமற்போய்விட்டதென்று டிவிஷனல் ஆபீஸர் அபிப்பிராயப்படுகிற பக்ஷத்திலே, அவர் ௸ கட்டணத்தை வஜாசெய்து விடலாம்.

xi. பரீக்ஷைக்கு ஹாஜராக அநுமதிவேண்டுமென்று செய்துகொள்ளப்படுகிற விண்ணப்பங்களை பரீக்ஷை எந்தத் தேதியில் நடக்குமென்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறதோ அந்தத் தேதிக்குக் குறைந்தது ஒருமாதமாவது முன்னதாய், நிர்ணயிக்கப்பட்ட நமூனாப்படி (எழுதி) டிவிஷனல் ஆபீஸருக்கு அனுப்பவேண்டும்; மேலும், இந்த விளம்பரத்தின் III வது பிரிவிலே நிர்ணயித்துள்ள கட்டணம் செலுத்தியதற்காக யாதொரு கஜானா உத்தியோகஸ்தரால் கொடுக்கப்பட்ட ரசீதையும், செலுத்திய கட்டணம் 12 அணாவாயிருந்தால் பந்துத்துவத்தைப்பற்றி தாசில்தாரராலாவது டெப்புடி தாசில்தாரராலாவது கொடுக்கப்பட்ட ஸெர்டிபிகேட்டையும் ௸ விண்ணப்பங்களுடனே அனுப்பவேண்டும்.

பரீக்ஷைக்கு வருபவர்கள் இந்த ஸெர்டிபிகேட்டைப் பெறும்பொருட்டு உத்தரவு கடிதங்கள் வேண்டுமென்று தாலூகா தாசில்தாருக்காவது டிவிஷன் டெப்புடி தாசில்தாருக்காவது விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும்; அதன்மேல், அவர் விண்ணப்பத்தில் கண்ட விஷயம் வாஸ்தவமானதுதானா என்பதைப்பற்றி கிரமமாய் விசாரணை செய்தபிறகு ௸ உத்தரவு கடிதத்தைக்கொடுக்கவேண்டும்

xii. இந்தப் பரீக்ஷைக்காகச் செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு விண்ணப்பத்தோடுங்கூட, அம்மை குத்திக்கொண்டதைப்பற்றி ஹாஸ்பிடல் அஸிஸ்டெண்டின் அந்தஸ்துக்குக் குறைவுபடாத அந்தஸ்துள்ள ஒரு மெடிகல் ஸபார்டினேட் (வைத்தியக் கீழ் உத்தியோகஸ்தர்) அல்லது மெடிகல் ஆபீஸராலாவது, வாக்ஸினேஷன் டெப்யுடி இன்ஸ்பெக்டராலாவது கொடுக்கப்பட்ட ஸெர்டிபிகேட்டுகளை ஹாஜர்படுத்தியிருக்கிறவர்கள் - அவைகளை இரண்டாவது தடவை ஹாஜர்படுத்தவேண்டியதில்லை.

xiii. கஞ்சம், விசாகப்பட்டணம், கோதாவரி ஆகிய இவ்விடங்களிலுள்ள ஷெட்யூலிற்கண்ட டிஸ்ட்ரிக்டுகள் நீங்கலாக இந்த ப்ரெஸிடென்ஸி முழுமைக்கும் இந்த விளம்பரம் வியாபிக்கவேண்டும்.

xiv. வேறேவிதமாய் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி இந்த விளம்பரத்திலடங்கிய விதிகள்—ஜமீன்தாரிகளிலுள்ள எந்தக்கிராம உத்தியோகஸ்தர்களுக்காவது, 1898-ம் ஜூலைமீ 1உயிலே உத்தியோகத்திலிருந்த எந்த கிராம உத்தியோகஸ்தர்களுக்காவது, அவர்களுடைய வாரிசுதாரர்கள் அந்தத் தேதியிலே பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களாயிருந்து, அவர்களுடைய பெயர்கள் அவர்களுடைய டிவிஷனல் ஆபீஸர்களின் ஆபீஸில் 1897 ம் ஜூலைமீ 1உயிலாகிலும் அதற்கு முன்னேயாகிலும் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தால் அவர்களுக்காவது பிரயோகப்படுவதில்லை. ஆனால், மேற்கண்டவர்கள் தவிர மற்ற எந்த நபரும் இந்த விளம்பரத்தின் II வது பிரிவிலே நிர்ணயித்திருக்கிற பரீக்ஷையில் தேறியிருந்தாலன்றி மற்றப்படி, கர்ணம், மணியக்காரர் அல்லது முன்ஸிப் உத்தியோகத்துக்கு நியமிக்கப்படமாட்டார்.

IV-A அனுபந்தம்.

ஸர்வே பள்ளிக்கூடங்களில் பயிற்சி அடைந்துவரும் கர்ணங்களுக்கு பிரயாண வர்த்தனை கொடுப்பதற்காக கற்பனைகள்.

1905-ம் பெப்ரவரிமீ 4உ (ஸெடில்மென்ட் இலாகாவில்) பிறந்த 33 ம் நெ. போர்ட் ப்ரொஸீடிங்குகளின் படியாவது, 1906ம் ஆகஸ்டுமீ 31உ (ஸெட்டில்மென்ட் இலாகாவில்) பிறந்த 321-ம் நெ. போர்ட் ப்ரொஸீடிங்குகளின் படியாவது நடத்தப்பட்டுவரும் யாதொரு ஸர்வே வகுப்புக்கு முதல் தடவையாக வந்திருக்கும் யாதொரு கர்ணத்துக்கு, பயிற்சி யடைந்துவரும் காலத்தில் ஒவ்வொரு தினத்துக்கும், மலையாளம், அன்ஜெங்கோ, தென்கன்னடம், நீலகிரி இந்த இடங்களில் நாலணாவுக்கு மேற்படாமலும், ஜில்லா கலெக்டரால் நிஷ்கரிஷை செய்யப்படும் அன்றுட வர்த்தனை கொடுக்கவேண்டும்; ஆனால், இந்த வகுப்பு நடத்தப்படும் இடமானது - கர்ணம் சாதாரணமாய் வாசஞ்செய்யும் கிராமத்திலிருந்து ஐந்து மைலுக்கு அதிகமான தூரத்தில் இருக்கவேண்டும். அவர் தம்முடைய பயிற்சி சம்பந்தமாய்ச் செய்யும் ரெயில் பிரயாணங்களுக்காக வாஸ்தவமான (ரெயில்வே) கட்டணமும் அவருக்குக் கொடுக்கப்படும் ; ஆனால், ஸர்வே பள்ளிக்கூடம் யார் விசாரணையின்கீழ் இருக்கிறதோ அந்த ஆபீஸரின் உத்தரவின்படியாவது அவருடைய அங்கீகாரத்தின்மேலாவது டி பிரயாணம் செய்யப்படவேண்டும்.

விவரணம்.—டிவிஷனல் ஆபீஸரின் அனுமதிபெற்று இரண்டாந்தரம் ஸர்வே வகுப்புக்கு வந்திருக்கும் யாதொரு கர்ணம்-எவ்வித அன்றுட வர்த்தனையாவது ரெயில்வே கட்டணமாவது பெற அர்ஹனல்ல.

2. அதிகாரம் பெற்றுகிலுஞ்சரி அதிகாரம் பெருமலாகிலுஞ்சரி கர்ணம் வகுப்புக்கு வாாமலிருக்கும் தினங்களுக்கு 1-வது விதியின்படி வர்த்தனை கொடுக்கப்படமாட்டாது.

விவரணம்.—யாதொரு தினத்தில் ஒருமணிநேரமாகிலும் அதற்கு மேற்பட்டாகிலும் காலங்கழித்து வந்தால், அது இந்த விதியின் காரியத்துக்காக அந்த தினத்தில் வகுப்புக்கு வாாததாகவே எண்ணப்படும்.

3. கலெக்டர் நிர்ணயிக்கும் வகுப்புகளிலும் அவர் நிர்ணயிக்கும் நமூனப்படியும் (இன்ஸ்பெக்டர் அல்லது டெப்யுடி ஸர்வேயருடைய அந்தஸ்துக்குக் கீழ்ப்பட்ட அந்தஸ்துடையவராயிராமல்) கலெக்டர் நிர்ணயிக்கும் உத்தியோகஸ்தராலும் அட்டெண்டென்ஸ் ரெஜிஸ்டர் வைத்துவரப்படும்.

ஸர்வே வகுப்புக்கு வந்திருக்கும் கர்ணங்களுக்கு இந்த விதிகளின்படி கொடுக்கக்கூடிய தொகைகளை, இந்த வகுப்பு முடிவாகுங் காலத்திலே, தாசில்தாருடைய அந்தஸ்துக்குக் கீழ்ப்படாத ஒரு உத்தியோகஸ்தரின் முன்னிலையில் அவர்களிடமிருந்து ரசீது பெற்றுக்கொண்டு அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

குறிப்பு.—ஸர்வே செய்யப்படாத ஒருவருக்கேயுரிய ஜுஸ்திதிகளில் வேலையாயிருக்கும் கர்ணங்களுக்கு ஸர்வே பயிற்சி கட்டாயமில்லை. ஆகையால் இந்த விதிகள் அவர்களுக்குப் பிரயோகப்படமாட்டா பயிற்சியடைவதற்காகத் தங்களைச் சேர்த்துக்கொள்ளும்படி அவர்கள் விரும்பினால், ஸர்க்கார் சம்பந்தமில்லாமல் அந்தப்பள்ளிக்கூடத்தில் சேர்ந்திருப்பவர்களைப்போலவே அவர்களை பாவித்து நிர்ணயிக்கப்பட்ட சம்பளத்தைக் கட்டும்படி அவர்களுக்கு உத்தரவு செய்யவேண்டும்.

தமிழ்ச்சட்ட புஸ்தகங்கள்.

	ரூ.	அ
ஸ்டாம்பு, ரெஜிஸ்ட்ரேஷன் பலவிதபத்திரங்கள் எழுதும் மாதிரிகள் அடங்கிய விவகாரசிந்தாமணி	2	8
உயில் பாகம், வார்சுபாத்தியம் ஸ்திரீதன முதலியதுள்ள பெரிய ஹிந்துலா	2	0
சிவில் விவகாரம் பூர்த்தியாயடங்கிய சிவில் லா	3	0
போலீஸ் மாஜிஸ்ட்ரேட்சம்பந்தமான க்ரிமினல் லா ...	3	0
புது கிராமமுனிசிப் சட்டம் ..	1	8
கிராம பஞ்சாயத்து சட்டம் ...	1	4
லோகல் போர்ட் ஆக்ட் ...	1	8
குற்றசம்பந்தமான இந்தியன் பீனல் கோட்	3	0
எவிடன்ஸ் ஆக்ட்	1	0
ஹிந்து தர்மஸ்தாபன சட்டம்...	1	0
டிரஸ்ட்டி ஆக்ட்	0	10
கிராம சுகாதாரம்	0	2
நில ஆக்கிரமிப்பு சட்டம் ...	0	4
கால நிர்ணய ஆக்ட் ...	0	6
புதிய ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்	0	10
பரம்பரைகிராமஉத்தியோக ஆக்ட்	1	0
புது இன்கம்டாக்ஸ் சட்டம் ...	1	0
புதிய ஸ்டாம்பாக்ட் ...	0	10

தமிழ் நாவல்கள்.

	ரூ.	அ
இராஜாமணி	0	8
வனமாலிகா	0	8
ஜயதேவன்	0	8
பத்மநாபன்	0	8
கிருஷ்ணதீட்சதர் ...	0	8
பிரதாபசிங்	0	8
ரனிஞ்ஜி	0	5
பாஸ்கரன்	0	10
சத்தியவிஜயன்	0	10
நடுவேனிற்கனவு	0	8
பக்தசந்திரிகா	0	10
இரத்தினவிமானம் ...	0	14
தாரு ககாசவம்	0	14
நளாகினி விஜயம் ...	0	14
சோமகாந்தன்	0	10
சுசீலா	0	10
நூர்ஜிகான் என்னும் ராணியின் சரித்திரம்	0	4
மோகனசுந்தரி	0	4
ஹிந்துமதப்பிரசங்கம் ...	0	2
நெப்போலியன் சரித்திரம் ...	0	2
இல்லறமா? துறவறமா? ...	0	1
மகாமக மகாத்மியம் ...	0	2
இரதிசாஸ்திரம் படங்களுடன்.	1	4
15 விரதமடங்கிய விரதகல்பம்	0	8
டை உயர்ந்த பதிப்பு ...	0	12

கிராமக் கோர்ட்டுகளுக்கு வேண்டிய பாரங்கள்.

		ரூ.	அ
பிரதிவாதி சம்மன்	100-க்கு	0	10
சாட்சி சம்மன்	100-க்கு	0	10
கிரிமினல்சாட்சிசம்மன்	100-க்கு	0	10
குற்றவாளி சம்மன்	100-க்கு	0	10
டை பிடிவாரண்டு	100-க்கு	0	10
டிக்கிரிநிறைவேற்ற ஆட்சேபணை செய்யப் பிரதிவாதிக்கு நோட்டீசு	100-க்கு	0	10
பஞ்சாயத்தாருக்கு நோ.	„	0	10
கிரிமினல் வாதிக்கு மறு சாங்கி நோட்டீசு	100-க்கு	0	10
டை சிவில்	100-க்கு	0	10
முச்சலிக்கா பாரம்	100-க்கு	0	10
ஜப்தி கட்டளை பாரம்	100-க்கு	0	10
பிராதுபினையிண்டுபாரம்	50-க்கு	0	10
சம்மதி உடன்படிக்கை	50-க்கு	0	10
நிறைவேற்ற மனுபாரம்	50-க்கு	0	10
கியாலண்டர் (பாரம்)	50-க்கு	0	10
வாக்குமூல பாரம்	50-க்கு	0	10
நகல் மனுபாரம்	50-க்கு	0	10
வல இஸ்தியார்	50-க்கு	0	10
கிரிமினல் கேஸ்டாகெட்	50-க்கு	0	10
சிவில் கேஸ் „	50-க்கு	0	10
சிவில் டிக்ரிபாரம்	50-க்கு	1	4
கைசாத்து புக் சிறியது	1-க்கு	0	½
டை	100-க்கு	2	8
டை ராப்பர் 50-பக்கம்	1-க்கு	0	3
டை கெட்டி பைண்டு	1-க்கு	0	4
டை டை 100-பக்கம்	1-க்கு	0	8

மதுகரவேணி விலாசம் புத்தகசாலை, வேபேரி—மதருஸ்.